

கல்கி
KALKI
6.9.1970
40 காசு
கணேசன்


பாருங்கள்...வித்தியாசத்தை!
வெண்மை பளிச்சிடச் செய்வதில் இணையற்றது டினோபால்!
CLEARANCE
LAST AIR
Tinopal
விளைவுகளே கூறுகின்றன! துவைத்த துணிகளை அலசுவதற்குமுன் வாளியிலுள்ள தண்ணீரில் சிறிதளவு டினோபால் சேர்க்கவும். பிறகு பாருங்கள் சலவையின் வெண்மை எப்படிப் பளிச்சிடுகிறது என்று! சட்டை, புடவை, படுக்கை விரிப்பு, டவல் எல்லாமேதான்!
இத்தனைக்கும் ஆகும் செலவு, துணிக்கு ஒரு பைசாவுக்கும் குறைவு! டினோபால் வாங்குங்கள். ரெகுலர் பாக், எகானமி பாக் மற்றும் ஒரு வாளித் துணிக்கு ஒரு பாக்கெட் ஆகிய மூன்று அளவுகளில் கிடைக்கிறது.
டினோபால் என்ற பெயர் ஜே.ஆர்.கெய்கி எஸ்.ஏ. பாஸ் ஸ்விட்ஸர்லாந்து நிறுவனத்தாரின் ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க் ஆகும்.
சுஹ்ரித் கெய்கி லிமிடெட், த.பெ. 11050, பம்பாய்-20 BR.
Shilpi HPMA 12A/78 Tam


சென்னை:
வெலிங்டன் - பிரபாத் - ராக்ஸி
லிபர்ட்டி - தமிழ்நாடு
(மற்றும் தென்னாடெங்கும்)
ஏவிஎம் புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
முத்துவேல் மூவிஸ்
அனாதை ஆனந்தன்
வண்ணச்சித்திரம்
இயக்குநர் கிருஷ்ணன் பஞ்சு
இசை: K.V. மகாதேவன்
பாடல்கள்: கண்ணதாசன்
வசனம்: குகநாதன்
கலை: A.K. சேகர்
ஒளிப்பதிவு: S. மாருதிராவ்
தயாரிப்பு: P.K.V. சங்கரன் ஆறுமுகம்
AVM PRODUCTIONS

கல்கி பொருளடக்கம்

சாதாரண, ஆவணி 21 :: 1970, செப்டம்பர் 6

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை(இலங்கைநாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00

மலர் 30

இதழ் 6

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்



மக்களோடு மக்களாக

இதைப் படிக்கும் கல்வியறிவுள்ள ஆண், பெண்களே! உங்களுக்கு நம் நாட்டின் பொதுமக்களிடம் அன்பு உள்ளதா? நம் நகரங்களிலும் கிராமங்களிலும் நெரிசலாக வாழும் ஆண்களையும் பெண்களையும் நீங்கள் நேசிக்கிறீர்களா? அவர்கள் பேசும் மொழிகளிடம் உங்களுக்கு அன்பு இருக்கிறதா? அம்மக்களின் பழக்கவழக்கங்களை நீங்கள் பிரியமுடன் பார்க்கிறீர்களா? அவர்கள் பின்பற்றும் சமயத்திடம் அன்பு வைக்கிறீர்களா? அந்தச் சமய உணர்வு அறியாமையல்ல, அது உங்களது அறிவை விடச் சிறந்த ஞானம் என்று உணர்கிறீர்களா? இவ்விதமாக நம் மக்களிடமும், அவர்களது மொழிகளிடமும், பழக்க வழக்கங்களிடமும், சமயத்திடமும் நீங்கள் பற்றுக் கொண்டிருந்தால் இதுவே மொத்தத்தில் தேசப் பற்றாகும்.

இப்படி நான் சொல்வதால், நான் ஒரு பிற்போக்குவாதி எனத் தோன்றும். ஆனாலும் என்னைப் பற்றி நம்பிக்கை இழக்கும் அளவுக்கு நான் பிற்போக்குவாதியல்ல. ஏனெனில், நம் மக்களிடம் உள்ள போற்றுதலுக்குரிய குணங்களை நான் காண்பது மட்டுமின்றி, அவர்களிடமுள்ள தோஷங்களையும் காண்கிறேன். பொதுவாக, நம் மக்கள் எது எப்படிப் போனால் என்ன என்று உதாசினமாக இருப்பதைக் கண்டு நான் வருந்துகிறேன். இப்போதிருப்பதைவிட அவர்கள் பல விஷயங்களில் அதிக ஊக்கம் காட்ட வேண்டும்; தங்களுக்கிடையே பரஸ்பரம் மேலும் சகிப்புத் தன்மையும் அன்பும் காட்டிக் கொள்ள வேண்டும்; பொதுநோக்கங்களுக்காகக் கூடி உழைப்பதில் மேலும் ஆற்றல் பெற வேண்டும்—என்றெல்லாம் விரு கிறேன்.

மாட்டு வண்டி எனக்குப் பிடிக்கிறது, ரொம்பவும் பிடிக்கிறது. ஆயினும் நாட்டின் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரை ஓடும் ரயில் வண்டிகளை அகற்ற நான் விரும்பவில்லை. நம் மக்கள் பேசும் அழகு மொழிகளை நான் தீவிரமாக நேசிக்கிறேன். ஆனால் நம்மை நாள்தோறும் மேலும் மேலும் நெருக்கமாக இணைக்கும் ஆங்கில மொழியை விட்டுவிட நான் விரும்பவில்லை. நம் மக்களது மகத்தான சமயத்திடம் நான் அன்பு வைத்திருக்கிறேன். அதில் பல அற்புதமான பிரிவுகள் இருப்பினும், அடிப்படையில் அவற்றிடை முரண்பாடு இல்லை என்றும், அவை மொத்தத்தில் ஓர் அழகிய, அறிவு சார்ந்த பூரணத்தையே உருவாக்குகின்றன என்றும் காண்கிறேன். ஆயினும் இது காரணமாக நான் பௌதிக உண்மைகளை ஆராயும் ஸயன்ஸையும், நிரந்தர சத்தியத்தை ஆராயும் தத்துவ விசாரத்தையும் விட்டுவிட வேண்டும் எனக் கருதவில்லை. அதே சமயத்தில், சமூகத்தின் உயர் வர்க்கங்களில் இருப்பவர்களும் பொதுமக்களைப் போலவே ஆலயங்களுக்குப் போக வேண்டும், தம்மைச் சுற்றி உள்ளவர்களிடம் உண்மையுடனும் ஒப்புரவுடனும் நடப்பதற்கான உறுதியைத் தினமும் பிரார்த்தனை மூலம் கெட்டிப்படுத்திக் கொள்ள வேண்டும் என விரும்புகிறேன். இவ்வாறெல்லாம் செய்யாவிடில், சமூகத்தில் உயர் நிலையில் உள்ளவர்கள் பொது மக்களிடமிருந்து விலகிச் சென்று விடுவர். அதன் பின் அவர்கள் தங்கள் நலனுக்கும் பணி புரிய முடியாது, பொது மக்களின் நலனுக்கும் பணி புரிய இயலாது.

['ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது.]

ராஜாஜியின் கருத்துக்கள்

தேசியக் கொடியில் ராஜ்யத்துக்கெனத் தனியாக ஓர் அடையாளம் பதிக்கலாம் என்றோ, அல்லது ராஜ்யத்துக்கெனத் தனிக் கொடி வைத்துக்கொண்டு அதில் தேசியக் கொடியின் அடையாளத்தை உள்ளடக்கலாம் என்றோ கூறப்படும் யோசனை பற்றி சித்தாந்த ரீதியில் சமாதானம் கூறலாம்; ஆட்சேபணைகளும் எழுப்பலாம். அவை எப்படியாயினும் நிகழ்கால நிலவரத்துக்கு இது பொருந்துமா என்று பார்க்க வேண்டியதே முக்கியம். தற்போது ராஜ்யங்களுக்கிடையே ஏகப்பட்ட தகராறுகள் தீர்க்கப்படாமல் உள்ளன. இந்தச் சூழலில் கொடிகளை வேறு புதிதாகச் சேர்த்துவிட்டால் அது மிக அறிவீனமாகும். ஆங்காங்கு பல 'சேனை'கள் இருக்கையில் தனிக் கொடியும் ஏற்பட்டால், இப்போதுள்ள தகராறுகள் போர்க்கோலம் பூணுவதற்கே ஊக்கம் தந்ததாகும். இதுவே என் முடிவு. நடைமுறைக் கோணத்தில் தனிக் கொடி யோசனை சிறிதும் அவசியமற்றது. மற்றக் கட்சிகளைக் காட்டிலும் அதிகமாகத் தாங்கள் ஏதோ செய்து விட்டதாக மதிப்புப் பெறுவதற்கே இந்தத் தனிக்கொடி யோசனை. அமைதியும், பரஸ்பர ஒற்றுமையுமே நாட்டுக்கு முக்கியம்; தனிக் கொடிகள் அல்ல.

*

அநாதி காலமாக நம் மக்களிடை மகாத்மாக்கள் தோன்றி வருகின்றனர். சமீபத்தில் கடந்த நூற்றாண்டில் மூன்று மகா மனிதர்கள் தோன்றினர். இவர்கள் நமது கோவில் பிராகாரங்களைப் போல் விசாலமான அறிவுடன், நம் கோவில் கோபுரங்களைப் போல் உன்னதமாக நின்றனர். இந்தக் கோபுரங்களில் முதல்வர் ஸ்வாமி விவேகானந்தர்; பிறகு லோகமான்ய பாலகங்காதர திலகர் வந்தார்; அதன் பின் 'மகாத்மா' எனப் பொருத்தமுடன் அழைக்கப்பட்ட மோஹன தாஸ் கரம்சந்திர காந்தி தோன்றினார். இவர்கள் தங்களுக்கெனப் பிறர் ஞாபகார்த்தம் எழுப்புவதற்கு அவசியம் இல்லாமல், தாங்கள் செய்த பணியாலும், தாங்கள் மக்களுக்கு அளித்த உத்வேகத்தாலுமே நினைவுச் சின்னம் கொண்டுள்ளனர்.


இவர்கள் சம்பந்தப்பட்ட மாளிகைகளை வாங்கலாம். நினைவாலயங்கள் எழுப்பலாம். ஆயினும் அவர்களே நிரந்தரமாக எழுப்பிக் கொண்டுள்ள நினைவுச் சின்னத்துடன் இவை போட்டி போட முடியாது.

பிர்லா மாளிகையில் காந்திஜி கொலையுண்ட இடத்தில் ஓர் அடையாளம் பதிப்பதோடு நில்லாமல் அம்மாளிகையையே வாங்க அரசாங்கம் முனைந்திருப்பது ஏன்? அந்தப் பெரும் மாளிகையை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறார்கள்? அரசியல் சாஸனத்தின் தார்மீக சாரத்தைச் சிதைத்ததற்குப் பரிகாரமாக பிர்லா மாளிகையை வாங்கிச் சரிக்கட்டிவிட முடியாது.

மகாத்மா வாங்கித் தந்த சுதந்திரமே அவருக்கு நினைவுச் சின்னமாகும். அதை நாம் காத்தாலே போதும்.


*

முன்னாள் மன்னர்களுக்கு, நேருஜியும் அவரது சகாக்களும் கொடுத்த பிரமாண வாசகத்தை முறிப்பதற்குப் பிரதமரின் மனச்சாட்சி ஒப்பவில்லை. எனினும் சோஷலிஸ சமத்துவத்துக்காக வாக்குறுதியை முறிக்கத்தான் வேண்டும் என அவர் நிச்சயப்படுத்திக் கொண்டிருக்கிறார். இது அபத்தமானது என்பது வெளிப்படை. வறட்டுக் கொள்கையின் நெரிசலில் தெளிவான உண்மைகூட கண்ணுக்குத் தெரியாமல் போகிறது! சமத்துவத்தை ஏற்படுத்துவதற்காகப் பழைய மன்னர்களின் மற்ற விசேஷ உரிமைகளை வேண்டுமாயின் நீக்கலாம்; அந்த எல்லைக்கும் அப்பால் சென்று, வாக்குறுதி தந்த தொகைகளையும் தர மறுப்பது தகாது.



ஒரு நல்லவர் மறைந்தார்

ஓமந்தூர் திரு ராமசாமி ரெட்டியார் அவர்களின் மறைவு குறித்து வருந்துகிறோம். ஆரம்ப காலத்திலிருந்து சுதந்திரப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க பங்கு பற்றி, பின்னர் சுதந்திர இந்தியாவில் சென்னை மாகாணத்தின் முதன் மந்திரியாகப் பணிபுரிந்தவர் அவர். அதிகம் பேசாமல், அடங்கியிருந்து, காரியத்திலேயே கவனம் செலுத்தியவர். அரசியலில் நல்லவர், நேர்மையானவர் என்று பெயரெடுப்பது துர்லபம். இன்று ராஜாஜி, 'ஓர் உண்மை தேச பக்தரை, நேர்மையில் உயர்ந்தவரை இழந்தோம்' என்று கூறுமளவுக்குச் சிலையாக வாழ்ந்தவர் திரு ஓ. பி. ஆர். அவர்கள். உண்மை காந்தியவாதியான அவர், சுதந்திர இந்தியாவில் காங்கிரஸின் போக்கைக் கண்டு, அரசியலிலிருந்து விலகி அருட்பெருஞ் சோதி வள்ளலாரின் தொண்டில் பூரணமாக ஈடுபட்டார். இன்று தமது சொத்தில் பெரும் பகுதியையும் வடலூர் வள்ளலார் பணிக்கே விட்டுச் சென்றிருப்பது அவரது பக்தி உள்ளத்துக்குச் சான்றாகும்.



பல நாடுகளில் கலாசாலே மாணவ மாணவியருக்கான வைத்திய வசதிகள், கான்டீன் வசதிகள், தங்குமிடம், வாசக சாலேகள், கூட்டுறவு அங்காடிகள், கலே அரங்கம், உபகாரச் சம்பளம் முதலியன கிடைக்க வழிசெய்கின்றது. ஆனல் இது போன்ற பல வசதிகளும் ஒருங்கே ஒரே இடத்தில் கிடைக்குமாறு நிறுவப்பட்ட கட்டடம் ! உலகத்திலேயே இதுதான் முதலாவதாகும். இதை அடைந்த பெருமை சென்னேக்கு. இதை டென் மார்க் அரசின் உதவி மூலம் நமக்குக் கிடைக்கச் செய்த பெருமை உலகப் பல் கலேக் கழகச் சேவை இயக்கத்துக்கு.

மாணவ சமுதாயம் வாழ்கவே!

சென்னேநகரில் சேத்துப்பட்டும் எழும்பூரும் இணேயும் பகுதி. சமீபத்தில் அங்கு கம்பீரமாக எழுந்து நிற்கும் ஐந்தடுக்கு மாளிகை ஒன்று நம் கவனத்தைக் கவர்கிறது. ''உலகப் பல்கலேக் கழகச் சேவை'' இயக்கத்தின் ஆதரவில் சென்னேப் பல்கலேக் கழக மாணவர் சமூகத்துக்கு டென்மார்க் அரசாங்கம் அளித்த சுமார் பதினெட்டு லட்சம் ரூபாய் நன்கொடையைக் கொண்டு எழுப்பப்பட்ட கட்டடம் கவர்னர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. நம் இதயங்களிலே டென்மார்க் அரசினிடம் நன்றி சுரக்கின்றது.

'உலகப் பல்கலேக் கழகச் சேவை' அமைப்பின் செக்ரடரி ஜெனரல் திரு சிதம்பரநாதன், ''படிக்க வேண்டும் என்ற நாட்டமுள்ள எந்த ஒரு மாணவ மாணவிக்கும் பல்கலேக் கழகத்துக்குள் நுழைவதற்கான வாய்ப்பு தடையின்றிக் கிடைக்க வழி செய்யவேண்டும். மாணவ சமுதாயமும், ஆசிரிய சமுதாயமும், நிர்வாகிகளும் பரஸ்பரம் புரிந்துகொண்டு கல்விப் பணியை மேம்பாடு அடையச் செய்ய வேண்டும். இந்த இரண்டு நோக்கங்களுடன் தான் 'உலகப் பல்கலேக் கழகச் சேவை' இயங்குகிறது'' என்று விளக்கினர்.

இந்த ஆண்டோடு இந்த இயக்கம் 'ஆரம்பித்து ஐம்பது வருடங்கள் பூர்த்தியாகின்றன! பொன் விழா ஆண்டு. இந்தத் திறப்பு விழாவை ஒட்டி பொன் விழாவையும் சென்னேயிலேயே நடத்தினர்கள். இந்த அமைப்பு

இந்த அமைப்பின் பிரதான காரியதரிசியாக ஜெனிவாவில் பணியாற்றும் திரு சிதம்பரநாதன் திருநெல்வேலிக் காரர். மாநிலக் கல்லூரியின் முன்னள் பௌதிக ஆசிரியர். வளர்ந்து வரும் நாடுகளின் பிரதிநிதியாக, இந்தப் பதவியை வகிக்கும் முதல் ஐரோப்பியரல்லாத நபர் இவர் ! மாணவர் சமுதாயத்துக்கு மட்டுமின்றிப் பாரதத்திலிருந்து, ஜெனிவாவுக்கோ, ஜெனிவாவின் வழியாக மற்ற நாடுகளுக்கோ போகும் எந்த இந்தியருக்கும் இவர் உற்ற நண்பர் !


ஐந்து கண்டங்களிலும் உள்ள அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகள், இந்தச் சேவை இயக்கத்துக்குத் தங்கள் உதவியை அளிக்கின்றன. வெவ்வேறு நாடுகளேச் சேர்ந்த பதினேந்து நபர்கள், பிரதான காரியதரிசிக்குத் துணையாகப் பணியாற்றுகிறர்கள். இந்த இயக்கம், எந்த ஒரு தனிப்பட்ட நாட்டின் ஆதிக்கத்திலும் இல்லே. அண்மையில் சென்னேயில் நடந்த கூட்டத்துக்காக நாற்பத்து ஐந்து நாடுகளிலிருந்து நூற்றி இருபதுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் வந்திருந்தார்கள் !

''பல்கலேக் கழக மாணவர்களுக்கு, தாங்கள் ஏதோ சமூகத்தில் மற்றவர்களேவிட உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் தோன்றக் கூடாது. மற்றவர்களுக்குச் சேவை செய்வதே தங்கள் குறிக்கோள் என்று அவர்கள் நினேக்க வேண்டும். இதற்கு இந்த இயக்கம் உதவுகிறது'' என்கிறர் திரு சிதம்பரநாதன்.

— பட்டினத்தார்


மேலே: உலகப் பல்கலேக் கழகச் சேவைக் கட்டிடம் சேத்துப்பட்டில் ஆகஸ்டு 22-ந் தேதி திறந்து வைக்கப்பட்டது.

கீழே: தமிழக கவர்னர், தமிழக முதன் மந்திரி, திரு வி. டி. தேஷ்முக், திரு சுந்தரவடிவேலு ஆகியோர் அமர்ந்திருக்க உலகப் பல்கலேக் கழகச் சேவைக் கழகத்தின் பிரதான காரியதரிசி திரு சிதம்பரநாதன் உரையாற்றுகி.





இறையுணர்ச்சி வளர ஓர் இசைத் தட்டு









பஜகோவிந்த ச்லோகங்களையும், ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமங்களையும் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி நீண்ட நேர இசைத் தட்டில் பதிவு செய்திருக்கிறார் அல்லவா? இந்த இசைத்தட்டின் வெளியீட்டு விழா ஸ்ரீ கிருஷ்ணஜயந்தி யன்று நாட்டின் ஐந்து முக்கிய கேந்திரங்களில் ஒரு பெரு வைபவமாக நிகழ்ந்தேறியது.

1. ஹைதராபாத்தில் இசைத்தட்டை வெளியிட்ட ஜனாதிபதி ஸ்ரீ வி.வி. கிரி அவர்களையும், மாநில கவர்னர் ஸ்ரீ கந்துபாய் தேசாயையும் ஸ்ரீ சதாசிவம் ம்பதியர் வரவேற்கின்றனர். 2. ராஷ்டிரபதி உரையாற்றுகிறார். பக்கத்தில் ஆந்திர முதல்வர் ஸ்ரீ பிரம்மானந்த ரெட்டி. 3. கல்கத்தா விழாவில் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் காரியதரிசி ஸ்ரீ கம்பீரானந்த ஸ்வாமிகள் உரை. அவருக்கு வலப்புறம் டாக்டர் சுநீதிகுமார் சாட்டர்ஜியும், கிராமபோன் கம்பெனி நிர்வாகி ஸ்ரீ சேன். 4. பம்பாயில் குலபதி ஸ்ரீ முன்ஷி, விழாவுக்குத் தலைமை தாங்கிய ஸ்வாமி ஹிரண்மயானந்தரிடம் இசைத் தட்டை வழங்குகிறார். 5. தில்லியில் யூனியன் கல்வி அமைச்சர் ஸ்ரீ வி.கே.ஆர்.வி. ராவ் இசைத் தட்டை வெளியிடுகிறார். 6. மேடையில் ஸ்வாமி ரங்கநாதானந்தரையும், ஸ்வாமி வந்தனானந்தரையும் காணலாம்.
















1. சென்னை தர்மபிரகாஷில் வெளியீட்டு விழாவுக்கு வருகை புரிகிறார் பூஜ்யஸ்ரீ பேஜாவர் பீடாதிபதிகள். 2. ஸ்ரீமதி ராதா விசுவநாதனின் பிரார்த்தனை. 3. அக்னிஹோத்திரம் ஸ்ரீ ராமானுஜ தாதாசாரியர் பாராட்டுரை. 4. திரளாக வந்திருந்த மக்களில் ஒரு பகுதி. 5. ஸ்ரீ பேஜாவர் பீடாதிபதிகள் தலைமை உரை வழங்குகிறார். 6. பேலூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத் தலைவர் ஸ்வாமி விரேசுவரானந்தாஜி இசைத் தட்டைப் பெறுகிறார். 7. கிராமபோன் கம்பெனி மானேஜர் ஸ்ரீ ஆல்பிரட் தங்கையன் அனைவரையும் வரவேற்கிறார்.







ஹிந்துஸ்தான் தாம்சன் அஸோஸி யேட்ஸ் லிமிடெட்டில் பணியாற்றும் திரு கே. வி. விஸ்வநாதனுக்கும், கல்கத்தா ராம்குமார் பேனி பிரசாத் கம்பெனியைச் சேர்ந்த திரு ஸ்ரீலாலனின் குமாரத்தி சௌபாக்கியவதி சாந்தா வுக்கும் சமீபத்தில் சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



பம்பாய், சாந்தா குரூஸ் ஆகாய விமானதளத்தின் சுங்க இலாகா இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. V. சங்கருக்கும் பம்பாய் கால்டெக்ஸ் ஸ்தாபனத்தைச் சார்ந்த ஸ்ரீ P. K. வெங்கடேஸ்வரன் அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி சுசிலா வுக்கும் அண்மையில் பாலக்காட்டில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!



எட்டோடு ஒன்பது !

எத்தனையோ வருடங்களாக அந்த மொட்டைப் பாறை, ''விவேகாநந்தர் பாறை'' என்ற பெயரைத்தான் தாங்கி இருந்து வந்திருக்கிறது. இத்தனை வருடங்களில் யாராவது, ஒருத்தராவது விவேகாநந்தருக்கு உதவிய ராமநாதபுரம் ராஜாவுக்கு அங்கே ஒரு சிலை வைக்க வேண்டும் என்று சொன்னார்களா? இல்லை.

தூக்கத்தில் கிடந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி, தமிழ் நாட்டில் தமிழ் அரசு நடக்கும் இன்றுதான் அந்தப் பாறை தமிழ்ப் பாறை என்பது நினைவுக்கு வந்தது. கூடவே ராமநாதபுரம் ராஜா நினைவும் வந்தது. ''தமிழ் மன்னன் ராமநாதபுரம் ராஜாவுக்குச் சிலை எங்கே?'' என்ற குரல் எழுந்தது.

தமிழ்வேள் திரு பி. டி. ராஜன் அந்தக் குரலுக்குச் செவிமடுத்து ராஜிநாமாச் செய்தார். குரல் கூக்குரல் ஆயிற்று. அதன் எதிரொலியாகத் தமிழ் நாட்டுச் சட்டசபையில் திரு மூக்கையாத் தேவர் முழங்கினார். சிலம்புச் செல்வர் சினந்து அறைகூவினார். தமிழ் நாட்டு முதல்வரும் கலைஞருமான திரு கருணாநிதி அவர்களும் கச்சை கட்டிக் கொண்டார். ''விவேகாநந்தரின் சிலைக்குச் சரிசமானமாக ராமநாதபுரம் ராஜாவின் சிலையையும் அமைப்போம்'' என்று கர்ஜித்தார்.

தணிகை முதல் குமரிவரை வாழும் தமிழ் உள்ளமெல்லாம் தண்ணெனக் குளிர்ந்தது. ஆனாலும் இந்தக் குளிர்ச்சி வெகு நாள் நிலைக்காது. உள்ளுக்குள்ளே ஒரு தமிழ் கொந்தளிப்பு இன்னமும் குமுறிக் கொண்டிருப்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது. இந்தச் சிலைப் போராட்டம் இப்போதுதான் தொடங்கியிருக்கிறது. இனிமேல்தான் அது தொடர்ந்து நடக்கப் போகிறது. விவேகாநந்தர், ராமநாதபுரம் ராஜா இவர்களது இரண்டு சிலைகளால் மட்டும் இன்றைய தமிழ் உள்ளக் கொந்தளிப்பை அடக்க முடியாது என்று எச்சரிக்கை செய்கிறோம். தமிழ்வேள் திரு பி.டி. ராஜன் அவர்களுக்கும் ஒரு சிலையை அமைப்போம். வீரமறக் குலத்து திரு மூக்கையாத் தேவர் அவர்களுக்கும் ஒரு சிலையை அமைப்போம். சிலம்புச் செல்வர் திரு ம.பொ.சி. அவர்களுக்கும் ஒரு சிலையை அமைப்போம். தமிழரின் காவலரும் பாவலருமான திரு கருணாநிதி அவர்களுக்கும் ஒரு சிலையை அமைப்போம். தமிழன் என்ன நன்றி கெட்டவனா?

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் — உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு''

என்ற தெய்வத் திருவள்ளுவனார் வாக்கை மனத்திற்கொண்டு, கண்ணியம், கடமை, கட்டுப்பாடு இம்மூன்றையும் நமக்குத் தந்து விட்டு, நம்மையெல்லாம் தவிக்க விட்டுப் போன அறிஞர் அண்ணா அவர்களுக்கும் ஒரு சிலையை அமைப்போம். இன்னமும் நம்மோடு இருந்து கொண்டே தமிழன் ஒவ்வொருவனும் கடைப்பிடிக்க வேண்டிய தருமத்தைத் தம் தள்ளாத வயதிலும் நமக்குத் தினம்தினம் உபதேசித்துவரும் திரு ஈ.வெ.ரா. பெரியார் அவர்களுக்கும் ஒரு பிரும்மாண்டமான சிலையை அமைப்போம். அந்தக் குமரி முனைத் தமிழ்ப் பாறையில் இதற்கெல்லாம் இடமா இல்லை?

* * *

இதையெல்லாம் நான் எழுதிக் கொண்டிருக்கும் போதே என் மூன்று வயதுப் பயல் ஹரி ஒரு காரியமும் இல்லாமல் சும்மா உட்கார்ந்திருந்தான். சற்றுத் தூரத்தில் அவன் கண்ணெதிரே ஒரு பந்து இருந்தது. அதன் நினைவே அவனுக்கு இல்லை. அதை அவன் தொடக்கூட இல்லை.

அவன் அக்காள் லக்ஷ்மி அங்கே வந்தாள். பந்தைக் கையில் எடுத்தாள். 'வீல்' என்று ஹரி கத்தினான். ''பந்து எனக்கு, பந்து எனக்கு!'' என்று ரகளை செய்து அடம் பிடித்தான்.

''ஏண்டா! இத்தனை நேரமும் பந்து சும்மாத்தானே கிடந்தது? உன் அக்காள் வந்து தொட்டதும் இப்படி அலறுகிறாயே!'' என்றேன்.

''பந்து எனக்கு, பந்து எனக்கு!'' என்று நாலு வீட்டுக்கும் கேட்கும்படி கத்திக் கொண்டே லக்ஷ்மியைத் துரத்திக் கொண்டு ஹரி ஓடினான்.

பெரியார் சிலையை எழுத்தில் வடித்து விட்டு, எழுதின தாள்களைக் கீழே போட்டு விட்டு ஹரிக்குப் பின்னால் நானும் ஓடினேன். குழந்தைகளைச் சமாதானப்படுத்தி இருவரையும் தூக்கிக் கொண்டு வந்தேன்.

இதற்குள் நான் எழுதினதையெல்லாம் படித்துமுடித்துவிட்டு, ''இடம் இல்லாமல் என்ன? அவ்வளவு பெரிய குமரிமுனைப் பாறையில் அந்த எட்டோடு ஒன்பதாக உங்களுக்கும் ஒரு சிலையை எழுப்பலாம். நீங்களும் ஒரு பெரிய தமிழ் எழுத்தாளர்தானே!'' என்று சொல்லிக் கொண்டு வந்து காப்பியைக் கையில் கொடுத்தாள் என் மனைவி.

''எங்கே! நவக்கிரஹ பிரதட்சணம் பண்ணி விட்டுக் கோவிலிருந்து இப்போது தான் வருகிறாயா?'' என்று கேட்டுக் காப்பியைக் குடித்தேன்.

— குட்டிக் கிருஷ்ணன்



ராமாயணம்

ராஜாஜி

ஹனுமானும் அங்கதனும் தெற்கே தேடிக் கொண்டு சென்றார்கள். விந்திய மலைக் குகைகளிலும் வனங்களிலும் புகுந்து எல்லா இடங்களையும் தேடிப் பார்த்தார்கள். பிறகு ஒரு பெரும் பாலைவனத்தைக் கண்டார்கள். அவ்விடம் ஒரு ரிஷி தவம் செய்து கொண்டிருந்தார். அவருடைய சாபத்தால் அவ்விடம் ஒரு மரமும் செடியும் மிருகங்களும் பட்சிகளுமில்லாமல் சூன்யமாக இருந்தது. அங்கேயும் தேடிப் பார்த்து விட்டுப் பிறகு வேறு பிரதேசம் சென்றார்கள். அங்கே ஒரு பெரிய அசுரனைக் கண்டார்கள். மகா கொடியவனான அந்த அசுரன் வானரர்கள் கூட்டமாக வருவதைக் கண்டு நல்ல போஜனம் கிடைத்தது என்று சந்தோஷமாக அவர்களைப் பிடிக்கத் தாவினான்.

தங்களை எதிர்த்த அசுர அரக்கன் ராவணனாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணினார்கள். அங்கதன் அவன் மேல் பாய்ந்து ஓர் அறை அறைந்தான். அந்த அடியைத் தாங்க மாட்டாமல் அரக்கன் ரத்தம் கக்கிக் கொண்டு கீழே ஒரு மலைபோல் விழுந்தான். வானரர்கள் ராவணன் செத்தான் என்று மகிழ்ச்சி அடைந்து, பிறகு காடு முழுவதும் சீதையைத் தேடிப் பார்த்தார்கள். சீதையாவது ஓர் அறிகுறியுமாவது காணவில்லை. பிறகு வேறு இடங்களைத் தேடிச் சென்றார்கள்.

பல சமயங்களில் எவ்வளவு தேடியும் பயன் காணவில்லையே என்று உற்சாகம் இழந்து வருத்தப்பட்டு உட்காருவார்கள். பிறகு அங்கதன், கந்தமாதனன் முதலியோர் தைரியம் சொல்லி மறுபடியும் தேடிச் செல்வார்கள். இப்படிப் பல நாட்கள் கழிந்து விட்டன. 'சீதையைக் காணவில்லையே, சுக்ரீவனே கடுமையான தண்டனை விதித்துவிடுவானே! என்ன செய்வது?' என்று தெற்கு நோக்கிப் போன வானரர்கள் வெகுதூரம் தேடிக் கொண்டே சென்றார்கள்.

பசியாலும் தாகத்தாலும் வாட்டப்பட்ட இந்த வானரப் படையினர் ஒரு பெரிய குகையைக் கண்டார்கள். அந்தக் குகையிலிருந்து அநேக வகைப் பறவைகள் சந்தோஷமாக வெளிவந்து கொண்டிருந்தன. உடல் முழுவதும் தாமரைப் புஷ்பத்து மகரந்தப் பொடி பூசிய நீர்ப் பறவைகளைக் கண்டும் நல்ல வாசனையோடு காற்று வீசுவதைப் பார்த்தும், 'இந்தக் குகைக்குள் தண்ணீர் இருக்கும். உள்ளே புகுவோம்' என்று தாகத்தால் மிக வருந்திய வானரர்கள் புகுந்தார்கள்.

பேரிருள் மூடியிருந்த அந்தக் குகைக்குள் வானரர்கள் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு மெள்ள வெகு தூரம் சென்றார்கள். வானரர்களில் சிலர் மிகக் களைத்துப் போய், 'ஐயோ! தாகம், தாகம்' என்று கூப்பிட்டுக் கொண்டே சென்றார்கள். வெகுநேரம் இப்படி இருட்டிலேயே சென்ற பிறகு திடீர் என்று வெளிச்சம் தோன்றி மிக ரம்யமான வனத்தைக் கண்டார்கள். போகப் போக அதிசயமான மாளிகைகளும் எல்லாவித செல்வமும் நிறைந்த நகரத்தைக் கண்டார்கள். தங்கமயமாக அற்புத அழகோடு தெருக்களும் மாளிகைகளும் சொல்ல முடியாத சௌந்தரியம் கொண்டு பிரகாசித்தன.

அங்கே ஓரிடத்தில் மரவுரி தரித்து மான் தோல் விரிப்பு மேல் உட்கார்ந்திருந்த ஒரு வயோதிக ஸ்திரீ தபஸ்வியைக் கண்டார்கள். அவள் முகத்தின் திவ்விய தேஜஸைப் பார்த்து வானரர்கள் நடுங்கினார்கள்.

ஹனுமான் தன்னைத் தைரியப்படுத்திக் கொண்டு தபஸ்வியை வணங்கிப் பேசலானான்: ''தாயே, நமஸ்காரம்! தாங்கள் யார்? இந்த விசித்திரக் குகையைப் பற்றியும் தங்களைப் பற்றியும் சொல்ல வேண்டும்! நாங்கள் மிகப் பசியும் தாகமும் களைப்புமாக இந்த இருள் மூடிய குகைக்குள் புகுந்தோம். தண்ணீர் கிடைக்கும் என்று ஆசைப்பட்டு உள்ளே நுழைந்தோம். இங்கே தங்கமயமான விசித்திர மாடமாளிகைகளும் மரங்களும் குளங்களும் பார்த்து எங்களுக்குப் பயம் உண்டாகிறது. விஷயத்தைச் சொல்லி எங்கள் பயத்தைப் போக்க வேண்டுகிறேன்'' என்றான்.

''வானரர்களே! நீங்கள் இந்த இருள் மூடிய குகை வாயிலை எப்படிக் கண்டு எவ்வாறு உள்ளே பிரவேசித்தீர்கள்? இங்கே உங்களுக்கு வேண்டிய தண்ணீரும் ஆகாரமும் இருக்கின்றன. பசியும் களைப்பும் தீர்த்துக் கொள்

ளுங்கள். இந்த அழகிய மாளிகை தானவர்களுடைய விசுவகர்மாவான மயன் நிர்மாணித்தது. அவன் சுக்ராச்சார்யரிடம் நிர்மாணவேலையை நன்ருகக் கற்றவன். அவன் இங்கே வெகு காலம் இருந்தான். பிறகு அவன் மேல் இந்திரன் பகை கொண்டு அவனை வதம் செய்து விட்டான். அதன் பின் இந்தப் பொன் மயமான மாளிகையை இந்திரன் ஹேமை என்கிற என் தோழி அப்சரஸுக்குக் கொடுத்தான். இந்த மாளிகைகள், உத்யான வனங்கள் முதலியவற்றுக்கு அவளே உரியவள். அவள் இப்போது தேவலோகம் சென்றிருக்கிருள். உங்கள் காரியம் என்ன? ஏன் இந்த மாதிரிக் காடுகளில் திரிந்து களைப்படைந்தீர்கள்? பசியும் தாகமும்



களைப்பும் தீர்த்துக் கொண்டு விவரமாகச் சொல்லுங்கள்'' என்று அவர்களுக்கு ஆகாரமும் பானமும் வேண்டிய அளவு அமைத்துக் கொடுத்தாள்.

எல்லாரும் நீர் அருந்தி, நன்றாகப் புசித்து மகிழ்ச்சியடைந்தார்கள். பிறகு ஹனுமான் வணக்கத்துடன் தபஸ்வினியான அந்த அம்மைக்குக் காரியத்தை எடுத்துச் சொன்னான்.

''தசரத குமாரன் ராமன் பூமண்டலத்துக்கு அதிபதியானவன். அவன் தன் தம்பியுடனும் மனைவியுடனும் ஒரு காரணமாக ராஜ்ய பதவியை விட்டு வனவாசம் செய்து கொண்டிருந்தான். அப்போது அரக்கன் ஒருவன் ராமனுடைய மனைவி சீதையைத் தூக்கிக் கொண்டு போய் விட்டான். அவளைத் தேடிக் கொண்டு ராமனும் லக்ஷ்மணனும் வந்தார்கள். வானர ராஜன் சுக்ரீவன் அவர்களுக்கு நண்பனாகிவிட்டான். ராமனுக்காகச் சீதையைத் தேடும்படி எங்களை வானர ராஜன் ஆணையிட்டு அனுப்பினான். அவன் இட்ட காலவரை இந்தக் குகையில் நாங்கள் வழி தெரியாமல் அலைந்து கொண்டிருந்த காலத்தில் தாண்டிவிட்டது. இப்போது எங்களுக்கு ஒன்றும் தோன்றவில்லை. எங்களுடைய அரசன் சுக்ரீவன் கண்டிப்புக்காரன். அவன் இட்ட வேலையைக் குறித்த காலத்தில் செய்யவில்லை என்கிற காரணத்தால் எங்களைக் கொன்று விடுவான்'' என்று ஹனுமான் சொன்னான்.

தபஸ்வினியம்மை இதைக் கேட்டு, ''நீங்கள் இப்போது வெளியில் செல்ல முடியாதே! இந்தக் குகையின் சக்தி உங்களுக்குத் தெரியவில்லை. இதில் பிரவேசித்த அந்நியர்கள் மறுபடியும் வெளியில் உயிருடன் செல்ல முடியாது; மாண்டு போவார்கள். உங்கள் காரியமோ பெருங் காரியம். ஆனபடியால் கண்களை மூடிக் கொள்ளுங்கள். நான் என்னுடைய தவ வலிமையால் உங்களை வெளியேற்றுகிறேன்'' என்றாள்.

அவர்கள் அவ்வாறே கண்களை மூடிக் கொண்டார்கள். உடனே தபோ பலத்தினால் கடற்கரையில் போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

62. சம்பாதி

கடற்கரையைச் சேர்ந்ததும் வானரர்கள் சுற்றிப் பார்த்தார்கள். வசந்த காலம் ஆரம்பித்து விட்டது என்பதைக் கண்டார்கள். அங்கதன் பேசலானான் :

''ஐயோ! காலவரை தாண்டிப் போயிற்று. சீதையைக் காணாமல் ஏதொரு துப்பும் அறிந்து கொள்ளாமல் கிஷ்கிந்தைக்குத் திரும்பினோமானால், அரசன் எனக்கு மரண தண்டனை விதிப்பான் என்பது நிச்சயம். என் மேல் சுக்ரீவனுக்கு அன்பு கிடையாது. ராமனுடைய ஆணைக்குப் பயந்தேதான் எனக்கு யுவராஜ்யப் பட்டம் தரச் சுக்ரீவன் ஒப்புக் கொண்டானேயொழிய என் மேல் சிற்றப்பனுக்கு அன்பு கிடையாது. அங்கே போய் உயிர் விடுவதை விட இங்கேயே பிராயோபவேசம் செய்து இறப்போம்'' என்றான் அங்கதன்.

அங்கதன் சொன்னதே சரி என்றார்கள் பல வானரர்கள்.

தாரன், ''அது சரியல்ல. நாம் ஏன் உயிர் நீத்து மாள வேண்டும்? தபஸ்வினி சுயம்பிரபையினுடைய குகைக்குள் மறுபடியும் சென்று அங்கேயே சுகமாக உயிர் வாழ்வோம். அவ்விடம் நமக்கு வேண்டியதெல்லாம் இருக்கிறது. அங்கே சுக்ரீவனுவது வேறு யாராவது பிரவேசிக்க முடியாது. நாம் சந்தோஷமாக ஆயுள் முழுதும் காலம் கழிக்கலாம்'' என்றான்.

ஹனுமானுக்கு இந்த யோசனை சரியென்று தோன்றவில்லை. (தொடரும்)

இவருக்கு இதுவும் தெரியும்



"ஹரிகேசவநல்லூர் முத்தையா பாகவதர் எனக்கு அத்தான் உறவு. அவரிடம் தான் சங்கீத சிட்சை. சரளி வரிசையிலிருந்து சொல்லிக் கொடுத்தார்!" இப்படிப் பெருமிதத்துடன் கூறியவர் நீதியை நிலைநிறுத்த, சட்ட நுணுக்கங்களைக் கற்றறிந்தவர்! அதே சமயம் அபார இசை ஞானமும் கொண்டிருப்பவர்.

இருநூறுக்கும் மேற்பட்ட தியாகராஜ கிருதிகளைப் பாடத் தெரிந்துகொண்ட பிறகுதான் 1928ல் முழு நேரக் கச்சேரி ஒன்றில், முதன் முறையாகப் பாடினார் திரு வேங்கடராம ஐயர்.

"உங்கள் முதல் கச்சேரிக்குப் பக்க வாத்தியங்கள் வாசித்தவர் யார், யார்?" என்று கேட்டேன்.

"என் முதல் கச்சேரிக்கு வயலின் வாசித்தவர் பரூர் சுந்தரம் ஐயர். அதுதான் நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது" என்றார் ஸ்ரீ டி. எல். வி.

பாரத நாட்டின் தலைமை நீதிமன்றத்தில் (Supreme Court) நீதிபதியாக இருந்தவர்களில் 'சங்கீத கலாநிதி' என்னும் பட்டத்துடன் பதவி வகித்தவர், இன்றுவரை ஒரே ஒருவர்தான். அப்பெருமைக்கு உரியவர் டி. எல். வேங்கடராம அய்யர் அவர்கள்தான். அதே காலத்தில்

நீதிமன்றத்தில் இசைக் கச்சேரி

சுப்ரீம் கோர்ட்டில் நீதிபதிகளாக இருந்த திரு மகாஜன், திரு முகர்ஜி ஆகியோர் திரு வேங்கடராம அய்யரின் சங்கீத ஞானத்தை உணர்ந்தவர்களாய் வீட்டுக்கு வந்து பாடச்சொல்லிக் கேட்பார்கள்.

திருநெல்வேலியில் வடமொழியில் பாண்டித்தியம் பெற்று விளங்கிய மகாமகோபாத்யாய லக்ஷ்மண சூரியின் மகனாகப் பிறந்தவர். தாமிரவருணிக் கரையில் பிறந்திருந்தாலும், காவேரிக் கரையில்தான் எட்டாவது வகுப்பு வரை படித்தார்.

தஞ்சையில் வேங்கடராம ஐயரின் தந்தை சமஸ்கிருதக் கல்லூரியில் பணி புரிந்து கொண்டிருந்ததால், தஞ்சை வாசம் ஏற்பட்டது.

சென்னைக்கு வந்து மேற்படிப்பைத் தொடங்கி 1914ல் சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டே, சரித்திர ஆசிரியராக இரண்டு வருடங்கள் பணி புரிந்தார். 1916ல் பி. எல். பட்டம் பெற்றார். பிரபல வழக்கறிஞராகத் திகழ்ந்து பின்னர் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாகவும் புது தில்லியில் உள்ள தலைமை நீதி மன்றத்தில் நீதிபதியாகவும் பதவிகள் வகித்தார். ஓய்வு பெற்ற பின்னரும் பல புதிய பதவிகளை அளித்து அரசினர் இவரது சட்ட ஞானத்தைப் பயன்படுத்திக் கொண்டனர்.

தீக்ஷிதர் கிருதிகளில் இவருக்கு விசேஷ ஈடுபாடு ஏற்பட்டது எப்படி?

முத்தையா பாகவதருடன் எட்டையபுரம் சமஸ்தான மன்னரைக் கோவில்பட்டியில் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டதாம். அப்போது அம்பி தீக்ஷிதர் எட்டையபுரம் ராஜா எதிரே சில தீக்ஷிதர் கிருதிகளைப் பாடினார்.

அப்போது ஏற்பட்ட அறிமுகத்தைத் தொடர்ந்து அம்பி தீக்ஷிதரிடம் தீக்ஷிதர் கிருதிகளைக் கற்றுக் கொள்ளுமாறு முத்தையா பாகவதர் கூறவே, ஸ்ரீ டி. எல். வி. மகிழ்ச்சியுடன் சம்மதித்தார். அம்பி தீக்ஷிதரைச் சென்னைக்கு அழைத்து வந்து தனி வீட்டில் ஜாகை வசதி செய்து கொடுத்தார். அவரை தீக்ஷிதர் கிருதிகளைப் பாடச் சொல்லிக் கேட்டு வேங்கடராம ஐயரும் முறையாகப் பாடத் தெரிந்து கொண்டார். நானூறு தீக்ஷிதர் கிருதிகளைப் பாடும் திறனைப் பெற்று விட்டார்.


ஆண்டுதோறும் மியூசிக் அகாடமியில் இசை ஆராய்ச்சிகளின் போது ஸ்ரீ டி. எல். வி. முக்கிய பங்கு ஏற்று அரிய தொண்டாற்றி வருகிறார், சங்கீத உலகுக்கு.

மூன்றும் வருடம்கூட மியூசிக் அகாடமியில் சில அபூர்வ ராகங்களைப் பாடிக் காண்பித்தார்.

1944ல் சங்கீத கலாநிதி பட்டத்தை மியூசிக் அகாடமி இவருக்கு அளித்துக் கௌரவித்தது. சென்னை உயர்நீதி மன்றத்தின் நூற்றாண்டு நடைபெற்றது 1962ல். அந்த விழாவில் தலைப்பாகை, கோட் அணிந்தவாறே மேடையில் (படம்) இரண்டு மணி நேரம் கச்சேரி செய்தார் இந்த முன்னாள் நீதிபதி!

—ஏ. சுவாமிநாதன்





பத்தொன்பதாம் அத்தியாயம்

சிரிப்பும் நெருப்பும்

பூங்குழலி தன்னைப் படகுடன் சேர்த்துக் கட்டியிருந்த கட்டுக்களை அவிழ்க்க அவசர அவசரமாக முயன்றாள். அது அவ்வளவு இலகுவான காரியமாக இல்லை. சண்டாளப் பாவிகள்! கயிற்றைத் தாறுமாறாக விட்டு முடிச்சுக்கு மேல் முடிச்சாகப் போட்டிருந்தார்கள். பூங்குழலியின் சிறிய கத்தி படகின் அடியில் கிடந்தது. ஒரு கரத்துக்காவது விடுதலை கிடைத்தால் கத்தியை எடுத்துக் கட்டுக்களை அறுத்து எறியலாம். ஆனால் பாவிகள் மணிக்கட்டுகளைச் சேர்த்துத்தான் பலமாகப் பின்புறத்தில் கட்டியிருந்தார்கள். பூங்குழலி மிகவும் கஷ்டப்பட்டுக் குனிந்து பற்களினால் கத்தியின் பிடியைக் கௌவி எடுத்துக் கொண்டாள். பற்களினால் கௌவிய வண்ணமே கத்தியைப் பிடித்துக் கொண்டு கயிற்றை ஓரிடத்தில் அறுத்தாள். கைகளின் கட்டுச் சிறிது தளர்ந்தது. ஒரு கையை மிகவும் பிரயாசையின் பேரில் கட்டிலிருந்து விடுதலை செய்து கொண்டாள். பிறகு கயிறுகளை அறுப்பது சிறிது எளிதாயிற்று.

கட்டுக்களிலிருந்து முழுதும் விடுவித்துக் கொள்வதற்கு ஏறக்குறைய ஒரு நாழிகை நேரம் ஆகிவிட்டது.

இந்தச் சமயத்தில் ஓடைக் கரை மீது காலடிச் சத்தம் கேட்டது. பிறகு ஒரு நிழல் தெரிந்தது. தன்னைக் கட்டிப் போட்டவர்களில் ஒருவன்தான் திரும்பி வருகிறான் போலும்! அல்லது தான் கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டு தப்பி வந்து விடாமல் பார்த்துக் கொள்வதற்காக ஒருவனைப் பின்னால் விட்டு வைத்துச் சென்றிருக்கிறார்கள் போலும்! அவன் தன் கண் முன்னால் தெரிந்ததும் கையிலிருந்த கத்தியை அவன்மீது எறிந்து கொன்று விடுவது என்று பூங்குழலி தீர்மானித்துக் கொண்டு அதற்கு ஆயத்தமாகக் கத்தியைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் எத்தகைய ஏமாற்றம்?

''பூங்குழலி! பூங்குழலி!'' என்று சேந்தன் அமுதனுடைய குரல் கேட்டது.

அடுத்த விநாடி அமுதனுடைய பயப் பிராந்தியுற்ற முகம் ஓடைக் கரையின் மேலிருந்து எட்டிப் பார்த்தது.

பூங்குழலி கத்தியை இடுப்பில் செருகிக் கொண்டாள்.

அமுதனும் அவளைப் பார்த்துவிட்டான். ''பூங்குழலி! நீ உயிரோடு இருக்கிறாயா?'' என்று சொல்லிக் கொண்டே பாய்ந்து ஓடி வந்தான்.

''நான் உயிரோடிருப்பது உனக்குக் கஷ்டமாயிருக்கிறதாக்கும்! வேண்டுமானால் உன் கையாலேயே கொன்று விட்டுப் போய்விடு! ஆனால் அவ்வளவு தைரியம் உனக்கு எங்கிருந்து வரப் போகிறது?'' என்றாள் பூங்குழலி.

''சிவ சிவா! எவ்வளவு கொடூரமான வார்த்தைகளைக் கூறுகிறாய்? நான் எதற்காக உன்னைக் கொல்லப் போகிறேன்? நீதான் உன் வார்த்தைகளினால் என்னைக் கொல்லுகிறாய்!'' என்றான் அமுதன்.

''பின்னே, சற்று முன்னாலேயே ஏன் வந்திருக்கக் கூடாது? கட்டுக்களை நாலுக அறுத்து விடுவித்துக் கொள்ளுவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டுப் போனேன், தெரியுமா ?'' என்று சொல்லிக் கொண்டே பூங்குழலி எழுந்து நிற்க முயன்றாள். கால்கள் கயிறுகளில் தாறுமாறுகச் சிக்கிக் கொண்டிருந்தபடியால் தடுமாறி விழப் பார்த்தாள்.

அமுதன் அலறிப் புடைத்துக்கொண்டு அவளைப் பிடித்து விழாமல் தடுத்தான்.

''ஐயையோ! இப்படியா பாவிகள் உன்னைக் கட்டிப் போட்டு விட்டுப் போனார்கள்? உடம்பெல்லாம் தடித்துப் போயிருக்கிறதே!'' என்றான்.

''இப்போது இவ்வளவு கரிசனப்படுகிறாயே? சற்று முன்னாலேயே வருவதற்கு என்ன?''

''மறுபடியும் அப்படியே கேட்கிறாயே? உனக்கு இப்பேர்ப்பட்ட ஆபத்து வந்திருக்கிறது என்று நான் என்ன கண்டேன்! நீ என்னைப் 'போ, போ' என்று விரட்டினாய். நான் போய்க் கொண்டிருந்தேன்......''

''பின், எதற்காகத் திரும்பி வந்தாய்? ஒருவேளை நான் செத்துப்போயிருந்தால் என் உடலைத் தகனம் செய்து விட்டுப் போகலாம் என்பதற்காகவா ?''

'' சிவபெருமான் தொண்டையில் விஷத்தை வைத்துக் கொண்டார்; நீ நாக்கிலேயே வைத்துக் கொண்டிருக்கிறாய். உனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்கலாம் என்று உன் அண்ணி சொன்னதைக் கேட்டு ஓடோடியும் வந்தேன். அதற்கு நல்ல பரிசு கிடைத்தது!''

இதற்குள் படகிலிருந்து ஓடைக் கரையில் இறங்கியிருந்தாள் பூங்குழலி.





''இந்தக் கத்தியை உன் மீது எறியலாம் என்றிருந்தேன். நீ தப்பித்தாய். இதே கத்தியினால் என் அண்ணியை முதலில் குத்திக் கொன்றுவிட்டுத்தான் மறு காரியம் பார்க்கப் போகிறேன். அந்தச் சண்டாளி எங்கே இருக்கிறாள்?''

''என்னை விட்டுவிட்டு உன் அண்ணியின் பேரில் எதற்காகப் பாய்கிறாய்? அவள் பேரில் எதற்காக இத்தனை கோபம்? உன்னைப் பற்றி எனக்கு அவள் சொன்னது குற்றமா....?''



''அவள்தான் என் அத்தையைக் காட்டிக் கொடுத்தவள். புதர்மறைவில் அவள் யாருடனோ இரகசியமாகப் பேசிக் கொண்டிருந்ததை நீ கூடத்தான் பார்த்தாயே?'' என்றாள் பூங்குழலி.

''நீ நினைப்பது தவறு! உன் அண்ணி, யாருடன் என்ன இரகசியம் பேசிக் கொண்டிருந்தாளோ, என்னமோ? உன் அத்தையை அவள் காட்டிக் கொடுக்கவில்லை என்பது நிச்சயம். உன் அத்தையைப் பலாத்காரமாகப் பிடித்துக் கொண்டு போனவர்கள் உன் அண்ணியையும் மரத்தோடு சேர்த்துக் கட்டிவிட்டுப் போய் விட்டார்கள். அவளுடைய தலையில் அடித்துக் காயப்படுத்திவிட்டுப் போய்விட்டார்கள்....''

''இது என்ன வேடிக்கை? நம்புவதற்கு முடியவில்லையே? உன்னை அவள் ஏமாற்றி விட்டிருக்கிறாள்! நல்லது; நீ

ஏன் திரும்பி வந்தாய், அண்ணியை எவ் விடத்தில் பார்த்தாய், — எல்லாம் விவரமாகச் சொல்லு!'' என்று பரபரப்புடன் பூங்குழலி கேட்டாள்.

சேந்தன் அமுதன் அவ்வாறே விவரமாகக் கூறினான். அவன் தஞ்சாவூர் செல்லும் சாலையில் போய்க்கொண்டிருந்தான். பூங்குழலியைப் பிரிந்து போக மனமின்றித் தயக்கத்துடனேதான் போய்க் கொண்டிருந்தான். அப்போது பக்கத்துக் காட்டிலிருந்து ஏதோ கூச்சலும் அலறும் குரலும் கேட்டன. பலர் விரைந்து நடந்து வரும் சத்தமும் கேட்டது. சேந்தன் அமுதன் சாலை ஓரத்து மரம் ஒன்றின் பின்னால் மறைந்து கொண்டான். கையில் வேல் பிடித்த வீரர்கள் ஏழெட்டுப் பேர் காட்டு வழியாகத் திடுதிடுவென்று நடந்து வந்து இராஜ பாட்டையில் பிரவேசித்தார்கள். அவர்களுக்கு மத்தியில் ஒரு பெண் பிள்ளை இருப்பது போலத் தோன்றியது. மனிதர்களிடையில் சற்று இடைவெளி தெரிந்த போது மத்தியில் இருந்தவள் பூங்குழலியின் அத்தை மாதிரி தோன்றினாள். அவள் அத்தையாக இருக்க முடியாது, அது தன்னுடைய மனப்பிரமை என்று சேந்தன் அமுதன் எண்ணிக் கொண்டான்.

அந்த வீரர் கூட்டம் சென்ற பிறகும் காட்டுக்குள்ளேயிருந்து ஒரு பெண் பிள்ளையின் கூக்குரல் கேட்டுக் கொண்டிருந்தது. சேந்தன் அமுதன் முதலில் 'நமக்கு என்னத்திற்கு வம்பு? நம்வழியே நாம் போய் விடலாமா?' என்று நினைத்தான். ஆனாலும் மனம் கேட்கவில்லை. யார் அலறுவது என்று பார்த்து, தன்னால் ஏதேனும் உதவி செய்யக்கூடுமானால் செய்யலாம் என்று எண்ணிக் கூக்குரல் வந்த திசையை நோக்கிப் போனான். அங்கே ராக்கம்மாள் மரத்தில் கட்டப்பட்டிருந்ததைக் கண்டான். அவள் தலையிலிருந்து இரத்தம் வழிந்து முகமெல்லாம் ஒரே கோரமாயிருந்தது. அமுதனுக்கு அருகில் நெருங்கவே பயமாயிருந்தது. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு சென்று கட்டுக்களை அவிழ்த்து விட்டான். அவிழ்க்கும் போதே, 'இந்த அக்கிரமம் யார் செய்தது? எதற்காகச் செய்தார்கள்? சற்று முன் சாலையில் வந்து ஏறின மனிதர்கள் யார்? அவர்கள் மத்தியில் ஒரு பெண் பிள்ளையும் போனது போலிருந்ததே? அவள் யார்?' என்றெல்லாம் கேட்டான். 'ஆம், தம்பி! அவர்கள் உன் பெரியம்மாவைக் கட்டி இழுத்துக் கொண்டு போகிறார்கள். அதைத் தடுப்பதற்கு நான் முயன்றேன். அதற்காகத்தான் என்னை இப்படி அடித்துக் கட்டி விட்டுப் போனார்கள். உன் மாமன் மகளும் பெரியம்மாவும் படகிலேறிப் போய்க் கொண்டிருந்தார்கள். படகிலிருந்துதான் பெரியம்மாவைக் கட்டி இழுத்து வந்தார்கள். பூங்குழலியின் கதி என்ன ஆயிற்றோ, தெரியவில்லை. ஓடிப்போய்ப் பார்!' என்றாள். சேந்தன் அமுதன் திடுக்கிட்டுப் பூங்குழலியைத் தேடிக் கொண்டு புறப்பட்டான். அச்சமயம் ராக்கம்மாள், 'கொஞ்சம் பொறு, தம்பி! பூங்குழலியும் அந்த ஊமைப் பிசாசும் படகில் ஏறி எங்கே புறப்பட்டார்கள்? உனக்குத் தெரியுமா? உன்னை ஏன் விட்டுவிட்டுப் போனார்கள்? நீ எங்கே தனியாகக் கிளம்பினாய்?' என்று கேட்டாள். இப்படி அவள் கேட்டது, முக்கியமாக, 'ஊமைப் பிசாசு' என்று சொன்னது சேந்தன் அமுதனுக்குப் பிடிக்கவில்லை. 'எல்லாம் அப்புறம் சொல்கிறேன்' என்று கூறிவிட்டு, கால்வாயை நோக்கி ஓடி வந்தான். பூங்குழலியையும் அந்த மனிதர்கள் அடித்துப் போட்டிருப்பார்களோ, ஒரு வேளை கொன்றே யிருப்பார்களோ என்ற பதைபதைப்புடனே வந்தான். பூங்குழலி உயிரோடு இருப்பதையும் இரத்தக் காயமில்லாமலிருப்பதையும் பார்த்ததும் அவனுக்கு ஆறுதல் உண்டாயிற்று....

இந்த விவரங்களைக் கூறிவிட்டு, ''பூங்குழலி! இப்போது என்ன சொல்லுகிறாய்? உன் அண்ணியின் பேரில் நீ கோபித்துக் கொண்டது தவறுதான் அல்லவா?'' என்று சேந்தன் அமுதன் கேட்டான்.

''நீ சொல்வதைக் கேட்டால் அப்படித்தான் தோன்றுகிறது. அவளை எந்த இடத்தில் விட்டு விட்டு வந்தாய்? அங்கே போய்ப் பார்க்கலாம், வா!'' என்றாள் பூங்குழலி.

''அவள் அங்கேயே இருப்பாள் என்பது என்ன நிச்சயம்?''

'' அங்கே இல்லாவிட்டால் அக்கம் பக்கத்தில் இருப்பாள். இல்லாவிடில் நம்மைத் தேடிக் கொண்டு வருவாள். அமுதா! நானும் என் அத்தையும் படகில் ஏறி எங்கே புறப்பட்டோம் என்று அண்ணி கேட்டாள் அல்லவா?''

''ஆம், கேட்டாள்.''

''நீ அதற்கு மறுமொழி சொல்லவில்லையே? நிச்சயந்தானே?''

''நிச்சயந்தான். 'ஊமைப் பிசாசு' என்று அவள் சொன்னதும் எனக்கு உண்டான அருவருப்பினால் மறுமொழி சொல்லாமலே வந்து விட்டேன்.''

'' இனிமேல் நல்ல வார்த்தையாகக் கேட்டாலும் சொல்லாதே! நாங்கள்

எங்கே புறப்பட்டோம் என்பதை அவள் ஏன் தெரிந்துகொள்ள விரும்புகிறாள்? அதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும் அல்லவா? அமுதா! அத்தையைப் பிடித்துக் கொண்டு போனவர்களுக்கும் அண்ணிக்கும் தொடர்பு இல்லை என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அண்ணியின் மூலமாக அவர்கள் உளவறிந்து கொண்டு, தங்கள் காரியம் முடிந்ததும், அவளை அடித்துக் கட்டிப் போட்டு விட்டுப் போயிருக்கலாம். அப்படியில்லாவிட்டாலும், அண்ணி வேறு ஏதோ துர்நோக்கத்துடனேதான் எங்களைத் தொடர்ந்து வந்திருக்க வேண்டும். ஆகையால் அவளுடன் ஜாக்கிரதையாகவே நடந்து கொள்! முழுதும் அவளை நம்பி மோசம் போய் விடாதே!.....''

''பூங்குழலி! உன் அண்ணியின் சந்நிதானத்தில் உன் அண்ணன் ஊமையாக இருந்து விடுவான் என்று சொல்லியிருக்கிறாய் அல்லவா? அதுபோலவே நானும் இருந்து விடுகிறேன். பேச வேண்டியதை யெல்லாம் நீயே பேசிக் கொள்!....''

இதைக் கேட்ட பூங்குழலி சிரித்தாள்.

''உன் சிரிப்பு என் செவிகளுக்கு இன்னமுதாயிருக்கிறது. திருநாவுக்கரசரின் தேவாரப் பதிகத்தைப் போல் இனிக்கிறது!'' என்றான் அமுதன்.

''ஏதோ தவறிச் சிரித்து விட்டேன். அதைக் கேட்டு ஏமாந்து விடாதே! என் உள்ளத்தில் அனல் பொங்குகிறது. நெஞ்சில் நெருப்புப் பற்றி எரிகிறது!''

'' நெஞ்சின் தாபத்தைத் தணிப்பதற்கு இறைவனுடைய கருணை வெள்ளத்தைக் காட்டிலும் சிறந்த உபாயம் வேறு இல்லை!'' என்றான் சேந்தன் அமுதன்.

இருபதாம் அத்தியாயம்

மீண்டும் வைத்தியர் மகன்

சிறிது நேரம் பூங்குழலியும் அவளுடைய அத்தை மகனும் காட்டு வழியில் மௌனமாக நடந்து சென்றார்கள்.

பூங்குழலி ஒரு நெடுமூச்சு விட்டு, ''அமுதா! உனக்கும் எனக்கும் ஏதோ ஜன்மாந்தரத் தொடர்பு இருக்கும் என்று தோன்றுகிறது '' என்றாள்.

''பூர்வ ஜன்மங்களைப் பற்றி இப்போது யாருக்கு என்ன கவலை? இந்த ஜன்மத்தைப் பற்றி ஏதாவது நல்ல செய்தி இருந்தால் சொல்லு!'' என்றான் சேந்தன் அமுதன்.

''முந்தைப் பிறவிகளின் தொந்தம் இந்தப் பிறவியிலும் தொடரும் என்று சொல்லுகிறார்கள் அல்லவா? அது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். இன்று உச்சி வேளையில் உன்னைப் பிரிந்தபோது இனி உன்னைப் பார்க்கப் போவதே இல்லை என்று எண்ணினேன். இரண்டு நாழிகைக்குள்ளாக உன்னை மறுபடியும் பார்க்கும்படி நேர்ந்தது...''

''அதற்காக வருத்தப்பட வேண்டாம். இந்தக் காட்டு வழியைக் கடந்து தஞ்சாவூர்ச் சாலையை அடைந்ததும் நான் என் வழியே செல்வேன். நீ உன் இஷ்டம் போல் போகலாம்.....''

''உன்னை நான் அப்படித் தனியே விட்டுவிடப் போவதில்லை. அண்ணியைக் கண்டு பேசிய பிறகு உன்னுடன் நான் தஞ்சாவூருக்கு வரப் போகிறேன். என் அத்தைக்கு நேர்ந்த துன்பத்துக்குப் பரிகாரம் தேடப்போகிறேன். சோழசக்கரவர்த்தியின் சந்நிதானத்தில் சென்று முறையிடப் போகிறேன்.....''

''பூங்குழலி! சக்கரவர்த்தியின் சந்நிதானத்தை அடைவது அவ்வளவு எளிது என்று கருதுகிறாயா? நம் போன்றவர்கள் தஞ்சாவூர்க் கோட்டைக்குள்ளேயே பிரவேசிக்க முடியாதே?''

''ஏன் முடியாது? கோட்டைக் கதவு திறக்கா விட்டால் கதவை உடைத்துத் திறப்பேன். அது முடியாவிட்டால் மதில் சுவரில் ஏறிக் குதித்துப் போவேன்....''

''அரண்மனை வாசலில் காவலிருக்கும் சேவகர்களை என்ன செய்வாய்?''

''நான் போடுகிற கூச்சலைக் கேட்டு அவர்கள் மிரண்டு போய் என்னைச் சக்கரவர்த்தியிடம் அழைத்துப் போவார்கள்....''

''சின்னப் பழுவேட்டரையரை அப்படியெல்லாம் மிரட்டிவிட முடியாது. அவருடைய அநுமதியில்லாமல் யமன் கூடச் சக்கரவர்த்தியை அணுக முடியாது என்று தஞ்சாவூர்ப் பக்கங்களில் ஜனங்கள் பேசிக் கொள்வது வழக்கம். அதனாலேதான் சக்கரவர்த்தி இன்னும் உயிரோடிருக்கிறார் என்று சிலர் சொல்லுவதையும் கேட்டிருக்கிறேன்.''

''சக்கரவர்த்தியைப் பார்க்க முடியாவிட்டால், பழுவேட்டரையர்களையே பார்த்து இந்த அக்கிரமத்துக்குப் பரிகாரம் உண்டா இல்லையா என்று கேட்பேன்! அவர்கள் தக்க பரிகாரம் செய்யா

விட்டால், முதன் மந்திரி பிரம்மராயரிடம் போவேன். அதிலும் பயனில்லாவிட்டால், பழையாறையிலுள்ள ராணிகளிடம் போய் முறையிடுவேன். என் அத்தையின் கதி என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்ளும் வரையில் ஓரிடத்தில் தங்க மாட்டேன். அவளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பரிகாரம் கிடைக்கும் வரையில் இரவு பகல் தூங்கமாட்டேன். அண்ணி என் அத்தையை 'ஊமைப் பிசாசு' என்று சொன்னாள் அல்லவா? நானும் ஒரு பிசாசாக மாறி நாடு நகரமெல்லாம் சுற்றி அலைவேன். 'நீதி!' 'நீதி!' என்று அலறிக் கொண்டு அலைந்து திரிவேன். அமுதா! நீயும் என்னோடு வருவாயா ......?''

''நிச்சயமாக வருவேன், பூங்குழலி! நீ விரும்பினால் வருவேன். ஆனால் ஏன் நீ உன் மனத்தை இப்படியெல்லாம் குழம்ப விடுகிறாய்? எங்கெல்லாமோ வெகு தூரத்துக்குப் போய்விட்டாயே? முதலில் உன் அத்தையைக் கண்டு பிடித்துக் காப்பாற்ற வேண்டியதல்லவா முக்கியமான விஷயம்? அவளைப் பிடித்துக் கொண்டு போன துஷ்டர்களிடமிருந்து அவளை விடுதலை செய்ய வேண்டாமா? உன் தந்தை, அண்ணன் முதலியவர்களிடம் சொல்ல வேண்டாமா....?''

''அமுதா! என் அத்தை தெய்வீக சக்தி உள்ளவள். அவளுக்கு யாரும் எந்த விதமான கெடுதலும் செய்ய முடியாது. தமயந்தி வேடனை எரித்தது போல் கண் பார்வையினாலேயே எரித்து விடுவாள். ஆகையால் அவளைப் பற்றிக் கூட எனக்கு அவ்வளவு கவலை இல்லை. ஆனால் இந்தச் சோழ ராஜ்யத்தில் பட்டப் பகலில் இவ்வளவு பெரிய அக்கிரமம் நடக்கிறதே? — இதற்குப் பரிகாரம் தேடுவதே என் முக்கியமான வேலை! பராந்தகச் சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து இந்த நாட்டில் தர்ம ராஜ்யம் நடப்பதாகச் சொல்கிறார்கள். சுந்தரசோழரின் அரசாட்சியின் கீழ் சோழ நாட்டில் எந்தச் சிறு பெண்ணும் இரவு பகல் எந்த நேரத்திலும் பயமின்றிப் பிரயாணம் செய்யலாம் என்று பறையறைந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியெல்லாம் புகழ் பெற்ற ராஜ்யத்தில், ஒரு மூதாட்டியை,—காது கேளாத பேசத் தெரியாத ஒருபேதை ஸ்திரீயை,—பட்டப் பகலில் துஷ்டர்கள் பிடித்துக் கொண்டு போவதென்றால், அது எப்படிப்பட்ட அக்கிரமம்? என் அத்தையைப் பற்றிக்கூட எனக்கு அவ்வளவு கவலை இல்லை. இன்றைக்கு என் அத்தைக்கு நேர்ந்தது நாளைக்கு இந்த நாட்டில் உள்ள கன்னிப் பெண்கள் பலருக்கும் நேரலாம் அல்லவா?''

சேந்தன் அமுதன் இப்போது குறுக்கிட்டு, ''ஆமாம்; அத்தகைய அபாயம் இந்த நாட்டில் இப்போது இருக்கத்தான் இருக்கிறது. சுந்தர சோழர் நோயாளியாகிப் படுத்ததிலிருந்து சோழ நாட்டில் தர்மம் தலைகீழாகி விட்டது. கட்டுக் காவல் அற்றுப் போய்விட்டது. கன்னிப் பெண்களுக்கு அபாயம் எங்கே என்று காத்திருக்கிறது. ஆகையால் கன்னிப் பெண்கள் கூடிய சீக்கிரம் கலியாணம் செய்து கொண்டு விடுவதுதான் நல்லது!'' என்றான்.

பூங்குழலி கலகலவென்று சிரித்தாள்.

''அமுதா! ஒரு கன்னிப் பெண் உன்னைக் கல்யாணம் செய்து கொண்டால் அவளை உன்னால் காப்பாற்ற முடியுமா? உனக்குக் கத்தி எடுத்துப் போர் செய்யத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''மலர் எடுத்து மாலை தொடுக்கவும் பதிகம் பாடிப் பரமனைத் துதிக்கவும் தான் நான் கற்றிருக்கிறேன். கத்தி எடுத்து யுத்தம் செய்ய நான் கற்கவில்லை. அதனால் என்ன? துடுப்புப் பிடித்துப் படகு தள்ள நீ எனக்குக் கற்றுக் கொடுத்து விடவில்லையா? அது போல் வாள் எடுத்துப் போர் செய்யவும் கற்றுக் கொண்டு விடுகிறேன். மதுராந்தகத்தேவர் சிங்காதனம் ஏறி ராஜ்யம் ஆள ஆசைப்படும்போது நான் கத்திச் சண்டை கற்றுக் கொள்வது தானா முடியாத காரியம்?'' என்றான் சேந்தன் அமுதன்.

இதற்குள் பூங்குழலியின் அண்ணியைக் கட்டிப்போட்டிருந்த மரத்தடிக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அங்கே அந்த மாதரசியைக் காணவில்லை. அவளுடைய மண்டையில் பட்ட காயத்திலிருந்து தரையில் சிந்தியிருந்த இரத்தத் துளிகளைச் சேந்தன் அமுதன் பூங்குழலிக்குச் சுட்டிக் காட்டினான்.

''நன்றாய் அடித்துவிட்டிருக்கிறார்கள். அத்தையைப் பிடித்துக்கொண்டு போனவர்களுக்கு அண்ணி உளவு சொல்லவில்லை என்பது நிச்சயமாகிறது. ஆனால் அவள் வேறு யாருக்காக என்ன உளவு பார்த்துக் கொண்டிருந்தாள் என்பதை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும்!'' என்றாள் பூங்குழலி.

''மாமன் மகளே! இதைக் கேள்! இங்கே நடந்திருப்பதெல்லாம் காரணம் தெரியாத மர்மமான காரியங்களாயிருக்கின்றன. எல்லாம் இராஜாங்கத்தோடும் இராஜ வம்சத்தாரோடும் சம்பந்தப்பட்ட சிக்கல்களாக இருக்கின்றன. இவற்றைக் குறித்து நீயும் நானும் ஏன் கவலைப்பட வேண்டும்?

நம்மை நாமே ஏன் சங்கடத்துக்கு உள்ளாக்கிக் கொள்ள வேண்டும்?''

''அமுதா! எவ்வளவு பெரிய இராஜாங்க விஷயமாக இருந்தால் என்ன? எத்தகைய மர்மமாக இருந்தால்தான் என்ன? என் அத்தை சம்பந்தப்பட்ட காரியத்தில் நான் கவலை எடுத்துப் பாடுபடாமலிருக்க முடியுமா? உன் பெரியம்மாவின் கதியைப் பற்றி நீ சிந்திக்காமலிருக்க முடியுமா?''

''என் மனத்தில் பட்டதை நான் சொல்கிறேன், பூங்குழலி! நான் பார்த்த ஏழெட்டு மனிதர்களுக்கு நடுவே ஒரு பெண் பிள்ளையும் சென்றாள் என்று சொன்னேன் அல்லவா? அவள் என் பெரியம்மாவாக இருக்கக்கூடும் என்றும் சொன்னேன் அல்லவா? அவள் நடந்து போன விதத்தைப் பார்த்தால், கட்டாயப்படுத்தி அவளை அழைத்துப் போனதாகத் தோன்றவில்லை. தன் இஷ்டத்துடனே யதேச்சையாகச் சென்றவள் போலவே காணப்பட்டது...''

''இருக்கலாம், அமுதா! அப்படியும் இருக்கலாம். என் அத்தையின் இயல்பே அப்படி! எங்கேதான் அழைத்துப் போகிறார்கள் என்று தெரிந்து கொள்வதற்காக அவளே இஷ்டப்பட்டுப் போயிருக்கலாம். அவளுக்கு விருப்பமில்லாவிட்டால், ஆயிரம் பேருக்கு நடுவிலிருந்தும் அவள் தப்பி விடுவாள். பாதாளச் சிறைகளும் கூட அவளைப் பத்திரப்படுத்தி வைக்க முடியாது. ஆகையினால்தான் அத்தைக்கு நேர்ந்த ஆபத்தைப் பற்றி நான் அவ்வளவு கவலைப்படவில்லை யென்று சொன்னேன். அத்தைக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பரிகாரம் தேடுவதே என் முக்கிய நோக்கம். அந்த அநீதி இன்றைக்கு இழைக்கப்பட்டதன்று; இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் செய்யப்பட்ட கொடும் அநீதி! அதற்குப் பரிகாரம் கிடைக்கும் வரையில் எனக்கு நிம்மதி இல்லை'' என்றாள் பூங்குழலி.

''கடவுளே! எவ்வளவு அசாத்தியமான காரியத்தில் உன் மனத்தைப் பிரவேசிக்க விட்டிருக்கிறாய்?'' என்று சேந்தன் அமுதன் கூறி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

சற்றுத் தூரத்தில் பேச்சுக் குரல் கேட்டது. அண்ணி ராக்கம்மாளுடன் பேசிக் கொண்டிருப்பவன் பழையாறை வைத்தியர் மகன் என்று அறிந்ததும் பூங்குழலியின் முகத்தில் அருவருப்பின் அறிகுறி காணப்பட்டது.

ராக்கம்மாள் பூங்குழலியைப் பார்த்ததும், ''அடி பெண்ணே! பிழைத்து வந்தாயா?! உன்னைக் கொன்று போட்டிருப்பார்களோ என்று பயந்து போனேன். இதோ பார்! உன் அத்தையைக் காப்பாற்ற முயன்றதில் என் மண்டையில் எவ்வளவு பெரிய காயம்? வைத்தியர் மகனிடம் காயத்துக்கு மருந்து ஏதேனும் இருக்கிறதா என்று கேட்டுக் கொண்டிருந்தேன்'' என்றாள்.

''கரையர் மகளுக்கு ஏதேனும் காயம் பட்டிருந்தாலும் மருந்து போட்டுக் குணப்படுத்துகிறேன்'' என்றான் வைத்தியர் மகன்.

பூங்குழலி அவனுக்கு மறு மொழி சொல்லாமல், ''அண்ணி! அத்தையைப் பிடித்துக் கொண்டு போனவர்கள் எந்தப் பக்கம் போனார்கள்? உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''நான் பார்க்கவில்லை. தஞ்சாவூர்ச் சாலையோடு போனதாக இந்த வைத்தியர் மகன் சொல்லுகிறான்...''

''அண்ணி! நானும் அமுதனும் அத்தையைத் தொடர்ந்து போகிறோம். அப்பாவிடம் சொல்லிவிடு! வா, அமுதா!'' என்று பூங்குழலி அங்கிருந்து உடனே போகத் தொடங்கினாள்.

அப்போது வைத்தியர் மகன் ''பூங்குழலி! சற்று நில்! உங்களால் அவர்களைத் தொடர்ந்து போக முடியாது. இங்கிருந்து சற்றுத் தூரத்தில் காத்

திருந்த குதிரைகள் மீதேறி அவர்கள் போகிறார்கள். என்னிடம் குதிரை இருக்கிறது. நான் வாயு வேக மனோ வேகமாய்க் குதிரையை விட்டுக் கொண்டு சென்று அவர்கள் போய்ச் சேரும் இடத்தைக் கண்டுபிடித்து உங்களுக்குச் சொல்வேன். அதற்குப் பிரதியாக நீ எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். நீயும் உன் அத்தையும் படகில் ஏறிக் கொண்டு எங்கே போவதற்குக் கிளம்பினீர்கள்? அதை மட்டும் சொல்லிவிடு!'' என்றான்.

பூங்குழலி, ''அண்ணி! இவருடைய உதவி எங்களுக்குத் தேவையில்லை! நாங்கள் போகிறோம். அப்பாவிடம் மட்டும் சொல்லிவிடு!'' என்றாள்.

வைத்தியர் மகன் அப்போதும் விடவில்லை. ''ஆகா! கரையர் மகளின் கர்வத்தைப் பார்! என் உதவி தேவை இல்லையாம்! பெண்ணே! உனக்கு ஏன் என்பேரில் இத்தனை கோபம்? நீ அரச குமாரனைக் கலியாணம் செய்துகொள்வதை நானா குறுக்கே நின்று தடுத்தேன்? என்னை வஞ்சித்து ஏமாற்றி விட்டுப் படகில் ஏற்றிக் கொண்டு போனாயே? அந்த வாணர் குலத்து வந்தியத் தேவன் அல்லவா உன் ஆசைக்குகந்த இராஜ குமாரனை நடுக் கடலில் தள்ளிக் கொன்று விட்டான்? என்பேரில் கோபித்து என்ன பயன்?'' என்று கூறி, 'ஹா ஹா ஹா' என்று பேய்ச் சிரிப்பு சிரித்தான்.

பூங்குழலி கண்களில் தீப்பொறி பறக்க அவனை ஒரு தடவை விழித்துப் பார்த்துவிட்டு, அமுதனுடைய கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சாலையோடு மேலே சென்றாள்.

கொஞ்சதூரம் போனதும், ''அமுதா! நீ கத்தி எடுத்துப் போர் செய்யக் கற்றுக் கொண்டதும் முதலில் இந்தத் தூர்த்தனாகிய வைத்தியர் மகனின் உயிரை வாங்க வேண்டும்!'' என்றாள்.

* * *

இரவும் பகலும் வழி நடந்து பூங்குழலியும் சேந்தன் அமுதனும் தஞ்சாவூரை நோக்கிச் சென்றார்கள். ஏழெட்டுக் குதிரை வீரர்கள் ஒரு பெண்மணியை அழைத்துச் சென்றதைக் குறித்து வழியில் விசாரித்துக் கொண்டு போனார்கள். பாதி வழி வரையில் கொஞ்சம் தகவல் கிடைத்தது. அப்புறம் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆயினும் தஞ்சாவூர் வரையிலும் போய்த் தேடிப் பார்த்து விடுவது என்று போனார்கள்.

சேந்தன் அமுதனுக்கு இந்தப் பிரயாணம் வெகு உற்சாகமாக இருந்தது. பூங்குழலியுடன் பேசிக் கொண்டு சென்றது உற்சாகத்துக்கு ஒரு காரணம்; கத்திப் பயிற்சி கற்றுக் கொண்டே போனது மற்றொரு காரணம். கோடிக்கரைக்கு அருகிலேயே பூங்குழலிக்குத் தெரிந்த ஒரு கொல்லுப் பட்டறையில் அவன் ஒரு கத்தி வாங்கிக் கொண்டிருந்தான். வழியில் அவ்வப்போது பூங்குழலி அவனுக்குக் கத்தியை இப்படிப் பிடித்துக் கொள்ள வேண்டும், இப்படிச் சுழற்ற வேண்டும் என்று கற்பித்துக் கொடுத்துக் கொண்டு வந்தாள்.

இதனால் இரண்டு பேருக்குமே பிரயாணம் உற்சாகமாக இருந்தது.

தஞ்சாவூர்க் கோட்டை கண்ணெதிரே தென்பட்டபோதுதான் வந்த காரியத்தை எப்படிச் சாதிப்பது என்ற கவலை பூங்குழலிக்கு ஏற்பட்டது. அவளுடைய கவலையைச் சேந்தன் அமுதனும் சேர்ந்து பகிர்ந்து கொண்டான்.

கோட்டைக்குள் பிரவேசிப்பதே பிரமப் பிரயத்தனமான காரியமாயிற்றே? பூங்குழலி எண்ணியுள்ள காரியங்களையெல்லாம் எப்படி நிறைவேற்றுவது?

வந்தியத் தேவனுடைய அகட விகட சாமர்த்தியங்களெல்லாம் சேந்தன் அமுதனுக்கு நினைவு வந்தன. அவனுடைய சாமர்த்தியங்களில் பத்தில் ஒரு பங்கு தனக்கு இருக்கக் கூடாதா? அல்லது அந்த வந்தியத்தேவனே இந்தச் சமயம் இங்கே வரக் கூடாதா?....

வந்தியத்தேவனாயிருந்தால் இந்தச் சந்தர்ப்பத்தில் எப்படி நடந்துகொள்வான் என்று சேந்தன் அமுதன் சிந்திக்கத் தொடங்கினான்.

அச்சமயத்தில் சாலையில் மூடு பல்லக்கு ஒன்று வந்தது. சூரியன் மேற்குத் திசையில் மறைந்து இருள் சூழ்ந்து வந்த நேரம். மூடு பல்லக்கின் மேல் திரையில் பனைமரச் சித்திரங்கள் காணப்பட்டன.

''ஆகா! பழுவூர் இளைய ராணியின் பல்லக்குப் போலல்லவா காண்கிறது? கோட்டைக்கு வெளியிலேயே பழுவூர் ராணியைச் சந்தித்து முத்திரை மோதிர இலச்சினையைப் பெற முடியுமானால் எவ்வளவு சௌகரியமாயிருக்கும்?'' என்று அமுதன் எண்ணினான். இதைப் பூங்குழலியிடமும் வெளியிட்டான். அவளும் அது நல்ல யோசனைதான் என்று சொன்னாள்.

ஆனால் மூடு பல்லக்கின் உள்ளே இருக்கும் ராணியை எப்படிப் பார்ப்பது?

சிவிகைக்கு முன்னும் பின்னும் காவலர்கள் போகிறார்களே?

''அமுதா! கவலைப்படாதே! தஞ்சாவூர்க் கோட்டை இன்னும் அரைக்காதம் இருக்கிறது. அதற்குள் நமக்கு ஏதேனும் சந்தர்ப்பம் கிட்டாமல் போகாது!'' என்றாள் பூங்குழலி.

எதிர்பாராத விதத்தில் அச்சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிட்டியது. **(தொடரும்)**

ரகுபதி ராகவ

* மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி



43 – (II)

பகவத் கீதையில் செய்யப்பட்ட உபதேசத்துக்கும் ஏசுநாதர் குன்றின் மேல் நின்று செய்த உபதேசத்துக்கும் ஒரு வேற்றுமையும் இல்லை. உள்ளத்தில் பதியும்படியாக ஏசுநாதர் சொன்ன உண்மைகளே பகவத்கீதையிலும் சூத்திரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பகவத் கீதையானது மானச தர்மத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு வைராக்கியத்தின் மேன்மையை நிரூபிக்கிறது. பௌதிக சாஸ்திரத்தில் உண்மைகளை நிரூபித்துக் காட்டுவதுபோல் பற்று நீக்கி வாழ்க்கை நடத்துவதே மேலான வழி என்று விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இதையே குன்றின் மேல் நின்று ஏசுநாதர் மிக அழகான மொழிகளில் உபதேசித்திருக்கிறார். பைபிளில் பழைய சுவிசேஷம் என்று சொல்லப்படும் பூர்வ பாகத்தில் காணப்படும் சில பகுதிகள் எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் புதிய சுவிசேஷம் என்று சொல்லப்படும் பிற்பகுதி என்னுடைய உள்ளத்துக்கு அளவுகடந்த சாந்தியும், எல்லையற்ற மகிழ்ச்சியும் தந்தது. இன்று எக்காரணத்தினலாவது திடீர் என்று பகவத் கீதை மக்களுக்குக் கிடைக்காமல் மறைந்து போனாலும், அதில் சொல்லப்பட்டதனைத்தையும் அனைவரும் மறந்துவிட்டு அழிந்தே போனதாக ஏற்பட்டாலும், ஏசுநாதருடைய வாக்கியங்கள் மட்டும் இருந்தாலே போதும். கீதையில் நான் அடையும் மகிழ்ச்சியையும் சாந்தியையும் பைபிளினின்று அடைவேன்.


(யங் இந்தியா 22-12-27)

கிறிஸ்து மதம், பௌத்த மதம், ஹிந்து மதம் — இவற்றைப் போலவே இஸ்லாம் மார்க்கமும் சாந்தி மார்க்கமாகும். பேதங்கள் இல்லை என்று நான் சொல்லவில்லை. சமயக் கொள்கைகளில் வேறுபாடுகள் உண்டு. ஆனால் இச்சமயங்கள் அனைத்துக்கும் நோக்கம் ஒன்றே.

(யங் இந்தியா 20-1-27)

பாரத நாட்டின் ஆத்மீகச் செல்வம் இஸ்லாம் மார்க்கத்தினின்று இருவிதத்தில் லாபம் அடைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆண்டவன் ஒருவனே, கடவுள் ஒன்று என்பதைப் பற்றி எள்ளளவும் குழப்பமின்றி உறுதியாக ஊர்ஜிதப்படுத்தியது இஸ்லாம் நமக்குச் செய்த ஒரு பணி. மக்களிடையே சகோதர சமத்துவத்தை வாழ்க்கையில் நடத்திக் காட்டியது இரண்டாவது பணி. இந்த இரண்டு பணிகளையும் நான் பெரிதாகக் கருதுகிறேன். ஹிந்து சாஸ்திரத்திலும் சகோதர சமத்துவம் இருக்கிறது. ஆயினும் அதைப் பலவிதமாகக் குழப்பிவிட்டிருக்கிறார்கள். வேதாந்தமாகச் சமத்துவம் சொல்லுகிறார்களேயொழிய, வாழ்க்கையில் சகோதர தர்மம் பழுதுபட்டிருக்கிறது. அதைப் போலவே, ஹிந்து சமயங்களில் கடவுள் ஒன்றேயாயினும் ஆசரணையில் பல தெய்வங்களை வைத்துக் கொண்டு வழிபடுவதால் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஈசன் ஒருவனே என்று இஸ்லாம் மார்க்கத்தில் வேற்றுமைக்கு இடம் தராமல் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வழியில் பாரத நாட்டின் பண்பாடு இஸ்லாம் மார்க்கத்தினின்று லாபம் அடைந்திருக்கிறது என்று சொல்லலாம்.

(யங் இந்தியா, 21-3-29)



அமுல் மில்க் பவுடர் கைவசம் இருந்தால் நல்ல பாலுக்குப் பஞ்சமே இல்லை

பருகி மகிழப் பால் பலவிதம்: சூடான பால். ஐஸ் பால். மால்டெட் பால். மில்க் ஷேக். தானியத்தில் பால். தேநீரில் பால். காபியில் பால். பாயசத்தில் பால். கீரிலே பால். கஸ்டர்டில் பால். கறிகளில் பால். தயிராகப் பால். மோராகப் பால்.

வீட்டிலேயே பால் பண்ணை இருப்பதற்கு ஈடு

அமுல் மில்க் பவுடர் உபயோகிக்க ஆரம்பித்து விட்டீர்களானால், இந்நாள் வரை ஏன் கஷ்டப்பட்டோம் என்று வருந்துவீர்கள். நல்லபாலே நிச்சயமாகப் பெறும் வாய்ப்பு எவ்வளவு வசதியானது. உங்களுக்கோ பல்வேறு உபயோகங்களுக்கு நல்ல பால் தேவைப்படுகிறது. அமுல் மில்க் சுவையானது. தேநீர், காபி மற்றும் இதர பானங்களுடன் கலவுங்கள். உங்கள் இச்சைக்கினிய பால் இனிப்புகளுக்கும், புட்டிங்குகளுக்கும் ஏற்றது. பிக்னிக், பிரயாணம், விடுமுறைகளின் போது சமய சஞ்சீவி!



கலக்க எளிதான அமுல் மில்க்: 10 டேபிள் ஸ்பூன் அமுல் மில்க் பவுடரை இளம் வெந்நீரில் விழுதாக்கிக் கொள்ளுங்கள். ஒரு லிட்டர் பாலாகும் வரை வெந்நீரைச் சேருங்கள். ஒரு கோப்பை பாலுக்கு 2½ டேபிள் ஸ்பூன் அமுல் மில்க் பவுடர் உபயோகியுங்கள்.

கெட்டியான ஆடைத் தயிர்: அமுல் மில்க் பவுடரிலிருந்து தயாரித்த பாலைக் கொதிக்கும் வரை சூடாக்குங்கள். வெதுவெதுப்பு நிலைக்கு ஆற விடுங்கள். 1/2 அல்லது 1 டேபிள் ஸ்பூன் நல்ல தயிரை சேர்த்துக் கிளறுங்கள். அப்படியே தோய விடுங்கள்.

அமுல்

மில்க் பவுடர்—வீட்டிலேயே பால் பண்ணை இருப்பதற்கு ஈடு

ASP/AMP-2

10

ஹெலிகாப்டர்கள் கீழே இறங்கி விட்டன



இந்திரா பார்த்தசாரதி

பானர்ஜி நகைப்புடன், "உன்னையும்... என்றால் என்ன?" என்று கேட்டான்.

"என்னையே நான் வெறுக்கத் தொடங்கியாகி விட்டது..."

பானர்ஜி சிரித்தான். "மிகவும் தேய்ந்து போன வார்த்தைகள். உன் நிழலைக் கண்டே பயந்து, இது மனச் சாட்சி பிரச்னையாக நினைத்துக் கொள்கிறாய் நீ. உன்னை நீயே வெறுத்துக் கொள்வதுதான் உன் 'ஈகோ'வைத் திருப்திப் படுத்தும் என்றால் யார் அதற்கு ஆட்சேபணை சொல்ல முடியும்?"

"உன்னுடன் சில விஷயங்கள் பற்றிப் பேசலாம் என்றிருக்கிறேன். பேசலாமா?"

"நீ இங்கு வரும்போதே எனக்குத் தெரியும்.... சரி, ஆரம்பி!...."

"சிகரெட் இருக்கிறதா?" என்று கேட்டான் அமிர்தம்.

"சிகார் இருக்கிறது....."

"சரி.... கொடு...."

அமிர்தம் சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். புகையை இரண்டு, மூன்று தடவை நெஞ்சு வரையில் இழுத்து விட்டு, சிறிது கனைத்துக் கொண்டே பேச ஆரம்பித்தான்.

"எனக்குத் திருமணம் ஆவதற்குமுன் நான் ஒரு பெண்ணுடன் சிநேகிதமாக இருந்தேன் என்பதை உனக்குச் சொல்லியிருக்கிறேன் என்று நினைக்கிறேன்....."

பானர்ஜி தலையை ஆட்டினான்.

"சில நாட்களுக்குமுன் ஒரு தமிழ் நாடகத்துக்குச் சென்றிருந்தேன். அதில் நடித்த ஒரு பெண் என் பழைய சிநேகிதியைப் போலவே இருந்தாள். என் அடிமனத்தில் புதைந்து கிடந்த பல உணர்ச்சிகளை இது சிலிர்த்தெழச் செய்தது. என் மனைவியுடன் வாழ்ந்து வரும், சமூக தர்மத்துக்கு உட்பட்ட ஆனால் போலித்தனமான வாழ்க்கையில் எரிச்சல் ஏற்பட்டது. தன்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணுடனும் தன் கணவனுக்குச் சிநேகிதம் இருந்திருக்க முடியாது என்று பிடிவாதமாக நம்பி வந்த என் மனைவியிடம், என்னுடைய பழைய சிநேகிதத்தைப் பற்றிச் சொல்லி, அவளை அதிர்ச்சிக்குள்ளாக்கினேன். நாடகத்தில் நடித்த அந்தப் பெண்ணை மறுபடியும் சந்திக்க நேர்ந்தது. இதுவரையில் பொய்யுடன் சமரஸம் செய்து கொண்டு வாழ்ந்த நான் உண்மையைச் சொல்ல வேண்டும் என்பதற்காக அவளைச் சந்தித்ததைப் பற்றியும் என் மனைவியிடத்துச் சொன்னேன். கீறல் விழுந்து விட்டது; ஒட்டுப் போட்டுக் கொண்டு ஒன்றும் நடக்கவில்லை என்று ஒருவரையொருவர் ஏமாற்றிக் கொள்ள முயல்கிறோம்...."

அப்பொழுது சமையற்காரன் அங்கு வந்து நின்றான். அவன் வரக் கண்ட அமிர்தம் பேச்சை நிறுத்தினான்.

"என்ன வேண்டும்?" என்று அவனைப் பானர்ஜி கேட்டான்.

"பாபுஜி இங்குதான் சாப்பிடுகிறாரா?' என்று கேட்டான் சமையல்காரன்.

பானர்ஜி அமிர்தத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னான்: "ஆமாம்..."

அமிர்தம், அவன் அவ்வாறு சொன்னதை மறுக்கவில்லை.

"நீ என்னுடன் சாப்பிடப் போவதாக உன் மனைவியிடம் சொல்லிவிட்டு வந்தாயா?" என்றான் பானர்ஜி.

"ஆமாம்."

பானர்ஜி புன்னகை செய்தான்.

"நீ சொல்லுகிறபடி நான் மிகவும் பலஹீனமானவன். யதார்த்தத்தை நேருக்கு நேர் சந்திக்கும் துணிவு எனக்

இல்லை. நாடகத்தில் நடித்த அந்தப் பெண்ணுக்கும் என்னிடம் ஓரளவு ஈடுபாடு உண்டு என்று எனக்குப் பட்டது. அவள் என்னிடம் தன்னை வீட்டுக்கு வந்து அழைத்துச் செல்லும்படி இன்று காலை சொன்னாள். புத்தா பார்க் போவதாக இருந்தோம். அவள் வீட்டுக்குச் சென்று வாசலில் தயங்கி நின்றேன். அப்பொழுது அங்கே சந்தித்த வேறொருவருடன் அவர் வீட்டுக்குப் போய் ஒரு சராசரி மத்தியதரத் தமிழ்க் குடும்பத்துடன் சிறிது நேரம் தங்கியிருந்தது ஆறுதலாக இருந்தது. அவர் வீட்டிலிருந்து திரும்பி வந்தபோது, அந்தப் பெண்ணின் வீடு பூட்டியிருந்தது. என் மனைவியிடம் சொன்ன பொய்யைக் காப்பாற்ற உன்னைப் பார்க்க வந்தேன்.

பானர்ஜி சொன்னான்: ''இன்னும் எனக்கு உன் பிரச்னை என்னவென்று புரியவில்லை....''

''பார்க்கப் போனால் நான்தான் உன்னைக் கேட்க வேண்டுமென்று நினைத்தேன், என் பிரச்னை என்னவென்று!''

''உன் பிரச்னை நீதான்...'' என்றான் பானர்ஜி நிதானமாக.

''எனக்குப் புரிகிறது... ஒவ்வொருவருடைய குணச் சித்திரமும் அவருக்கு விதியாக அமைவதை யாராலும் மாற்ற முடியாது...''

''ஷேக்ஸ்பியரின் கதாபாத்திரங்கள் மாதிரி தனிமொழியில் இறங்க ஆரம்பித்துவிடாதே... ஒரு பெண்ணைக் காதலித்தாய், கைவிட்டாய். இன்னொரு பெண்ணை மணந்தாய். பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு போலி வாழ்க்கை அது இது என்று வேறொருத்தியைக் கண்ட அநுபவமாகிய போதி மரத்து நிழலில் உனக்கு ஞானோதயம் ஏற்பட்டிருக்கிறது. உன் பலஹீனத்தை ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் தீர்மானம் செய்ய முடியாத கையாலாகாத்தனத்துக்குக் குணச்சித்திரம், விதி என்று ஏதேதோ சொல்லி மனச் சமாதானம் அடைகிறாய்... உன்னைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது'' என்றான் பானர்ஜி.

''என்னை வரச் சொல்லிவிட்டு அவள் ஏன் வீட்டைப் பூட்டிக் கொண்டு சென்றாள், எனக்குத் தெரியவில்லை. அவளும் அவள் தாயும்தான் வீட்டில் இருக்கிறார்கள். அவள் தாய் கணவனை விட்டுப் பல வருஷங்களுக்கு முன்பே பிரிந்து வந்தவள். பெண் தாயை வெறுக்கிறாள், அநுதாபமெல்லாம் தந்தையிடத்துத்தான். தந்தையும் இப்பொழுது இல்லை. இறந்துவிட்டார். அவள் என்னிடத்து ஈடுபாடு கொள்வதற்குக் காரணம் என்னவென்று எனக்கு முதலில் புரியவில்லை. யோசித்துப் பார்க்கும் போது...'' என்று சொன்ன அமிர்தத்தை இடைமறித்தான் பானர்ஜி: ''யு மீன் ஃபாதர் இமேஜ்...''

''நீ ரொம்பக் குரூரமான மனிதன்! ஆமாம்!'' என்றான் அமிர்தம்.

பானர்ஜி புன்முறுவல் செய்தான்.

அமிர்தம் அணைந்துபோன பாதிச் சுருட்டைப் பற்றவைப்பதற்காக நெருப்புப் பெட்டியை எடுத்தான். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டு அதைக் கீழே வைத்தான்.

''நான் என்ன செய்யலாம் என்று சொல்லுகிறாய்?'' என்று அவன் பானர்ஜியைக் கேட்டான்.

''எதைப் பற்றி?''

''அந்தப் பெண்ணுக்கு உண்மையிலேயே என்னிடம் ஈடுபாடு இருக்கிறது என்று நிலைமை ஏற்பட்டு விட்டால், என்ன செய்யலாம் என்று சொல்லுகிறாய்?''

''நீ என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறாய்?''

''என்னுடைய இளமையை மீண்டும் வாழ வேண்டுமென்று விரும்புகிறேன்... அதே சிந்தனையை, அதே கற்பனையை அதே செயல் துடிப்பை மீண்டும் நடைமுறையாக்கி வாழ முடியுமா என்பதுதான் என் பரிசோதனை... கடந்து போன சரித்திரத்தை நிகழ்காலமாக்க இயலுமா என்பதுதான் என் அவா. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு யயாதி ஒளிந்து கொண்டிருக்கிறான்.''

பானர்ஜி எழுந்திருந்தான். ''சரி, சாப்பிடலாமா?''

''என்ன பதில் சொல்லாமல் 'சாப்பிடலாமா' என்று கேட்கிறாய்?''

''நீ எதைச் செய்வதாக இருந்தாலும் நாணயமாகச் செய்... இதற்கு மேல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.. எனக்கு இப்பொழுது பசிக்கிறது... இதுதான் பிரத்யட்ச உண்மை...''

பானர்ஜி எழுந்து உள்ளே போனான்.

அமிர்தம் அன்றிரவு வேண்டுமென்றே நேரம் கழித்து வீட்டுக்கு



வந்தான். அவன் வந்தபோது கித்வாய் நகர் முழுதும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. ஒரு வீட்டிலாவது விளக் கில்லை. எதிர்த்தாற்போல் மெடிக்கல் - இன்ஸ்டிட்யூட் கட்டடத்தில் பல அறைகளில் விளக்கு எரிந்து கொண் டிருந்தது. இந்தக் கணத்தில் அங்கு எவ்வளவு பேர் இறந்து கொண்டிருப்பார்களோ? பக்கத்தில் சப்தர்ஜங் ஆஸ்பத்திரியில் இதற்கு ஈடு செய்யும் வண்ணம் பிறப்பு நிகழலாம்... இயற்கைக்கு ஓய்ச்சல் ஒழிவில்லை.

அவன் வீட்டில் வராந்தாவில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அறைகளெல்லாம் இருட்டாக இருந்தன.

அன்று பௌர்ணமியாக இருக்க வேண் டும். நிலவொளி விடிந்துவிட்டதோ என்று நினைக்கும்படியான மயக்கத்தைத் தந்தது.



துணிக்கு இஸ்திரி போடுபவன் மாடிப் படியருகே படுத்துக் கொண்டிருந்தான். அவனருகே அவனுடைய தள்ளுவண்டி.

''கோன் ஹை?''

''ஹோயா ஹை, கனிலால்?'' என்று கேட்டான் அமிர்தம்.

''பாபுஜி நமஸ்தே...''

அவன் 'காலிங் பெல்'லை அழுத்தியதும் உள்ளிருந்து திலகத்தின் குரல் கேட்டது. ''கோன் ஹை?''

''நான்தான்...''

திலகம் விளக்கைப் போடாமலேயே திறந்தாள். அமிர்தம் உள்ளே நுழைந்ததும் கதவைத் தாளிட்டான்.

அவன் தன்னறைக்குச் சென்று உடைகளை மாற்றிக் கொண்டு வந்தபோது திலகம் படுத்துக் கொண்டு விட்டாள்.

''நீ என்ன நினைச்சிக்கிட்டிருக்கே?... எதுக்கு ஃபோன் பண்ணினே?'' என்று கேட்டான் அமிர்தம்.

''சும்மாத்தான், வர நேரமாகுமான்னு கேட்க.. நேரம் கழிச்சுத்தானே வந்திருக்கீங்க, மணி என்னவுது?''

''உனக்கென்ன அவ்வளவு சந்தேகமா என்பேரிலே? நான் பானர்ஜி வீட்டிலே இல்லேன்னு என்ன செய்திருப்பே?''

''அதான் அங்கே இருந்தீங்களே, இல்லேன்னு என்ன செய்திருப்பேங்கறது. அப்போ, அந்த நிலைமை ஏற்படறப்போ பார்த்துப்போம்.. இப்போ படுத்துத் தூங்குங்க, குறைச்சலாத் தானே சாப்பிட்டீங்க...''

''நான் இனிமே வெளியே போறப்பு எல்லாம் எங்கே போறேன்னு சொல்லிட்டுப் போக வேண்டிய அவசியமில்லே, தெரிஞ்சுதா?... நீயும் இனி மேல் எங்கே வேணுமானாலும் போகலாம், நான் கேட்கப் போவதில்லே...''

''ஆமாம், அந்தப் பொண்ணு ஏன் ஃபோன் பண்ணினு?''

அமிர்தத்துக்குச் சற்றுத் தூக்கிவாரிப் போட்டது. நல்லவேளை, விளக்கில்லை.

''எந்தப் பொண்ணு?''

''அதான், அந்தப் பொண்ணு பானு... நீங்க இருக்கீங்களான்னு கேட்டாள். இல்லேன்னேன். சும்மாத் தான் போன் பண்ணேன்னு சொன்னுள்... அவ எதுக்கு உங்களுக்கு போன் பண்ணனும்? இந்த நம்பர் எப்படித் தெரியும்?''

''நம்பரா? நான்தான் சொன்னேன். எப்போ போன் பண்ணினு?''

''எதுக்காகக் கேக்கறீங்க? அவன் போன் பண்ணப்போ வீட்டிலே இல்லியேன்னு வருத்தமா?''

''நான்சென்ஸ்.... அவள் அம்மாவுக்கு உடம்பு சரியில்லையோ என்னவோ? ஏதானும் உதவி வேண்டி போன் செய்திருந்தால் ....''

''உதவி வேண்டி உங்களுக்குத்தான் போன் செய்யணுமா? அவள் மாதிரி இருக்கிற பொண்ணுங்களுக்கு உதவி செய்ய எவ்வளவோ பேர் போட்டி போட்டுக்கிட்டு வருவாங்க?...''

"'அவள் மாதிரி பொண்ணுங்களுக்கு' என்றால் என்ன அர்த்தம்?"

"நான் சொல்றதுதான் அர்த்தம்... பேசாமே படுத்துத் தூங்குங்க... காலையிலே பேசிக்கலாம்..."

பானு எதற்காக ஃபோன் செய்திருப்பாள்? தான் சென்று பார்த்தபோது இல்லை என்பதற்காக மன்னிப்புக் கோரவா? ஒருவேளை அவளுடைய அம்மாவுக்கு உண்மையிலேயே உடம்பு சரியில்லாமல் போயிருக்குமோ? தான் முதலில் போனபோது அவள் வீடு பூட்டப்படவில்லை; பிறகு வீட்டைப் பூட்டிக் கொண்டு போய்விட்டாள். எங்கிருந்து போன் செய்திருப்பாள்? ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்திக்கலாம் என்று சொல்வதற்காகவா? அப்படியானால் எத்தனை மணிக்கு ஃபோன் செய்திருக்கக் கூடும்? — திலகத்தைக் கேட்கலாமா? — நேற்று இரவு மாதிரி ஒரு பூகம்பம் ஏற்படலாம்... அவன் பேசாமல் கட்டிலில் படுத்தான்.

அடுத்த நாள் அவன் ஆபீசுக்குப் போகும்போது அகில இந்திய ரேடியோ அலுவலகத்துக்குச் சென்று பானுவைப் பார்க்கலாமா என்று தோன்றிற்று.. அவள் எந்தப் பிரிவில் வேலை செய்கிறாள் என்று அவனுக்குத் தெரியாது. விசாரித்தால்தான் தெரியும். ஆபீசிலிருந்து போன் செய்வதென்பது முடியாத காரியம். நேரில் போய்ப் பார்த்தால்தான் நல்லது. யாரைப் போய்க் கேட்பது? 'ரிஸப்ஷனில்' தான் விசாரிக்க வேண்டும். அவனுக்குத் தெரிந்தவர்கள் பலர் அங்கு வேலையாக இருக்கிறார்கள். அவர்களுடைய பார்வையில் தான் படக் கூடாது... 'நீ எதைச் செய்வதாக இருந்தாலும் நாணயமாகச் செய்...' என்று பானர்ஜி கூறியது அவன் நினைவுக்கு வந்தது. இது நாணயம்தானா?... அட கடவுளே! நான் எவ்வளவு பலஹீனமாக இருக்கிறேன்!

அவன் அகில இந்திய ரேடியோ தோட்டத்துக்குள் காரை வெளியே நிறுத்திவிட்டு நுழைந்தான். அங்கே ஆச்சரியம் அவனை வரவேற்றது. பானு போய்க் கொண்டிருந்தாள்.

"பானு!..." அவன் மெதுவாகக் கூப்பிட்டான்.

அவள் திரும்பினாள். அவள் முகம் வியப்பினால் மலர்ந்தது. "என்ன ஆச்சரியம்! நீங்களா?"

"நேத்து உனக்கு என்னாயிற்று?"

"என்னை மன்னிச்சுடுங்கோ. இதைப் பற்றி உங்ககிட்டே நான் நிறையப் பேசணும்... எப்போ பார்க்கலாம்?"

"மறுபடியும் வந்து உன் வீடு பூட்டியிருக்கிறதைப் பார்க்கவா? நீ முன்பே எனக்கு முட்டாள் பட்டம் கட்டித் தீர்த்தாகிவிட்டது!"

அவன் அதை எதிர்பார்க்கவில்லை. பானு அவன் கைகளைப் பற்றிக்கொண்டாள். எவ்வளவு மிருதுவான ஸ்பரிசம்!

"உங்களுக்கு என்பேரில் நம்பிக்கையிருந்தால் இன்னிக்குச் சாயந்திரம்

கீதைக் கதைகள்



'எந்த வடிவத்திலும் நானேயான அம்சமும் கலந்து கிடக்கின்றது. அந்த அம்சம் ஒன்றிலே கூடியும் ஒன்றிலே குறைந்தும் காணப்படுகிறது என்பது மனப்பிராந்தியாகும்....'

6. நேர்

அந்த மக்காச் சோளத்துக்குத் தன் உருவம் கோரமானது என்ற மனக் குறை. நெஞ்சை முட்டி வழிந்தது. பாலாடையிலே கடைந்தெடுக்கப்பட்டதைப் போன்று கவர்ச்சிப் பொலிவு நாட்டும் மல்லிகைப் பூவைப் பார்த்துப் பெருமூச்சு விட்டது.

'இறைவன் ஓரவஞ்சகன். சிலவற்றுக்குச் சுந்தரஞ் சிந்தும் போக வடிவத்தையும் என்னைப் போன்ற சிலவற்றுக்குக் கோர வடிவத்தையும் வைத்திருக்கின்றான்....' - இந்த நினைவில் அதன் மனம் புழுங்கிச் சாம்பியது.

சோளத்தின் மனக் குறையை ஈசன் அறிந்தான். அதன் மாயையைப் போக்கும் கருணை அவன் உள்ளத்தில் சுரந்தது.

'சோளமே! நீ இவ்வாறு கவலுறுதல் முறை கேடானது. வடிவங்கள் அவையவற்றின் யோகத்தைப் பொறுத்தன. போக வடிவமும் கோர வடிவமும் யோக வடிவமும் என்னுடையவையே. எந்த வடிவத்திலும் நானேயான அம்சமும் கலந்து கிடக்கின்றது. அந்த அம்சம் ஒன்றிலே கூடியும் ஒன்றிலே குறைந்தும் காணப்படுகிறது என்பது மனப் பிராந்தியாகும்' என்றான் ஈசன்.

'ஈசனே! நீ சாமர்த்தியமாகப் பொய்யுரைக்கின்றாய். மல்லிகைப் பூவுக்கும் எனக்கும் ஒரே அம்சம் இருக்கின்றதா?' எனச் சோளம் அவலக் குரலில் சினந்தது.

'ஏன் இல்லை? எல்லாம் என் வடிவங்களே என்று பாவனை செய்து கொள்வதற்குப் பக்குவ முதிர்ச்சி தேவை...'

'பாவனை, பக்குவம் ஆகிய தத்துவக் கிளவிகளின் அர்த்தங்களை நான் அறிய மாட்டேன்...'

ஈசன் முறுவல் பூத்துத் தீயை மூட்டினான். தீயில் ஓடு ஏறிற்று. ஓட்டில் மணல் சூடாக வறுக்கப் பட்டது.

'சோளமே! ஓட்டில் இருக்கும் சுடு மணலிலே குதி' என்றான் ஈசன்.

'மாட்டேன். சுடு மணலிலே போட்டு என்னைக் கொல்லவா பார்க்கிறாய்?' எனச் சோளம் பரிதாபமாக அலறியது.

அதன் ஆட்சேபணையைப் பொருட்படுத்தாது, அதனைத் தூக்கிச் சுடு மணலிலே போட்டு ஈசன் வறுத்தெடுத்தான்.

மறுகணம் சோளம் மல்லிகைப் பூவைப் போன்று பால் நகை சிந்தி மலர்ந்தது. தன்னுள் மறைந்திருந்த இறையம்சத்தைத் தரிசித்த நிறைவில் குதூகலித்தது.

இந்த அற்புதத்துக்கான விளக்கத்தை அறியச் சோளம் அவாவுற்றது. அதற்கிடையில் ஈசன் மறைந்தனன்!

—எஸ். பொன்னுத்துரை

கனுட்ப்ளேஸ் ஹோட்டல் எதிலியாவது சந்திக்கலாம். உங்களோடு நான் அவசியம் பேசணும்!''

அமிர்தம் தன் கைகளை விடுவித்துக் கொள்ளாமல் அப்படியே சிறிது நேரம் நின்றான்.

''என்ன பார்க்கலாமா?'' என்றாள் பானு.

'' ஆகட்டும் ! பாலஸ் ஹைட்ஸ் போவோம்... நான் கரெக்டா ஆறு மணிக்குச் சந்திக்கிறேன்!''

பானுவின் முகத்தில் புன்னகை தோன்றியது. ''நான் சாயந்திரம் சொல்லப் போகிற விஷயங்களினால் அதிர்ச்சியடையக் கூடாது.''

''என்ன விஷயங்கள்?''

''சாயந்திரம் பார்ப்போம். பைபை'' அவள் போய்விட்டாள்.

அதிர்ச்சியைத் தரப் போகிற விஷயங்கள் என்ன சொல்லப் போகிறாள்?— 'இனிமேல் என்னைப் பார்க்க முயற்சி செய்யாதீர்கள்' என்றா? — 'நீங்கள் என் தந்தை மாதிரி' என்று சொல்லித் தனக்கே விளங்கும்படி அடையாளம் காட்டப் போகிறாளா? — திலகம் ஒரு வேளை அவளிடம் ஏதாவது சொல்லியிருக்கலாமோ? — நேற்று ஒன்றும் பேசவில்லை என்றுதானே திலகம் சொன்னாள்....?... அவள் அம்மாவைப் பற்றிய விஷயம் ஏதாவது இருக்குமோ? அல்லது பானு தான் யாரேனும் ஓர் இளைஞனிடம் தன் மனத்தைப் பறிகொடுத்து நிற்கிறாளா?— இருக்காது... பார்த்தால் பரிபக்குவம் அடைந்த மனமுடைய பெண்ணாகத் தான் அவள் தெரிகிறாள்....

அன்று அவனுக்கு ஆபீசில் வேலையே ஓடவில்லை. ஜாயிண்ட் செகரட்டரி அவனை ஒரு விவாதத்துக்காகக் கூப்பிட்டிருந்தார். அவன் பேசுவதிலிருந்தே அவன் மனம் வேலையில் இல்லை என்று அவர் புரிந்து கொண்டார்.

''உங்களுக்கு உடம்பு சரியில்லையா?'' என்று அவர் கேட்டார்.

''இல்லையே... சரியாகத்தானே இருக்கிறது'' என்றான் அமிர்தம். (தொடரும்)

தமிழ்த் தாத்தா ஏமாந்தார்!

31-8-70ல் தமது 75வது பிறந்த நாள் கொண்டாடும் மகா வித்வான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை முன்பொரு சமயம் தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாத அய்யருக்குப் பெரிய ஏமாற்றத்தை அளித்தார்; எப்படி ?

எதையும் தீரத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற இயல்புடையோருக்குப் பல ஐயங்கள் தோன்றுவது சகஜம். இப்படித் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் மாணவப் பருவத்திலேயே பல சந்தேகங்களைக் கிளப்பித் தம் நல்லாசிரியரான உயர்திரு கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்களுடன் அவற்றைப் பற்றி விவாதித்து உண்மை கண்டவர் திரு மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை. இவர் அவ்வப்போது எழுப்பும் வினாக்களைக் கண்டு இவர்தம் ஆசிரியர் பெருமான் 'எப்படியப்பா உனக்கு இவையெல்லாம் உதிக்கின்றன?' என்றே கூறி வியப்பார்!

சிறந்த தமிழறிஞரான மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை மாணவப் பருவத்தைக் கடந்து பின்னும் வித்வான் பரீட்சை எழுதும்போது மூன்றாவது வகுப்பில் தான் தேறினார் என்றால் அதை நம்புவதே கடினம்தான். இதற்குக் காரணம் மிகவும் உருக்கமான ஒரு சம்பவம்.

வித்துவான் தேர்வுக்கு இவர் தயாராகிக் கொண்டிருந்த காலம். 'பிரிலிமனரி' என்னும் முதற் சோதனையில் இவர் மாகாணத்திலேயே முதல்வராய்த் தேறினார். இவருடைய விடைத் தாளைத் திருத்தியவர் தாக்ஷிணாத்ய கலாநிதி மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத அய்யரவர்கள். 'இப்படிப்பட்ட விடைத் தாளைத் திருத்துவதென்றால் எவ்வளவு இன்பமாய் இருக்கிறது தெரியுமா?' என்றே ஐயரவர்கள் வியந்தாராம். முத்துப் போன்ற கையெழுத்து; வினாவுக்குரிய தெளிவான விடை. இந்த விடைத் தாளுக்குரியவர் இறுதித் தேர்விலும் மாகாணத்திலேயே முதல்வராய்த் தேறி அதற்குரிய பரிசான ஆயிரம் ரூபாயையும் நிச்சயம் பெறுவார்' என்றாராம், ஐயரவர்கள்.

ஆனால் விதியோ நகையாடிச் சதி செய்து விட்டது.

பொழுது விடிந்தால் பரீட்சை தொடங்கும். இவர் அன்னையாருக்கு அன்றைய இரவு உடல் நிலை கவலைக்கிடமளிப்பதாய் இருந்தது. பாடங்களைப் படிக்காமல், நோயுடன் போராடும் அன்னையாரைக் கவனித்தபடி கண்களில் நீர் வடிய இரவு முழுதும் இருந்தார். பொழுது விடிந்தது. கண் விழித்த களைப்பைச் சட்டை செய்யாமல் பரீட்சைக்குப் புறப்பட்டார். வினாத் தாளை வாங்கினார். எல்லாம் தெரிந்த வினாக்களே. பரீட்சைக்கு என்று இவர் முந்தின இரவுதான் படிக்க வேண்டுமா என்ன? 'தண்ணீர் பட்டபாடு' என்பார்களே அப்படி விடைகளை விரைந்து எழுத ஆரம்பித்தார். பரீட்சைக்கு விதிக்கப்பட்ட நேரத்தில் முக்கால் மணி நேரத்துக்கு முன்பாகவே தம் பணியைச் செய்துவிட்டார் இவர். 'நன்றாக விடை எழுதிவிட்டோம்!' என்னும் மகிழ்ச்சி முகத்தில் பொங்க, விடைத்தாளினை மடித்துத் தேர்வுக்கூடப் பார்வையாளரிடம் கொடுத்தார். பார்வையாளர் 'என்ன! இதற்குள் எழுதி முடித்துவிட்டீர்களா?' எனக் கூறிக் கொண்டே விடைத்தாளைப் பெற்றுக் கொண்டாராம்.

விடைத் தாளைக் கொடுத்துவிட்டு வெளியே வந்த பிள்ளையவர்கள், தம் நூல் வெளியீட்டு அலுவலகத்தையடைந்து, மாலைப் பரீட்சைக்குரிய பாடக் குறிப்புக்களைக் கவனிக்கத் தொடங்கினார். அலுவலக மேலாளர் இவரை நோக்கி, 'பரீட்சை எழுதி விட்டீர்களா? கேள்வித் தாளைப் பார்க்கலாமா?' என்றபடி அதை வாங்கிப் பார்க்க ஆரம்பித்தார்.

''தெரிந்த கேள்விகளாகவே வந்தன. நன்றாக விடை எழுதியிருக்கிறேன்'' என்றார்.

கேள்வித்தாளைப் புரட்டிய வெளியீட்டு அலுவலக மேலாளர் ஒரு கேள்வியைச் சுட்டி, ''இதற்கு என்ன பொருள்? எனக்கு வினாவுக்கே பொருள் விளங்கவில்லையே!'' என்று வியப்புடன் வினவினாராம்.

கேள்வித்தாளை வாங்கி அந்தக் கேள்வியைப் பார்த்த பிள்ளை அவர்களுக்குப் பகீர் என்றதாம். ஏனெனில், அவர் இந்தக் கேள்விக்கு விடை எழுதவில்லை. அக்கேள்விக்கு மட்டுமா? வினாத் தாளில் ஆறு பக்கங்களில் இரு பக்கக் கேள்விகளுக்கு விடை எழுதாமல் பக்கத்தைப் புரட்டி விட்டிருந்ததை அறிந்தார். பாவம்! முந்தின இரவு முழுதும் கண் விழித்த சோர்வினாலும் அன்னையார் நிலையைப் பற்றிய மனக் கவலையாலும் வினாத் தாளை அவசரத்தில் புரட்டி எல்லாக் கேள்விகளுக்கும் விடையளித்து விட்டதாக எண்ணிக் கொண்டு முக்கால் மணி நேரத்துக்கு முன்னமே வெளியே வந்து விட்டார். விட்டுப்போன கேள்விகளுக்கெல்லாம் இவருக்கு நன்றாக விடைகள் தெரிந்திருந்தன. அவற்றுக்குப் பதில் எழுத நேரமும் இருந்தது. எனினும், 'விதி வேறாய் இருக்கும்போது யார்தான் என்ன செய்ய இயலும்?' என்ற எண்ணத்தில் மனம் தேறினார். நடந்ததை அறிந்து தமிழ்த் தாத்தாவும் வருந்தினார்.

— வி. ச. வாசுதேவன்





சிதம்பர ரகசியம்
கதை: கோமதிசுவாமிநாதன்
சித்திரம்:
6
இரவு ஏதோ ஓர் உள்ளுணர்வு உறுத்தவே சின்னச்சாமி விழித்துக் கொள்கிறான்.
நான் நினைச்சாப் போலவே தான் நடக்குது. மாடியில் பூட்டப்பட்டுள்ள அறைக்குக் கிட்டப் போறவன் யாருன்னு பார்க்கலாம்.
அவங்களை நான் பார்க்கிறதோடு கொஞ்சம் மிரட்டியும் வைக்க இந்த வேஷம் உதவலாம்...
அந்த சமயம் மாடி அறைக்குப் போய், பிசாசைச் சந்திக்கக் கவிதை எழுதக் கிளம்புகிறான் ரகுராமன்.
காத்திருந்தேன் காலமெல்லாம் கண்டிடவே உன் அழகை... சேச்சே! அது ஒரு கேவல அவலட்சணப் பிசாசாக இருந்தா?... அபசகுனக் கவிதை வேண்டாம். மனமே அமைதியாய் இரு!
கறுப்புப் போர்வையில் உடலை மறைத்துக் கொண்டு வரும் சின்னச்சாமியைப் பார்த்ததும்....
ஐயா பிசாசு! மிஸ்டர் பிசாசு! நீ ஒரு வேளை பெண் பிசாசாக இருந்தால் குமாரி பிசாசு! கொஞ்சம் பேசு!
'பாவாய்! அடைக்கலம் பாராய்' என்கிற ரீதியிலே எத்தனையோ கவிதை எழுதினேன். கழுதை கூடத் திரும்பிப் பார்க்கலே. நீயாவது என்னைப் பார்க்கக் கூடாதா?
தன்னைப் பிசாசு என்று நினைத்து இரைந்து கத்திக் காரியத்தைக் கெடுக்கும் ரகுராமனிடமிருந்து தப்பி, சின்னச்சாமி மாடிப்படி அடியில் ஒளிந்து கொள்கிறான். அந்த நேரத்தில் பூட்டியிருக்கும் மாடி அறைக் கதவினை கள்ளச்சாவி போட்டுத் திறக்க ரங்கநாதன் முயல்கிறான்.


அப்போது...
ஹா! மோகனா! நீயா? நீ மோகினிப் பிசாசா, மோகனாவா?
ஐ ஆம் சாரி மோகனா! தூக்கத்திலே நடந்து வந்து ஏதோ உளறி இருக்கேன். அது சரி, நீ ஏன் தனியா இந்த வேளையிலே மாடிக்குப் போயிருக்கே?
உங்க கிட்ட நான் உண்மையை மறைக்க விரும்பலே... ஆமாம்... அதுதான்...
...அதாவது உங்களைப் போலவே எனக்கும் தூக்கத்திலே நடக்கிற வியாதி. இதை யார் கிட்டயும் சொல்லாதீங்க!
ஆஹா! நமக்குள் என்ன பொருத்தம்!
தொடரும்


அரும்பும் இளம்
காதலைப் போன்ற
புதுமை !
ஸிகோவாவின் "பூலோன் கி பஹார்"
அணிந்துள்ள
ராக்கி பிஸ்வாஸ்
மற்றுமொரு மின்வெட்டு. ஸிகோவாவின்
"பூலோன் கி பஹார்" புதுமைச் சித்திரத் தையல்
புனைந்த செஞ்சுடர் வண்ண வாயில் ஸிகோவா
பருத்தி, ஸாட்டின், நைலான் ஜார்ஜெட்
ஆகியவற்றிலும் கிடைக்கின்றன
ஸிகோவா எம்பிராய்டரி துணிகள்...
கிட்டாதிருக்கலாகுமோ அந்த
கட்டழகுக் கனி உமக்கே!

போராட்டங்கள்



ர.சு.நல்லபெருமாள்

6. சர்வாதிகாரம்!

பட்டம்மாள் சாரதாவிடம் சிவராமன் நேரம் கழித்து வருவதை இடித்துரைக்க வேண்டிக் கொண்டாள் அல்லவா? அதற்குப் பதிலளிக்க, ''நான் சொல்லிக் கேட்க அவர் என்ன சின்னக் குழந்தையா?'' என்றாள் சாரதா. அவனை ஓரக் கண்ணால் பார்த்தாள். அவன் தலைகுனிந்தபடியே மோர்ச் சாதத்தை வேகமாக அள்ளி அள்ளி வாய்க்குள் போட்டுக்கொண்டிருந்தான்.

''சாப்பிடுவதைப் பாரேன், அப்படி என்ன அவசரம்? ஆற அமரச் சாப்பிடக்கூட இல்லாமல்!'' என்றாள், பட்டம்மாள். பாவம், அவள் கண்களில் நீர் நிறைந்திருந்தது. குரல் கம்மியது.

''சீக்கிரமாக இவனுக்கென்று ஒருத்தி வந்துவிட்டால் நான் கவலைப்பட மாட்டேன். அவன்பாடு இவன்பாடு என்று இருந்து விடுவேன்... அதற்கும் சம்மதிக்க மாட்டேன் என்கிறானே'' என்று கூறிவிட்டு, சாரதாவை ஆவலுடன் உற்றுப் பார்த்தாள்.

சாரதாவின் முகம் குபீரென்று சிவந்தது. தலையைக் குனிந்தபடியே சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

இந்தப் பேச்சையே கவனிக்காதவன் போல் சாப்பிட்டு முடித்து விட்டு எழுந்தான் சிவராமன். பட்டம்மாள் பெருமூச்சு விட்டாள். சாரதாவின் பெருமூச்சை யாரும் கவனிக்கவில்லை.

சிவராமன் உடனே சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே கிளம்பிவிட்டான். சாரதாவும் புறப்பட்டாள்.

''அவனுக்குத்தான் தலை போகிற காரியம் இருக்கிறது. ஓடுகிறான். உனக்கென்ன? கொஞ்சம் இருந்து விட்டு, வெய்யில் இறங்கியதும் போயேன்'' என்றாள், பட்டம்மாள் வாஞ்சையுடன்.

''அப்பா தேடிக்கொண்டிருப்பார்கள். இன்னொரு நாள் வருகிறேன்'' என்று கூறிவிட்டு, சாரதா வாசலுக்கு வந்தாள்.

''உன்னை வீட்டில் கொண்டு விட்டு விட்டுப் போகட்டுமா?'' என்று சிவராமன் கேட்டான்.

''வேண்டாம், வேண்டாம். நான் போய்க் கொள்கிறேன்'' என்று கூறி விட்டுப் பஸ் நிற்கும் இடத்தை நோக்கி நடந்தாள் சாரதா.

இன்று சாரதாவுக்கு மிகுந்த உற்சாகம். மனம் துள்ளிக் கொண்டிருந்தது. சிவராமன் வீட்டில் சாப்பிட்ட நினைவு இனித்தது.

'ஆனால் இந்த ஆர்வமும் ரசனையும் சிவராமனிடம் இருந்தனவா? முகத்தில் எந்த மாறுதலும் இல்லை... சாப்பாட்டில்தான் கவனம்... அம்மா, கல்யாணப் பேச்செடுத்தபோது தலை நிமிரவே இல்லை.... எவ்வளவு நேரம் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு முறை தலை நிமிர்ந்து என்னைப் பார்த்தாரா?... கர்வம் பிடித்தவர்... மனத்தில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்?....'

அவனைப் பற்றி நினைக்க அவளுக்கு இதமாயிருந்தது. அவனைப் பார்த்துக் கொண்டேயிருப்பதில் அவளுக்கு எத்தனை ஆர்வம்!

அவனுடைய கம்பீரமான உருவம், எதையும் லட்சியம் செய்யாத அலட்சியப் பார்வை, எப்போதும் உதட்டில் தவழும் குறும்புப் புன்னகை, யாரையும் கட்டுப்படுத்தி விடும் கவர்ச்சி



யான குரல் — எல்லாமே அவளைச் சுற்றிச் சுற்றிக் கட்டுப் போட்டுவிட்டன. அந்தக் கட்டிலிருந்து அவிழ்த்துத் தப்பித்துக்கொள்ள அவள் முயன்றதே இல்லை.

ஆனாலும் அவனுக்கு அந்தனை கர்வம் கூடாது. எத்தனை முறை வலிய வலிய அவள் அவனை நெருங்கிப் பேச முயன்றாலும், அவனுடைய அலட்சியம், ரோஜாச் செடியில் முள் இருந்து தொந்தரவு கொடுப்பது போல் அவளை வாட்டிக்கொண்டுதானிருந்தது.

உம்... அது அவன் குணம். அதை மாற்ற முடியாமலா போய்விடப் போகிறது. அந்த அலட்சியத்திலும் ஒரு கம்பீரம் இருக்கிறதே...!

கல்லூரியில் ஒன்றாகப் படித்த காலத்திலேயே அவளுடைய நினைவு அவனை ஒட்டிக் கொண்டது. யாரிடமும் இல்லாத புதுமையைக் கண்டாள். சினிமாவையும், சினிமாப் போஸ்டர்களையும் பார்த்து, மனசை ஆபாசப்படுத்திக் கொண்டு, பெண்களை அந்தப் பாணியிலேயே உறுத்துப் பார்த்துப் பழகிவிட்ட மாணவர்களுக்கு மத்தியில் சிவராமனின் போக்கு மட்டும் புதுமையாக இருந்தது.

பேசும்போது அவனிடத்தில் எந்தச் சலனமும் இருக்காது. பார்வையில் கண்ணியம் இருக்கும். அது மட்டுமல்ல, தனக்கு எதிரே பேசிக் கொண்டிருக்கும் சாரதாவின் அழகு, அறிவு, ஒய்யாரம் எல்லாமே அற்பமானவை என்னும் அலட்சிய பாவத்துடன் நிற்பான்.

அவன் விலக விலக அவள் ஒட்டி ஒட்டிச் சென்றாள்.

யாரையும் அவன் மனம் நோகும்படி பேசாவிட்டாலும், அவனுடைய திர்க்கமான பார்வையும், பேச்சில் தொனிக்கும் தன்னம்பிக்கையும், அழுத்தமான புன்முறுவலும் அவனை ஒரு கர்வம் பிடித்தவனாகவே பறைசாற்றின.

அவனைப் பற்றிய நினைப்பில் நிறைந்திருந்த இனிப்பின் ஊடே கொஞ்சம் கசப்பும் தட்டியது, வேப்ப மரத்துத் தேன் மாதிரி.

இந்தக் கட்சிதான் அவனை எவ்வளவு தூரத்துக்கு வசப்படுத்தி விட்டது! லட்சியம், வாழ்க்கை எல்லாமே அந்தக் கட்சியை ஒட்டித்தானென்றால், அவற்றைத் தவிர உலகில் வேறு ஒன்றும் கிடையாதா?... அப்படி ஒரு கண்மூடித்தனமான வெறியா...?

ஒரு நாள் பேச்சு வாக்கில் சொன்னானே...

"எனக்கென்று ஒரு வாழ்க்கையைப் பற்றி நான் இன்னும் சிந்திக்கவேயில்லை. இப்போது என்னுடைய உலகம், வாழ்க்கை, சிந்தனை எல்லாமே என் கட்சிதான்" என்றல்லவா கூறினான்?


அவனுடைய உலகத்தில், வாழ்க்கையில், சிந்தனையில் தன்னையும் ஒரு துணையாகக் கொள்ள மாட்டானா என்ற தவிப்புத்தான் சாரதாவை வாட்டிக் கொண்டிருந்தது.

அவளுக்கென்று அவன் தன்னுடைய இதயத்தில் ஒரு தனி இடம் அமைத்திருக்கிறானா? வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும், இரகசியமாகக் கூட அப்படி நினைத்திருப்பானா?....

அவனுடைய பேச்சில், பார்வையில், பழக்கத்தில் — எதிலுமே இதைப் பற்றி ஒன்றும் வெளிப்படையாகத் தெரிந்து கொள்ள முடியாமல் தவித்தாள்.

* * *

பொதுவுடைமைக் கட்சிக் காரியாலயத்தில் பலர் கூடியிருந்தார்கள். கட்



ரியின் மாவட்டச் செயலாளர்கள் அனைவரும் வந்திருந்தனர். மாலை மூன்று மணிக்கு மாநிலத் தலைவர் தேர்தல் நடக்க வேண்டும். இதைப் பார்க்க ஆந்திரம், கேரளம், வங்காளம் உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள தலைவர்கள் சிலரும் வந்திருந்தனர். சிவராமன் மாவட்டச் செயலாளர்களைத் தனித்தனியே சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தான். மாநிலத் தலைவராக யாரைத் தேர்ந்தெடுப்பது என்பது பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை. தலைவர் வேதமூர்த்திக்காக எல்லாரும் காத்திருந்தார்கள். நான்கு மணிக்கு வேதமூர்த்தி கட்டிடத்துக்குள் வந்ததும், கட்டடத்தின் வாயிற் கதவு அடைத்துத் தாழிடப் பட்டது. அனைவரும் மாடி ஹாலில் குழுமினார்கள். வேதமூர்த்தி வந்ததுமே ஹாலிலிருந்த கலகலப்பு அடங்கி அமைதி நிலவியது. எல்லோரும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தனர். ஒரு வட்டத்துக்குச் செயலாளரான நல்லதம்பி, மரியாதையுடன் எழுந்தான். அவனைப் பார்த்துப் புருவத்தை உயர்த்தினார், வேதமூர்த்தி.

''மாநிலத் தலைவர் தேர்தலுக்குப் பெயர்களைச் சொல்ல...'' — அவன் கூறி முடிப்பதற்குள் வேதமூர்த்தி குறுக்கிட்டார்.

''போட்டி மாதிரியே நடத்த வேண்டுமா என்ன? யாரையாவது தலைவராக ஏக மனதாகத் தேர்ந்தெடுத்து விட்டால் போகிறது'' என்றார்.

''தலைவர் தேர்தலுக்கு ஒன்றிரண்டு பேர் போட்டியிட விரும்புவதாகத் தெரிகிறது'' என்றான் நல்லதம்பி, சற்றுப் பயத்துடன்.

''அதெல்லாம் வேண்டாம், நீ உட்கார். நானே தலைவர் பெயரைச் சொல்லி விடுகிறேன்'' என்றார் வேதமூர்த்தி

''போட்டியிட விரும்பும்போது தேர்தல் நடத்திவிடுவதுதான் நல்லது'' என்றார் விஜயவாடாவிலிருந்து வந்திருந்த தலைவர் சுப்பா ரெட்டி. ஹாலின் தெற்கு ஓரத்திலிருந்த அவர் உட்கார்ந்தபடியே கூறினார். அவர் இருந்த திசையைத் திரும்பிப் பார்த்தார், வேதமூர்த்தி. அந்தப் பார்வையில் கோபம் கொப்பளித்தது. ஒரு முறை அந்தத் தலைவரைக் கூர்ந்து பார்த்து விட்டுத் திரும்பினார் வேதமூர்த்தி.

''வீணாக ஏன் போட்டி? இந்த மாநிலத்துக்குச் சிவராமனே தலைவராக இருக்கட்டும்'' என்றார் வேதமூர்த்தி அழுத்தமாக. யாரும் பதில் சொல்லவில்லை. சிவராமன் துணுக்குற்றான். பரபரப்புடன் எழுந்து நின்றான்.

''தேர்தலை நடத்தி விட்டால் நல்லது'' என்றான், தலைவரைப் பார்த்து. தலைவர் அவனை முறைத்துப் பார்த்தார்.



மாமன்னனும் பணிந்தான்



போலோனில் நெப்போலியனுடைய படை ஒரு பிரிட்டிஷ் கடற்படையாளனைக் கைப்பற்றியது. அவனைக் கடற்கரையில் சுற்றும்படி விட்டுக் காவல் புரிந்தார்கள். அவனுக்குத் தன் தாயகத்தைக் காண வேண்டுமென்ற ஆவல். அவன் கண்கள் பறவைகள் பிரிட்டனுக்கு டோவர் மேல் சுதந்திரமாகப் பறந்து போவதைக் கண்டு ஏங்கின.

ஒரு புயல் உருவான தினத்தன்று பீப்பாய் நீரில் மிதந்து வந்தது. அதை எடுத்துப்போய் ஒரு குகையில் ஒளிந்திருந்து ஒரு சிறிய படகை உருவாக்கினான். அந்தப் படகுக்குத் துடுப்பு இல்லை; திசை காட்டும் கருவியும் இல்லை. ஆனால் எப்படியாவது தாயகத்து மண்ணை மிதித்துவிட வேண்டும் என்ற பேராசை அவனுக்கு இருந்தது. ஆனால் அவன் படகைப் பயன்படுத்தி விடுதலையடைவதற்குள் பிரஞ்சுக்காரர்கள் கையும் களவுமாக அவனைப் பிடித்து விட்டார்கள். அவனை மன்னன் நெப்போலியனுக்கு முன்னால் கொண்டு போய் நிறுத்தினார்கள்.

"முரட்டு வாலிபரே! குச்சிகளைக் கொண்டு தயாரித்த இந்தச் சிறிய படகில் இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து விடுவீரா? ஒருவேளை பிரிட்டிஷ் மண்ணில் உன் காதலி உன் வரவுக்காக ஏங்கிக் காத்திருக்கிறாளோ?" என்று நகைத்தபடியே கேட்டான் நெப்போலிய மன்னன்.


"எனக்கு அருமைக் காதலி கிடையாது. நீண்ட நெடுநாட்கள் மிதியாத தாயக மண்ணின் நினைவு; அருமை அன்னையைக் காணாத ஏக்கம். என் கண்கள் பூத்துப்போய் விட்டன!" என்றான் அந்தப் பிரிட்டிஷ் கடற்படையாளன் கலங்கியபடியே.

"நீ உடனே சென்று உன் அன்னையைக் காணலாம். எனது உள்ளத்தையும் நீ கவர்ந்து விட்டாய். உன்னைப் போன்ற வீரவாலிபனைப் பெற்ற புண்ணியவதி அன்னையை நீ தரிசிக்க வேண்டியதுதான்!" என்று நெஞ்சு தழுதழுக்கக் கூறிய மன்னன் நெப்போலியன் ஒரு தங்க நாணயமும் சமாதானக் கொடியொன்றும் கொடுத்தான்.

"இவன் பத்திரமாகத் தன் நாடு அடையக் கப்பலில் ஏற்றி அனுப்ப வேண்டும்!" என்று கட்டளையிட்டான்.

"ஆங்கிலக் கவிதையொன்றி"லிருந்து

— பி. எஸ். மணி



"சிவராமன் சொல்கிறபடியே தேர்தலை நடத்திவிட்டால் நல்லதுதானே?" என்றார், ஆந்திரத் தலைவர், சற்றுத் தைரியத்துடன்.

சிறிது நேரம் மௌனம் நிலவியது. வேதமூர்த்தி ஒருமுறை அனைவரையும் உற்றுப் பார்த்தார்.

"ஓ...போட்டி நடத்தியே தீரவேண்டுமா....? அவசியந்தானா?" என்றார், கோபத்துடன். அவரது கணீரென்ற குரல், அந்த ஹாலின் நான்குபுறச் சுவர்களிலும் மோதித் திரும்பியது. யாரிடமிருந்தும் பதில் இல்லை.

சிவராமன் மீண்டும் எழுந்தான்.

"போட்டியிடச் சிலர் விரும்புவதால் தேர்தல் நடத்திவிட வேண்டியதுதான்" என்றான் இடமாக. சிறிது நேரம் அவனையே முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தார் தலைவர். அவருடைய முகம் சிவந்திருந்தது. தம்முள் குமுறும் உணர்ச்சிகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறார் என்பதை அவருடைய கண்கள் தெளிவாகக் காட்டின. ஒரு முறை கூட்டம் முழுவதையும் சுற்றிப் பார்வையைச் செலுத்தினார். அந்தப் பெரிய ஹால் முழுவதையும் மௌனம் அழுத்திக் கொண்டிருந்தது. ஒருவரும் பேசவில்லை. அனைவரது பார்வையும் தலைவர் மீதே இருந்தது. ஒருவிதப் பயத்தின் உணர்வு அந்த அறை முழுதும் படர்ந்து அழுத்திக் கொண்டிருந்தது.

"சரி, பெயர்களைக் கூறுங்கள்..." என்றார் தலைவர் கடுகடுப்புடன்.

யாரும் எழுந்திருக்கவில்லை. மீண்டும் தலைவர் சொன்னார்.

"ம்... போட்டிக்கு நிற்கும் தோழர்களின் பெயர்களைச் சொல்லலாமே....? ஏன் நேரத்தைக் கடத்துகிறீர்கள்?" என்று இரைந்தார்.

வட்டச் செயலாளர் நல்லதம்பி, மெதுவாக எழுந்தான். சுற்று முற்றும் ஒரு முறை பார்த்துக் கொண்டான்.

"தலைவர் தேர்தலுக்கு நான் சிவராமனை நிறுத்துகிறேன்" என்றான். உடனே பக்கத்திலிருந்த ஒருவன், அவசரம் அவசரமாக எழுந்து, "நான் இதை ஆமோதிக்கிறேன்" என்றான். பிறகு, ஹாலில், மௌனம் நிலவியது. ஒருசில நிமிஷங்கள் யாருமே பேசவில்லை.


வனப்பும், புத்துணர்ச்சியும் பெற உபயோகியுங்கள்-சிந்தால்
நீங்கள் மாசுமருவற்ற எழிலைப் பெற, நாள் முழுவதும் புத்துணர்ச்—சியுடன் திகழ, உபயோகியுங்கள்-இருவகையில் நன்மை புரியும் சிந்தால் சோப். உலகிலேயே மிகச்சக்தி வாய்ந்த கிருமி நாசினியாகிய ஜி-11 (ஹெக்ஸாக்ளோரோஃபீன்) அடங்கியது சிந்தால்.
ஜி-11 அடங்கிய சிந்தால் மட்டுமே உங்களுக்கு வனப்பையும், புத்துணர்ச்சியையும் அளிக்கிறது.
MEDIUM
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
சிந்தால் உண்மையிலேயே ஒரு துர் நாற்ற மகற்றும் சோப்
Interpub/GS/20A Tam

வேதமூர்த்தியின் கண்கள், நாலாபுற மும் சுழன்று கொண்டிருந்தன.

''அப்புறம்...? வேறு பெயர் இல்லையா?... போட்டிக்கு மற்றப் பெயர் களையும் குறிப்பிடுங்களேன்'' என்றார். யாருக்கும் எழுந்திருக்கவே துணிவில்லை. ஒருவரை யொருவர் பார்த்துக் கொண் டிருந்தார்களே தவிர, யாரும் எழுந்து வேறு பெயரைச் சொல்லவில்லை. வேத மூர்த்தி இரண்டு நிமிஷங்கள் கூட்டத் தினரைப் பார்த்தவாறு உட்கார்ந் திருந்தார்.

ஆந்திரத் தலைவர், பக்கத்திலிருந்த ஒரு வட்டச் செயலாளரைத் தூண்டி விட்டார். ''காமாட்சிநாதனை நிறுத்த வேண்டுமென்றீரே, எழுந்து பெயரைச் சொல்லும்'' என்றார். ஆனால் அந்த வட்டச் செயலாளர் எழுந்திருக்கவே மறுத்து விட்டார்.

''சிவராமனைத் தலைவர் விரும்பும் போது...'' என்று தயங்கினார்.

''பின்னே எதற்காகத் தேர்தல் நடத்துகிறீர்கள்?'' என்று எரிந்து விழுந் தார் சுப்பா ரெட்டி.

இவர்கள் சுசமுசவென்று பேசியது, அரைகுறையாக வேதமூர்த்தியின் காதில் விழவே, இவர்களை உற்றுப் பார்த்தார்.

''என்ன? ஏதாவது வேறு பெயரைப் பிரேரிக்கப் போகிறீரா?'' என்று கேட் டார். பாவம், அந்த வட்டச் செய லாளர் பயந்து நடுங்கியபடியே அரை குறையாக எழுந்து நின்று ''இல்லே, இல்லே'' என்று குழறினார். ஆந்திரத் தலைவர் சுப்பா ரெட்டி தமக்குள்ளேயே பொருமிக் கொண்டார்.

''சரி, போட்டியில்லை. சிவராமனே மாநிலத் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்'' என்று கூறி விட்டுத் தம் முன்னால் வைத்திருந்த தேர்தல் குறிப்புப் புத்தகத்தில் எழுதத் தொடங்கினார், வேதமூர்த்தி. எழுதி முடித்துக் கையெழுத்தைப் போட்டு விட்டுப் பக்கத்திலிருந்த சிவ ராமனின் கையைப் பிடித்துக் குலுக்கி வாழ்த்தினார். கூட்டத்தில் கைதட்டல் ஒலித்தது. பலர் விரைந்து வந்து சிவ ராமனின் கையைக் குலுக்கி மகிழ்ச்சி யைத் தெரிவித்தனர்.

தேர்தல் முடிந்து கொஞ்ச நேரத் தில் வேதமூர்த்தி போய்விட்டார். சிவ ராமன், தலைவனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டும் உற்சாகமில்லாமல் இருந்தான். கூட்டம் கலையத் தொடங்கியது. சிவ ராமனும் இன்னும் சிலரும் அங்கேயே இருந்தார்கள்.

''போட்டி இருக்கும் என்று சொல்லி விட்டு வேறு பெயரையே சொல்லவில் லையே?'' என்றார் வங்காளத்திலிருந்து வந்திருந்த தலைவர் நரேந்திர போஸ் எரிச்சலுடன்.

''தலைவரே பெயரைச் சொல்லிவிட்ட பிறகு எப்படி...?'' என்று இழுத்தான் நல்லதம்பி.

''பின்னே ஏன் போட்டி இருப்பதாக முதலில் கூறினீர்கள்?'' என்று எரிந்து விழுந்தான் சிவராமன்.

''இப்போது என்ன? நீயும் தகுதி யான ஆள்தானே?''

''எனக்குத் தகுதி இருக்கிறதோ இல்லையோ அது வேறு விஷயம். நாம் இங்கே கூடியது தலைவரைத் தேர்ந் தெடுக்க. தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பும், உரிமையும் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த செயலாளர் களுக்குத்தான் உண்டு. கடைசியில் பெரியவர் சொன்ன பெயரை ஆமோ தித்துவிட்டுச் சும்மா இருந்துவிட்டீர்கள். இதற்கு இப்படி இங்கு ஒரு கூட்டம் கூடுவானேன்?'' என்றான் சிவராமன்.


''சரி, முடிந்து விட்டது. இனி நடக்க வேண்டியதைக் கவனிப்போம்'' என்று கூறி எழுந்தான் நல்லதம்பி.

சிவராமனுக்கு மன அமைதியே இல்லை. அவனும் தலைவர் தேர்தலுக்கு நிற்கத்தான் முடிவு செய்திருந்தான். தேர்தலில் அவன் வெற்றி பெறும் வாய்ப்பும் இருந்தது. அவனுடைய தீவிரமும் சுறுசுறுப்பும், கட்சி மீது கொண்டுள்ள வெறியும் கட்சி அங்கத் தினர்கள் அனைவருக்கும் தெரிந்தவை தாம். வெற்றி அவனுக்குத்தான். என் றாலும், மற்றவர்கள் விரும்பியபடி, போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தால் எவ்வளவு உற்சாகமாக இருந்திருக் கும்! தலைவர் தேர்தலில் போட்டியிட இன்னும் இரண்டு பேர் தயாராக வந்திருந்தனர். திடுதிப்பென்று தலை வரே அவனைத் தேர்ந்தெடுத்து விட்டது தான் 'சப்'பென்று போய்விட்டது.

எல்லாவற்றையும் விட அவன் மனத்தை அரித்தது, அந்தக் கூட்டத் தில் நிலவிய பயம் கலந்த மௌனந்தான்.

தலைவரின் சொல்லும், பார்வையும் எப்படி ஆட்டி வைத்துவிட்டன! தலை வர் வருவதற்கு முன் அப்படி நடந்த வேண்டும், இப்படிப் பேச வேண்டும் என்றெல்லாம் கூறிக் கொண்டிருந்த வர்கள், வாயடைத்துப் போய்ப் பதுமை களாக இருந்து விட்ட விந்தையை எண்ணி எண்ணி மலைத்தான்.

வேதமூர்த்தியின் செல்வாக்கை எண்ணி வியந்தாலும், மற்றவர்களின் கோழைத்தனத்தை நினைத்துப் பொரு மினான். அக் கட்சி அமைப்பில் எங்கோ ஏதோ ஒரு பெரும் குறை ஒட்டிக் கிடப்ப தாக உணர்ந்தான். (தொடரும்)



மாணவர் தயாரித்த நூதன வாகனம்

ஹோவர் கிராஃப்ட் எனும் விசித்திர வாகனம் தரையில் ஓடாது — சக்கரங்கள் இல்லாததால்! பறக்கும், ஆனால் வானில் அல்ல! தரை மட்டத்துக்கு மேல் அல்லது நீர்-மட்டத்துக்கு மேல் சுமார் எழு அங்குல உயரத்தில் ஒரே சீராக மிதந்து செல்லும்! மேனாடுகளில் ரொம்பவும் பிரபலமாகியுள்ளன ஹோவர் கிராஃப்ட் வாகனங்கள். (மேல் படம்)

சென்னை அடையாற்றில் உள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னலஜியின் ஐ.சி.இ. (Internal Combustion Engine) ஆய்வுக்கூடத்திலும் ஒரு 'ஹோவர் கிராஃப்ட்' உள்ளது. இந்த வாகனத்தை உருவாக்கியவர்கள் திரு மேக பாப்பாராவ், திரு பி. என். திரிபாடி இருவரும். ஐ.ஐ.டி.யில் ஐந்து ஆண்டுகள் பயின்று பி.டெக் பட்டம் பெற்ற இந்த மாணவர்கள் இருவரும் இறுதி ஆண்டுப் படிப்புக் காலத்தில் இத்திட்டத்தினை மேற்கொண்டனர். 'மெகானிகல் இன்ஜினியரிங்' பயில்பவர்கள் பட்டம் பெறுவதற்கு முன்னர் இவ்விதம் ஏதாவது ஒரு சாதனத்தை உருவாக்கிக் காட்ட வேண்டும்.

16 அடி நீளம், 8 அடி அகலம், 16 அங்குல உயரம் கொண்ட இந்தப் பிளைவுட் வாகனம் மணிக்குச் சுமார் நாற்பது மைல் வேகத்தில் செல்லக் கூடியது.

ஆகாய விமானத்தில் உள்ளது போல் ஒரு விசிறி (Propeller)யும், பறக்கும் பொழுது திசை திருப்ப வால் பகுதியில் தட்டையான ரட்டரும் பொருத்தப் பெற்றுள்ளன. இரண்டு பேர் அமர்ந்து சவாரி செய்ய இதில் வசதி செய்யப்பட்டுள்ளது.

'ஹோவர் கிராஃப்ட்' இயங்கும் தத்துவம் என்ன?


காற்றை உள்ளுக்கிழுத்துப் பிறகு அதை மிகுந்த விசையுடன் வாகனத்தின் அடிப் பாகத்தில் பீச்சுகிற விதமாக வெளியேற்றுகிறது ஓர் இயந்திரம். இந்த அழுத்தம் காரணமாக வாகனம் உயரே எழும்புகிறது. அதே சமயம் வாகனத்தை முன் பக்கம் விரையச் செய்ய மற்றோர் இயந்திரம் இயங்குகிறது.

"தொடக்க முதல் பாப்பா ராவுடன் இத்திட்டத்தில் இணைந்து செயல்பட்ட பி. என். திரிபாடி பட்டம் பெற்றவுடன் மேல்நாடு சென்றுவிட்டார். எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்கும் பொருட்டு, பாப்பா ராவ் பட்டம் பெற்ற பிறகும் ஹாஸ்டலில் தங்கி இதனை உருவாக்கி முடிப்பதில் முனைந்திருக்கிறார். திறமை மிக்க பாப்பா ராவும் விரைவில் அமெரிக்கா செல்லவிருக்கிறார். இல்லினாய்ஸ் பல்கலைக் கழகம் இவருக்கு உபகாரச் சம்பளம் வழங்க இசைந்துள்ளது.

"ஐ. ஐ. டி.தான் பொறிக செய்தது" எனக் கூறுகிறார் இவரது ஆசிரியர் திரு கோபால கிருஷ்ணன்.

"மேல்நாடுகளில் இது ஏற்கனவேயே ஒரு போக்குவரத்துச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமிடையே பிரிட்டிஷ் ஹோவர்கிராஃப்ட் ஒன்று அன்றாடம் பத்துத் தடவைகள் இங்கிலிஷ் கால்வாயைக் கடந்து செல்கிறது. ஒவ்வொரு தடவையும் முந்நூறு பிரயாணிகளையும் முப்பது கார்களையும் ஏற்றிச் செல்லும் அளவுக்கு அது பெரியது. நான் தயாரித்துள்ள இது மிகச் சிறியது தான். இந்தியாவிலேயே கூட இரண்டு ஹோவர் கிராஃப்ட் வாகனங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளன. இதில் குறிப்பிடத்தக்கது எல்லா உறுப்புக்களும் இங்கேயே கிடைக்கும் பொருட்களைக் கொண்டு செய்து முடிக்கப்பட்டதுதான். இதற்குத் தேவைப்பட்ட இரு வில்லியர்ஸ் என்ஜின்களை என்ஃபீல்டு (இந்தியா) நிறுவனம் அன்பளிப்பாக எங்களுக்கு வழங்கியது" என்று நன்றியுணர்வுடன் கூறுகிறார் பாப்பா ராவ். (படம்: கிழே)

— பாணன்



மந்திரியைக் காக்க வைத்து ஆட்டம்!

பரிசளிப்பு விழாவுக்காகச் சரியாக ஆறு மணிக்குச் சென்னை நகரசபை இண்டோர் ஸ்டேடியத்துக்கு வந்து விட்டார் தமிழகக் கல்வி மந்திரி திரு நெடுஞ்செழியன். ஆனால் ஆறாவது தேசிய காரம் தனியார் சாம்பியன் போட்டி முடியவில்லை. முன்னாள் தேசிய சாம்பியன் சுகாஸ் காம்பலியும் தமிழக ஆட்டக்காரர் டில்லியும் உக்ரமாக ஆடினார்கள். முதல் 'கேம்' மகாராஷ்டிர சாம்பியனுக்கு. இரண்டாம் கேம் இருபத்தெட்டு எண்ணிக்கை எடுத்து ஓர் எண்ணிக்கை வெற்றி பெற எடுக்கப் பிரும்மப் பிரயத்தனம் செய்தார் காம்பலி. டில்லி ஆறு பாய்ண்டிலிருந்து ஆறு தடவை எதிரிக்கு ஒரு பாய்ண்ட் கொடுக்காமல் ஆட்டத்தை வென்றது சபையோர்களைச் சிரக்கம்பம் செய்ய வைத்தது. கல்வி மந்திரி திரு நெடுஞ்செழியன் காத்திருக்க நேர்ந்ததே என்று கவலைப்படாமல் இவ்விரு விளையாட்டுக்காரர்களுக்கும் மத்தியில் ஒன்றே முக்கால் மணி நேரம் நடுநாயகமாக அமர்ந்து ஆட்டத்தைக் காணத் தொடங்கினார். மூன்றும் ஆட்டத்தில் இரண்டு பேருமே பிரமாதமாக ஆடி இருபத்தெட்டு எண்ணிக்கை எடுத்து விட்டார்கள். சாம்பியன் பதவிக்கு ஒரே பாய்ண்ட் தேவை. யாருக்குக் கிட்டுமோ? ஆட்டத்தின் உச்ச கட்டம் இதுதான்!

''டில்லிதான் ஜெயிப்பார்!''

''இல்லை, காம்பலிதான்!''

பிலிம் டிவிஷன் காமிரா வெளிச்சம் போட்டு ஆட்டத்தைப் படம் பிடிக்கிறது. பத்திரிகைக் காமிராமேன்கள் 'ஆக்ஷன் போட்டோ'வுக்காகக் கிளிக்குகிறார்கள்.


இத்தனை அமர்க்களத்துக்கு மத்தியில், ரசிகர்கள் நெருக்கியடிக்க, கசமுச சத்தத்துக்கு மத்தியில் இவ்விரு சாம்பியன்களும் கருமமே கண்ணாயிருந்தனர். ஒரே பாயிண்டில் வெற்றி, தோல்வி! மகாராஷ்டிர முன்னாள் சாம்பியன் சுகாஸ் காம்பலி கடைசி ஒரு பாய்ண்டைக் கடகடவென்று போட்டு எடுத்தது எல்லாரையும் ஆஹாகாரம் போட வைத்தது. மகாராஷ்டிர ஆட்டக்காரர்கள், தேசிய காரம் சாம்பியன் சுகாஸ் காம்பலியைத் தோளில் சுமந்து கொண்டு பரிசளிப்பு மேடைக்கு வெற்றி கோஷம் முழங்கச் சென்றனர். கல்வி மந்திரி திரு நெடுஞ்செழியன் இறுதிப் போட்டியைக் களிப்புடன் காத்திருந்து கண்டு விட்டுப் பரிசளிப்பு வைபவத்தில் மூழ்கினார்.

தமிழ் நாடு கேரம் கழகம் நடத்திய ஆறாவது தேசிய, சகல ராஜ்ய கேரம் போட்டிகளில் ஆகஸ்டு 11ந் தேதியிலிருந்து 16ந் தேதி வரை ஒன்பது ராஜ்ய கேரம் ஆட்டக்காரர்கள் கலந்து கொண்டனர். இலங்கையிலிருந்து குணவர்த்தனே தலைமையில் இலங்கை சாம்பியன் விஜசிங்கே, ரஞ்சித் பெரைரா, ஹஸனைல்லி ஆகியோர் வந்து ஆடினார்கள். டீம் சாம்பியன்ஷிப்பில் லீக் முறையில் தமிழக ஆட்டக்காரர்களான டில்லி, சாந்தலிங்கம், சுந்தர்ராஜ், சிவலிங்கம், பரமசிவம், கிருஷ்ணன், ஷண்முகசுந்தரம் தேசிய வீரர்களாயினர். இரட்டையர் தேசியப் போட்டியில் தேஷ்பாண்டேயும் செட்டியும் தமிழக ஆட்டக்காரர்களான டில்லியையும் லாஸரையும் வென்றார்கள்.

தேசிய கேரம் போட்டியின் இறுதி ஆட்டங்கள் கேரம் ரசிகர்களின் உள்ளத்தில் என்றும் பசுமையாக இருக்கும். மந்திரி ஒருவரைக் காக்க வைத்துக் காண வைத்த ஆட்டமல்லவா கேரம்?

— குண்டுமணி

தேசிய கேரம் சாம்பியன் காம்பலி தமிழகக் கல்வி அமைச்சரிடமிருந்து கோப்பையைப் பெறுகிறார்.



காணக் கிடைக்காத தங்கம்

அத்தியாயம் இருபத்திரண்டு

அருணகிரிக்கு நல்ல பசி. செய்துகொண்டிருந்த வேலையை அப்படியே விட்டு விட்டு எழுந்து போய் இன்னொரு மேசை எதிரில் அமர்ந்து இலையில் தானே உணவைப் பரிமாறிக் கொண்டு சாப்பிட்டு முடித்தான். பிறகு ஆபீஸ் பையனைக் கூப்பிட்டு, பாத்திரங்களை எடுத்துப்போய் வேலைக்காரியிடம் கொடுத்தனுப்பி விடுமாறு கட்டளையிட்டு விட்டு மீண்டும் தன் வேலைகளைக் கவனிக்கலானான்.

அடுத்த நாளும், அதற்கு மறுநாளும் இவ்வாறே நடந்தது. நாலாம் நாள் வழக்கம் போல் பகல் ஒரு மணிக்குச் சாப்பாட்டுக்காரி எடுத்து வந்த டிபன் கேரியரைக் கொண்டு வந்து ஆபீஸ் அறையில் வைத்து விட்டுப் போனான் பையன்.

கடிதப் போக்குவரத்து சம்பந்தமாய்க் கவனிக்க வேண்டிய அவசர வேலைகள் அதிகம் இருந்ததால் அருணகிரி சீக்கிரமாகவே சாப்பிட்டு விட்டு எழுந்து வந்து தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு, 'அழைப்பு மணி'யை அடித்தான். ஆபீஸ் பையன் வரவில்லை. ஒரு தொழிலாளி வந்தான். பையன் சாப்பிடப் போயிருப்பதாக அவன் தெரிவித்தான்.

தான் சாப்பிட்ட பாத்திரங்களை எடுத்துப் போய் வேலைக்காரியிடம் கொடுக்குமாறு அந்தத் தொழிலாளியிடம் சொல்ல அருணகிரிக்கு மனம் வரவில்லை. அதனால் அவ்வேலைக்காரியையே வந்து எடுத்துச் செல்லச் சொல்லும்படி அவனிடம் கூறிவிட்டுத் தன் காரியத்தில் கவனமானான்.


ஜெகசிற்பியன்



இளம் பெண் தயங்கியபடி உள்ளே வந்தாள். அருணகிரி அவளைப் பார்க்கவில்லை. ஒரு பில் சம்பந்தப்பட்ட கடிதங்களைத் தேடி எடுப்பதில் ஆழ்ந்திருந்தான்.

பாத்திரங்கள் ஒன்றோடு ஒன்று மோதி ஒலி எழுப்பின. அந்த வேலைக்காரி அஜாக்கிரதையாகவும் அவசரமாகவும் பாத்திரங்களை எடுத்து அடுக்குகிறாள் என்பதை அவ்வொலிகள் புலப்படுத்தின. அருணகிரியின் கவனம் இதனால் ஈர்க்கப்பட்டது. அவனுக்கு அது பிடிக்கவில்லை. சற்றுக் கோபமாகத் தலைநிமிர்ந்தான். அதே சமயம் அந்தப் பெண்ணும் அவனைப் பயப்பிராந்தியுடன் பார்த்துக் கொண்டே வெளியில் செல்ல வேகமாகத் திரும்பினாள்.

''யார்?.... நீயா?...''



அருணகிரிதான் இவ்வாறு வியப்பின் மிகுதியால் உள்ளடங்கிய குரலில் குழறிக் கேட்டுக் கொண்டே பரபரப்புடன் எழுந்தான். அதற்குள் அந்தப் பெண் வெளியே விரைந்து விட்டாள்.

யார் அந்தப் பெண்? சந்தேகமில்லை. கனகாவேதான்!

அவளைப் பார்த்தபின் அருணகிரியால் எந்த வேலையிலும் கவனம் செலுத்த முடியவில்லை. அமைதி இழந்து தவியாய்த் தவிக்கலானான்.

அன்றிரவு வீட்டுக்குப் போன பின் தன் அம்மாவிடம் அப் பெண்ணைப்பற்றி விசாரிக்க வேண்டு மென்று பலமுறை வாயெடுத்தான். பிறகு ஏதோ தயக்கம் அவனுடைய வாயை அடைத்து விட்டது. இரவெல்லாம் தூங்காமல் புழுப் போல் நெளிந்து புரண்டு கிடந்தே நேரத்தைப் போக்கினான்.

மறுநாள். பகல் ஒரு மணி. துடிக்கும் நெஞ்சத்துடன் தன் அறையில் உட்கார்ந்திருந்தான் அருணகிரி.

அந்தப் பெண் கனகா பயந்து கொண்டே உள்ளே வந்து சாப்பாட்டுக் காரியரை மேசை மேல் வைத்துவிட்டு வெளியே ஓடிவிடக் காலெடுத்தாள்!

''கனகா!''

அவள் தலைநிமிராமலே நின்றாள்.

''என்னை உனக்கு அடையாளம் தெரிகிறதா?''


பதில் ஏதும் சொல்லாமல் தலை குனிந்தே நின்றாள் அவள்.

''நான் உன்னை இங்கே பார்ப்பேன்னு கனவிலும் நினைக்கலே!'' என்று மெல்லச் சிரித்துக் கூறிக்கொண்டே வந்து சாப்பிட உட்கார்ந்தான் அருணகிரி.

அவள் அங்கிருந்து நழுவி அறைக்கு வெளியே போய் நின்று கொண்டாள். அவன் சாப்பிட்டு விட்டுக் கை கழுவிக் கொண்டு திரும்பி வருவதற்குள் அவள் கேரியரை எடுத்துச் சென்று விட்டிருந்தாள்.

அன்றிரவு தன் தாயாரிடம் அந்தப் பெண்ணைப் பற்றி ஒரு போக்காக விசாரித்தான் அருணகிரி.

அவள் பக்கத்துத் தெருவில் குடியிருப்பதாகவும் அவளுக்குத் தாய்-தகப்பன் இல்லையென்றும், தன் சித்தப்பா


இப்போது
புதிய
தோற்றத்தில்!
Swastik
PERFUMED
CASTOR OIL
ஸ்வஸ்திக்
பெர்ஃப்யூம்டு
கேஸ்டர் ஆயில்
பரட்டையான படியாத
கேசத்தையும் பணியவைக்கும்
நாள் முழுதும் கேசத்தை
எடுப்பாக எழிலோங்கச்
செய்யும்.
பட்டுப்போன்ற படியும் கேசம்...
ஒளிசிந்தும் எழிலோங்கும் கேசம்...
ஆரோக்கிய நறுமணம் வீசும் கேசம்...
நாள் முழுதும் எடுப்பாக விளங்கச்
செய்கிறது ஸ்வஸ்திக் பெர்ஃப்யூம்டு
கேஸ்டர் ஆயில்.
ஸ்வஸ்திக் ஆயில்
மில்ஸ், பம்பாய்.
Shilpi SOM 17/69 TAM

வின் பராமரிப்பில் இருக்கிறான் என்றும் சொன்னாள் சொர்ணத்தம்மாள்

தகப்பன் இல்லை என்பது சரி; தாயும் இல்லையாமே! அருணகிரி தனக்குள் வேதனையுடன் சிரித்துக் கொண்டான்.

அடுத்த நாள் மதியம்.

கனகா சாப்பாட்டுக் கேரியரை அருணகிரியின் ஆபீஸ் அறையில் கொண்டு வந்து வைத்தாள்.

அவன் வழக்கத்துக்கு மாறாகத் தரையில் சப்பரம் போட்டு உட்கார்ந்து கொண்டான். கேரியரில் கட்டி வைத்திருந்த வாழை இலையை அவிழ்த்து எதிரில் விரித்துப் போட்டுக் கொண்டான். பிறகு அங்குமிங்குமாகப் பார்த்துவிட்டுத் தயக்கத்துடன், தணிந்தகுரலில், ''தயவு பண்ணி இந்தக் கேரியரைத் திறந்து வைக்க முடியுமா?'' என்று கேட்டான்.

அவள் மௌனமாக வந்து கேரியரைத் திறந்து பாத்திரங்களை எடுத்துப் பரப்பி வைத்தாள்.

அருணகிரி அவளை நிமிர்ந்து பார்க்காமலே கரண்டியால் சாதத்தையும், பதார்த்தங்களையும் அள்ளி இலையில் போட்டுக் கொண்டான். சாம்பாரும் ஊற்றிக் கொண்டான். ஆனால் இலையில் கை வைக்காமல் உட்கார்ந்திருந்தான். அவனுக்குச் சிரிப்பு வந்தது. தன் வலது கையை முகர்ந்து பார்த்துவிட்டு, ''சே! ஒரே இரும்பு வாசனை!'' என்று சலிப்புடன் முணுமுணுத்துக் கொண்டே அவளை நிமிர்ந்து நோக்கினான். ''கொஞ்சம் தயவு பண்ணி இந்தச் சாதத்தைப் பிசைந்து உருண்டை பிடிச்சு என் கையிலே போட முடியுமா? அன்னாந்த வாக்கிலே அப்படியே வாயில் போட்டுக்கிறேன்!''

முதல் முறையாகக் கனகாவின் அழகு வதனத்தில் இப்போதுதான் மென்னகை மலர்ந்தது. ''ஊகூம்! எனக்குப் பயம்மா இருக்குது!'' என்றாள்.

''அப்படியானால் சரி; இன்னைக்கு நான் பட்டினி கிடக்க வேண்டியது தான்!'' என்று எழுந்திருக்கக் கையைத் தரையில் ஊன்றினான் அருணகிரி.

அவள் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுத் தயக்கத்துடன் வந்து சற்றுத் தள்ளி உட்கார்ந்து கொண்டு தலை குனிந்தபடி இலையிலிருந்த சாதத்தை அவசரம் அவசரமாகப் பிசைந்து உருட்டி அவனுடைய கையில் தூக்கிப் போட்டாள். அவன் ஆவலோடு வாயில்போட்டுவெடுக் வெடுக்கென்று விழுங்கினான். ஐந்தே நிமிடங்களில் இலை காலியாகி விட்டது.

அவள் எழுந்து நின்றாள். அவனும் எழுந்து நின்று, ''ஆமாம்; இப்ப நீ எங்கே இருக்கிறே?'' என்று சாதாரணமாகக் கேட்டான்.

''என் சித்தப்பாரு வீட்டிலே.''

''பெங்களூரிலிருந்து இந்த மெட்ராசுக்கு எப்போ வந்தே?'' என்று விவரமேதும் தெரியாதவன் போல் வினவினான் அருணகிரி.

''நான் வந்து ரெண்டு வருஷமாச்சு.''

''எதுக்கு இங்கே வந்தேன்னு கேட்கிறேன்?''

திடீரென்று அவளுடைய கண்கள் கலங்கின. உடல் பதறியது. மெல்ல விம்மிப் பொருமிய அவள், ''உங்களுக்குத் தெரியாதா? அன்னைக்கு என் அம்மா ஏமாத்தி வீட்டுக்கு அழைச்சுக்கிட்டு வந்து முறைகேடா நடந்துக்கிட்டுப் போனதைப் பார்த்துத் துடிச்சுப் போன நீங்க, என்னைப் பற்றியும் தவறா நினைச்சு இனிமேல் என் முகத்திலே விழிக்க மாட்டீங்களோன்னு எனக்குத் தோணிச்சு. அத்தோட அந்தப் பாவிக்கு மகளா இருக்கவும் பிடிக்கலே. அதான் அன்னைக்கே இருட்டு வண்டி ஏறி இந்தப் பட்டணத்துக்கு ஓடியாந்துட்டேன். இங்கே என் அப்பாரோடு கூடப் பிறந்த தம்பி இருக்கிறார்னு தெரிஞ்சுதான் வந்தேன்'' என்று சொல்லி முடிப்பதற்குள், தொண்டை அடைத்துக் கொள்ளவே மீண்டும் தேம்பிப் பொருமலானாள்.

துயரத்தால் நெஞ்சு கனக்கச் சற்று நேரம் மௌனமாயிருந்த அருணகிரி, ''அது சரி; இப்ப உன் சித்தப்பா வீட்டிலே சந்தோஷமா இருக்கிறே இல்லையா?'' என்று கேட்டான்.

''அது எப்படி சந்தோஷமா இருக்க முடியும்?'' என்று அவளும் வெடுக்கென்று திருப்பிக் கேட்டாள்.

''ஏன்? இங்கேயும் கஷ்டம் கொடுக்கிறாங்களா?''

''அப்படிச் சொல்றதுக்கில்லே. சித்தப்பாவுக்குக் குறைஞ்ச சம்பளம். ஓர் அச்சாபீசிலே வேலை. சோத்துக்கும் துணிக்குமே கஷ்டம். அதனாலேதான் நீங்க யாருன்னு தெரியாமலே உங்களுக்குச் சாப்பாடு எடுக்க வந்தேன். ஆனால் நான் சந்தோஷமா இல்லேங்கிறதுக்கு இதெல்லாம் காரணமில்லே.''

''பின்னேவேறு என்னகாரணமாம்?''

''அது உங்களுக்கே தெரியும்!'' என்று சொல்லியவாறு கேரியரை எடுத்துக்கொண்டு வெளியே போய்விட்டாள், கனகா.

மறுதினம் பகல் ஒரு மணி.

நேற்றுப் போல் இன்றும் அருணகிரி சாப்பிடத் தரையில் உட்காரப்போனான்.

''முதலாளி ஐயா எதற்குத் தரையில் உட்காரணும்? இப்படி மேசை மேலேயே இலையைப் போட்டுச் சாப்பிடலாமே!''

என்று இனிய புன்னகையுடன் மெல்லிய குரலில் கூறினுள் கனகா.

''முதலாளி அம்மா மேசைக்கு எதிரில் நாற்காலியில் உட்கார்ந்து எனக்குச் சாதம் பரிமாறுவதானுல் நானும் மேசை மேல் சாப்பிடத் தயார்!'' என்று கூறி நகைத்தான் அருணகிரி.

''ஐயோடா! நான் மாட்டேம்பா! சாப்பாடு எடுத்து வர்ற வேலைக்காரி முதலாளிக்கு எதிரிலே உட்கார்ந்திருக்கிறதை யாராச்சும் பார்த்தால் என்ன நினைப்பாங்க? எனக்கு வேணும் அந்தக் கெட்ட பேரு!''

''அது போகட்டும்; உனக்கு ஒரு விஷயம் தெரியுமா?''

அவள் அவனைப் பயம் கலந்த நாணத்துடன் பார்த்தாள்.

''அதாவது, இந்த முதலாளி அருணகிரியின் இந்தத் தொழிற்சாலைக்கு என்ன பெயர்னு உனக்குத் தெரியுமில்லே?''

''தெரியாது...''

''கனகா தொழிலகம்னு பேரு!''

தன் அழகிய நீலோற்பல விழிகளை மலர்த்தி அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள் கனகா.

''சரி; நீ புறப்படு! என் அம்மா நாளைக்கு உன் சித்தப்பாவைப் பார்க்க வருவாங்க!'' என்று சொல்லிக் கொண்டே அவசரமாகத் தன் காரியங்களைக் கவனிக்கப் போய்விட்டான் அருணகிரி.

அன்றிரவு அவன் வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டுப் படுக்கப் போகுமுன் தன் தாயாரிடம், தனக்குப் பகல் சாப்பாடு எடுத்து வரும் பெண்ணைத் தான் மணந்து கொள்ள விரும்புவதாகவும், அதனுல் நாளை அவளது வீட்டுக்குப் போய்ப் பெண் கேட்டுச் சம்மதம் பெற்றுத் திருமணத்துக்கு நாள் கிழமையும் நிச்சயித்துவிட்டு வருமாறும் சொன்னதைக் கேட்டு வியப்பிலும் திகைப்பிலும் ஆழ்ந்தாள் சொர்ணத்தம்மாள்.

''என்னடா இது?... எதுக்கு இப்படி?...'' என்று ஏதேதோ கற்பனைக் கலவரத்துடன் வினவினுள் அவள்;

''அப்படியெல்லாம் எதையும் பெரிசா நினைச்சுக் குழம்பாதேம்மா! அந்தப் பெண்ணை எனக்குப் பெங்களூரிலேயே தெரியும். ரொம்ப நல்லவள். உன் குணத்துக்கேற்றபடி நடக்கத் தெரிஞ்சவள். ஒருநாள் நான் பசியாலே காது அடைச்சுக்கிட்டுப் படுத்துக் கிடந்தப்ப அவள் எனக்குச் சோறு போட்டாள். இது ஒண்ணைச் சொன்னுலே மற்ற எல்லாத்தையும் நீ புரிஞ்சுக்குவேன்னு நினைக்கிறேன். அவ்வளவுதான்'' என்று அவன் பதில் சொல்லிவிட்டுப் போன பிறகுதான், தன் குழப்பத் திகில் நீங்கி மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தாள் சொர்ணத்தம்மாள்.

மைந்தன் சொன்னபடி மறுநாள் கனகாவின் சித்தப்பாவைப் போய்ப் பார்த்துப் பெண் கேட்டுச் சம்மதம் பெற்றுக் கொண்டும் வந்தாள். அன்று முதலே திருமணத்துக்கான ஏற்பாடுகள் வெகு வேகமாக நடக்க ஆரம்பித்துவிட்டன.

மாதம் ஒன்று கடந்தது. அருணகிரியின் தொழிலகத்தில் உருவான முதல் வண்டி — மூன்று சக்கர விளையாட்டுச் சைக்கிள் — அவனுடைய ஆபீஸ் அறையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டது.

புது மெருகுப் பளபளப்புடன் மிகவும் அழகாக விளங்கிய அவ்வண்டியைப் பெருமிதம் பொங்கப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான் அவன்.

மாலை ஆறு மணிக்குத் தொழிலகம் சாத்தப்பட்டது. எல்லாரும் போனபின் தன் அறையைப் பூட்டிவிட்டு அந்தச் சைக்கிள் வண்டியுடன் ஒரு ரிக்ஷாவில் ஏறி நேரே சிவலிங்கம் வீட்டை நோக்கிச் சென்றுன். இன்றுதான் அவருடைய பங்களாவுக்கு அவன் முதன் முதலாகப் போகிறுன். இத்தனை நாட்களும் காரியாலயத்தில்தான் சந்திப்பது வழக்கம். அதிலும் கடந்த மூன்று மாதங்களாக அவரைப் பார்க்கவில்லை. பார்க்க வேண்டிய அவசியம் ஏதும் ஏற்படாததோடு கூட அவனுக்கு ஓய்வும் இல்லை. வழியில் ஞாபகமாக ஒரு பெரிய ரோஜா மாலையும், மிட்டாய் டின்னும் வாங்கிக் கொண்டான்.


சிவலிங்கம் அப்போது தம் பங்களாவின் வராந்தாவில் உட்கார்ந்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

''வணக்கம், சார்!''

அவர் மெல்லத் தலை நிமிர்ந்தார். அருணகிரி தான் எடுத்து வந்த சைக்கிளை அவர் முன்னே வைத்து விட்டுக் கையைக் கட்டிக் கொண்டு பணிவுடன் ஒரு பக்கம் போய் ஒதுங்கி நின்றுன்.

''ஓ....அருணகிரியா? வாங்க மிஸ்டர்! நலம்தானே?'' என்று அன்பு கனியக் கேட்டுப் புன்னகை பூத்தார் சிவலிங்கம். தம் எதிரே யிருந்த மூன்று சக்கர விளையாட்டுச் சைக்கிளை மிகுந்த ஆர்வத்துடன் பார்த்துவிட்டு, ''அற்புதம்! அருமையான படைப்பு! என் நம்பிக்கை வீண் போகவில்லை. உங்களைப் பாராட்ட எனக்கு இப்போது வார்த்தைகளே கிடைக்கவில்லை'' என்று மனம் குளிர்ந்த மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டே எழுந்து வந்து அருணகிரியின் கையைப் பற்றிக் குலுக்கினுர்.

''எல்லாம் தங்கள் கருணை உள்ளத்தின்...'' என்று சொல்லி மேலே பேச நாவெழாமல் நன்றி உணர்ச்சியால்



உங்கள் உடலுக்குத் தேவை 23 ஊட்டச் சத்துக்கள்



பாலிலே உள்ளவை 9

காம்ப்ளான் 23 சத்துக்களும் கொண்டது

(புரதம், வைட்டமின்கள், தாதுப் பொருட்கள் உள்பட)



ஒரு தம்ளர் காம்ப்ளான் முழுமையானதோர் சரி-விகித உணவு. சர்க்கரையோடு, விருப்பமான சுவைப் பொருள்களுடன் சேருங்கள் — காபி, கோகோ, வனிலா, கேசர் முதலியவை (ஆரஞ்சு, எலுமிச்சை ரசம் தவிர).

காம்ப்ளான் ஏன் அவசியமானது?

நல்லுணவு என்று நாம் கருதும் உணவிலே கூட ஒரிரு முக்கிய சத்துக்கள் இல்லாமல் போகலாம். பால் கூட எப்போதும் இப்பற்றாக்குறைகளைத் தீர்க்க முடியாது. காம்ப்ளான் மட்டுமே 23 ஊட்டச்சத்துக்களை முழுவதும் அடங்கியது.

வளரும் குழந்தைகள், சுறுசுறுப்பாக இயங்கும் பெரியவர்கள், குறுற்ற பெண மணிகள், பாலூட்டும் தாய்மார்கள், முதியவர்கள், விளையாட்டு வீரர்கள் ஆகியோர் காம்ப்ளான் அருந்த வேண்டும். நோயுற்ற போதும், தேறி வரும்போதும் அருந்துவதற்கு உகந்த திரவ உணவு காம்ப்ளான். உலகெங்கும் அது டாக்டர்களால் சிபாரிசு செய்யப்படுகிறது.

காம்ப்ளானில் உள்ள 23 சத்துக்களும், அவை உங்களுக்கு அளிக்கும் நன்மைகளும்:
புரதம் ... திசுக்களையும், தீய அணுக்களையும் வளர்க்கவும், சரி செய்யவும் இன்றியமையாதது.
விமிட்ஸ் ... ஆற்றலின் அடர்ந்த உறைவிடம்.
கார்போஹைட்ரேட் ... உடல் ஆற்றலுடன் இயங்க.
கால்ஷியம் ... ஆரோக்கியமான பற்களையும் எலும்புகளையும் வளர்க்கிறது.
பாஸ்பரஸ் ... உடல் திரவங்கள், எலும்புகள் மற்றும் பற்களுக்கு.
சோடியம் ... சாதாரண இரத்த ஓட்டத்திற்கு.
குளோரைடு (வி-1 ஆக) ... தசை இயக்கத்திற்கு அவசியமானது; பிடிப்புகளைத் தடுக்கிறது.
பொட்டாஷியம் ... இதன் பற்றாக்குறை மன சோர்வையும், தசைத் தளர்ச்சியையும் அளிக்கும்.
இரும்புச் சத்து ... ஆரோக்கியமான இரத்தத்திற்கு.
அயோடின் ... தைராய்டு சுரப்பிக்கு அவசியமானது; பற்றாக்குறை சோர்வு, எடையின்மை, கோபம் ஏற்படும்.
வைட்டமின் ஏ ... கண்கள் மற்றும் சருமம் திசுக்களின் ஆரோக்கியம் காக்கிறது.
வைட்டமின் பி.1 ... வளர்க்கிறது; வலிமையான நரம்புகளுக்கும் பெரி-பெரி நோயைத் தடுப்பதற்கும் தேவை.
ரிபோஃப்ளேவின் ... ஆரோக்கியமான வாய், நாக்கு, உதடுகள், கண்கள் முதலியவற்றிற்கு.
கிளோரைடு ... சருமம் ஆரோக்கியமாகவும் பொலிவுடனும் திகழ.
கால்ஷியம் பெந்தோதினேட் ... நரம்புகளையும், தசைகளையும் இயங்கச் செய்கிறது.
கோலின் ... ஆரோக்கியமான கல்லீரல் இயக்கத்திற்கு.
பைரிடாக்ஸின் (பி 6) ... தசைகளுக்கு இதமளிக்கிறது.
வைட்டமின் பி 12 ... இரத்த சோகையை எதிர்க்கிறது.
ஃபோலிக் அமிலம் ... புதிய இரத்த அணுக்களை உருவாக்குகிறது.
வைட்டமின் சி ... நோய் எதிர்ப்புச் சக்தியை அளிக்கிறது; சளி நோயைத் தடுக்கிறது.
வைட்டமின் டி ... வலிமையான எலும்புகளுக்கும் பற்களுக்கும்.
வைட்டமின் ஹி ... தீய உற்பத்திக்கு.
வைட்டமின் கே ... சாதாரண இரத்தக் கட்டுக்கு.
ட்ரேஸ் எலிமெண்ட் ... வைட்டமின்களைப் பயன்படுத்த உடல் நன்கு பெறவும், ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் இன்றியமையாதது.


க்ளாக்ஸோ
ஆராய்ச்சியின்
உலகறிந்த தயாரிப்பு



காம்ப்ளான் — முழுமையான உணவு

சத்துப் பற்றாக்குறைகளிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது

"அவள் படிப்பிலும் விளையாட்டுக்களிலும் ஒரே போல் கெட்டிக்காரி!"



ஹார்லிக்ஸ் அவளைக் கெட்டிக்காரியாக மாற்றிற்று!

வளரும் குழந்தைகளுக்கு தெம்புடன் திகழத் தேவையான அதிக சக்தியை அளிக்க ஹார்லிக்ஸ் உதவுகிறது. டாக்டர்கள் குழந்தைகளுக்கு ஹார்லிக்ஸ் சிபார்சு செய்கிறார்கள். உங்கள் மகளுக்கும் ஹார்லிக்ஸ் தேவை!



ஆனால், சில நாட்களுக்கு முன் அவளுக்கு ஒரே மந்தம்; நான் டாக்டரை விசாரித்தேன்.

டாக்டர் சொன்னார்: "அவளுக்கு தினமும் ஹார்லிக்ஸ் கொடுங்கள்."

ஹார்லிக்ஸ் சாப்பிட்ட பின் அவள் படிப்பிலும் விளையாட்டுக்களிலும் ஒரேபோல் கெட்டிக்காரியாக மாறிவிட்டாள்!





ஆடைச்சத்து நிறைந்த பாலுடன் கோதுமை மாவு மற்றும் மால்ட் பார்லியின் போஷாக்குச் சத்துக்கள் சேர்ந்தது

ஹார்லிக்ஸ் அதிக சக்தியை அளிக்கிறது!

குரல் தழுதழுக்கக் கரம் குவித்துத் தலைகுனிந்தான் அருணகிரி.

சிவலிங்கம் மெல்லச் சிரித்துக் கொண்டே அந்தச் சைக்கிளை அப்படியும் இப்படியுமாகத் தள்ளிப் பார்த்தார். பிறகு, ''திலீப்! திலீப்!'' என்று வீட்டுக்குள்ளே நோக்கிக் குரல் கொடுத்தார்.

சற்றைக்கெல்லாம் எங்கோ ஓர் அறையிலிருந்து அழகான குழந்தைப் பையன் தத்தித் தளர்நடை போட்டு வராந்தாவுக்கு வந்தான்.

''திலீப்! பார்த்தாயா, உனக்குச் சைக்கிள் வண்டி கிடைச்சிருக்கு? எங்கே இதில் ஏறி ஓட்டு, பார்க்கலாம்!'' என்று சொல்லிக் கொண்டே அந்தக் குழந்தையைத் தூக்கிச் சைக்கிளில் உட்கார வைத்தார் சிவலிங்கம்.

ஒன்றரை வயதேயான அக்குழந்தைப் பிள்ளைக்குச் சைக்கிளை விடத் தெரியவில்லை. ஆனாலும் தன் பிஞ்சுக் கால்களை அப்படியும் இப்படியுமாக ஆட்டி அசைத்து வண்டியை முன்னேக்கிச் செலுத்தப் பெரிதும் முயன்றான்.

இதைக் கண்டு கைகொட்டிச் சிரித்தார் சிவலிங்கம். அருணகிரியோ பரவசக் களிப்புடன் அக்காட்சியைப் பார்த்துக் கொண்டு நின்றான். ஓர் ஐந்து நிமிடத்துக்குப் பின், ''சார்!...'' என்று மெல்லிய குரலில் அழைத்தான் அருணகிரி.

சிவலிங்கம் அவனைப் புன்முறுவலுடன் நிமிர்ந்து நோக்கினார்.

''இந்த மாலையை உங்கள் கழுத்தில் சூட்ட எனக்கு அநுமதி வழங்க வேண்டும், சார்!''

''ஓ.... உங்கள் விருப்பம் அதுவானால் நான் தடை சொல்லவில்லை'' என்று கூறிச் சிரித்தார் சிவலிங்கம்.

''இன்னும் ஒரு வேண்டுகோள் சார்!''

''சொல்லுங்கள் நண்பரே?''


''அம்மா வந்து இந்தச் சைக்கிளைப் பார்க்கணும். அவங்க வாயாலே என்னைப் பாராட்டணும். அவங்களைப் பக்கத்திலே நிக்கவைச்சு உங்களுக்கு இந்த மாலையை நான் போடணும்...''

''நிர்மலாவை வரச் சொல்கிறீர்களா? ஓ.... எவ்வளவு பெரிய வேண்டுகோளை நீங்கள் கேட்கிறீர்கள் மிஸ்டர்!'' என்று மெல்லச் சிரித்துக் கொண்டே போய் நாற்காலியில் அமர்ந்தார் சிவலிங்கம்.

மாலையைக் கையில் வைத்துக் கொண்டு ஒன்றும் புரியாமல் விழித்தான் அருணகிரி.

''ஆமாம், மிஸ்டர் அருணகிரி! அவள் வீட்டில் இல்லையே!''

''வெளியே போய் இருக்கிறாங்களா சார்?''



''இவங்களெல்லாம்தான் சாமர்த்தியமாகப் பேசித் தலைவருக்கு ஐஸ் வைக்கப் போறாங்களே; நீ வேறே எதுக்கு ஐஸ் கொண்டு வந்திருக்கே?''

சிறுபொழுது மௌனமாயிருந்த சிவலிங்கம், ''வெளியேதான் போயிருக்கிறாள்!'' என்றார் அமைதியான குரலில்.

''திரும்பி வர நேரமாகுமா சார்?''

''அப்படித்தான் நினைக்கிறேன்.''

''ஓர் அரை மணி, ஒரு மணி நேரத்துக்குள்ளே வந்துவிடுவாங்களா சார்?''

''இல்லை; யுக யுகாந்திரமானாலும் ஆகும்.''

''சார்!...''

''உண்மைதான் அருணகிரி! அவள் தூரியவெளியைக் கடந்து போயிருக்கிறாள். போய் ஒரு மாதத்துக்கு மேல் ஆகிறது.''

இதைக் கேட்டு இடியால் தாக்குண்டவன் போல் திடுக்கிட்டு நடுங்கி விட்டான் அருணகிரி.

சிவலிங்கம் கனவில் பேசுகிறவர் போல் மேலும் சொன்னார்: ''போன மாசம் அவளுக்கு மஞ்சள்காமாலை ஜுரம் வந்தது. ஐந்தாறு நாட்கள் படுக்கையில் கிடந்தாள். நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவள் என்னையும் என் குழந்தையையும் அநாதரவாக விட்டு விட்டுக் கண்ணை மூடி விட்டாள்.''

கற்சிலையாக நின்ற அருணகிரி மெல்லத் திரும்பிக் கூடத்து அறைப் பக்கம் தன் பார்வையைச் செலுத்தினான். அங்கே சுவரில் நிர்மலாவின் பெரிய புகைப் படம் ஒன்று மாட்டப்பட்டிருந்தது.

தூக்கத்தில் நடப்பவன் போல் நடந்து சென்று அந்தப் படத்துக்குத் தன் கையிலிருந்த மாலையைச் சூட்டினான் அருணகிரி. அவன் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

வராந்தாவில் நிர்மலாவின் அருமைப் பிள்ளை திலீபன் தன் பிஞ்சுக் கால்களால் சைக்கிளின் பெடலை உந்தி உந்தி அழுத்த, அது முன்னேக்கிச் செல்வதைப் பார்த்துக் குதூகலம் அடைந்தவனாய்க் கைகொட்டிக் கலகலவெனச் சிரித்தான்.

(முற்றும்)

மோல்டு

புது டெல்லி—11)

பக்குவ முறை :

56 கிராம் சாக்கலெட்
1 பைன்ட் (2 தம்ளர்) பால்
56 கிராம் அல்லது மட்டமாக 6 டேபிள் ஸ்பூன் பிரவுன் & போல்ஸன் பேடென்ட் கார்ன் ஃப்ளவர்
56 கிராம் அல்லது 3 டேபிள் ஸ்பூன் சர்க்கரை
வனில்லா எஸ்ஸென்ஸ்
க்ரீம்

1. சாக்கலெட்டைத் துண்டுகளாக்கி, 2 டேபிள் ஸ்பூன் பால் சேர்த்து, அடுப்பில் வைத்து தாழ்ந்த நெருப்பிலே கரைய விடவும்.

2. பிரவுன் & போல்ஸன் பேடென்ட் கார்ன் ஃப்ளவரைக் கலந்து ½ லிட்டர் பாலோடு மென் விழுதாக்கவும்.

3. எஞ்சிய பாலைக் காய்ச்சி, பிரவுன் & போல்ஸன் பேடென்ட் கார்ன்ஃப்ளவர் கலவைமீது ஊற்றவும். நன்கு கிளறவும்.

4. சாக்கலெட்டைச் சேர்த்து கிளறி, 5 நிமிஷங்கள் கொதிக்க வைக்கவும்.

5. சர்க்கரையையும் வனில்லா எஸ்ஸென்ஸையும் சேர்த்து, நன்கு கிளறி, ஈரமான மோல்டில் ஊற்றவும்.

6. படிந்ததும் க்ரீமுடன் பரிமாறவும்.

வாசகர்கள் கவனிக்க

எங்கள் பக்குவ முறைப் போட்டிக்குக் கிடைத்த மகத்தான ஆதரவு காரணமாக, பிப்ரவரி 1970-க்குப் பிறகு கிடைக்கப்பெறும் பக்குவ முறைகளை இந்த ஆண்டிற்கு ஏற்றுக் கொள்ள இயலாததற்கு வருந்துகிறோம்.

இலவசம்! புதிய பக்குவ முறை நூல் நெ. 2. இன்றே ஒரு பிரதிக்கு எழுதுங்கள்.

தயவு செய்து எனக்கு ஒரு பக்குவ-முறை செட்டை ஆங்கிலம் / இந்தி/ வங்காளி / தமிழ் / தெலுங்கு / மலையாளம் / குஜராத்தி /மராத்தி / கன்னடமொழியில் இலவசமாக அனுப்ப வேண்டுகிறேன்.

பெயர் ....

முகவரி..................................

....

இக் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புக :
பப்ளிஸிடி டிபார்ட்மென்ட்,
கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி, (இந்தியா) பிரை. லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்-1. (பிஆர்).

K-7

இதுபோல் இன்னும் பலவகையான தின்பண்டங்களைத் தயார்செய்து உங்கள் குடும்பத்தினரை மகிழ்விக்கலாம். பின்வரும் இதழ்களைக் கவனித்து வாருங்கள்

கார்ன் பிராடக்ட்ஸ் கோ.(இந்தியா) பிரைவேட் லிட்.

ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்—1. (பி ஆர்).

ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்: பாரி & கம்பெனி, டேர் ஹவுஸ், சென்னை-1. மற்றும் அவர்களது கிளைகள்

Seasons/3645 TM

உள்ளே இராமாயணம் படித்துக் கொண்டிருக்கிறார்கள். என்றோ 'பெருமாள் கோயிலை இடித்துவிட்ட பாவத்துக்காக' இன்று செய்யும் பிராயச்சித்தமோ இது?

செம்மண் கரை கட்டி, சிருங்கார வேலைப்பாடுகள் மெருகூட்ட, இதழ் இதழாய் அழகு விரிய, பிரும்மாண்டமான தாமரைக் கோலம் வாசலில் படர்ந்து, மங்கலச் சின்னமாய் விளங்குகிறது.

''இந்தாடி, நாகு! இன்னைக்குப் போடற கோலம்தான். அப்புறம் ஒரு வருஷத்துக்குப் போடப்படாது. கொஞ்சம் நன்னாப் பார்க்கிறபடியாப் போடு. பத்து நாளா வீடு சூனியம் பிடிச்சுக் கிடக்கு....''

சற்று முன் நாகு மெட்டி குலுங்க, கோலமிட வந்தபோது, அவள் தாயார் கூறிய சொற்கள்.....

'நன்றாகப் போடட்டும்! நாளெல்லாம் போடட்டுமே! ஒரு வருஷத்துக்குப் போடக் கூடாதுங்கிற சட்டமோ சாத்திரமோ இவர்களுக்கு வேண்டாம்.... யார் பார்க்கச் சொன்னது?'

என்னமோ சொல்லுவார்களே, அது போல....

இன்றைக்கு எதுக்கு இந்தத் தடபுடல்கள் எல்லாம்?

''....சுமங்கலி....சௌபாக்கிய...''

பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் புதுத் துணிகளை ஓதிக் கொடுக்கிறார்கள்.

''.:...பூவும் மஞ்சளுமா சுமங்கலியாப் போய்ச் சேர்ந்துட்டா.... அவளுக்கு ஒரு குறைவும் வைக்கக் கூடாதுன்னு பத்து நாள் காரியத்தை 'ஜாம் ஜாம்'னு, நடத்திட்டான் கோண்டு. வாங்கிக்கோடியம்மா, அலமு! உனக்குத்தான் இந்தப் புடவை....''

அரைச்சுக் கொடுக்கும் அலமுவுக்குப் புடவை! அரையங்குலம் சரிகை பார்டர் போட்ட ஆர்ட் – சில்க் புடவை!

எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

யாரை மூலாதாரமாக வைத்து இந்தக் காரியங்கள் யாவும் நடக்கின்றனவோ, அவள் உயிர் உள்ளவரை ஒரு முழம் துணிகூட இவர் கையால் வாங்கிக் கட்டிக் கொண்டதில்லை!

உயிருள்ளவரை அரைப் பழசுக்கும், குறைக் கந்தலுக்கும் பிறர் கையை எதிர்பார்த்து நின்றவள் அவள்.

இப்போது....

உயிருக்குப் பின்....

அவளுக்காக, அவள் பெயரைச் சொல்லி ஒரே தடபுடல்.

உயிருக்குப் பின் ஒரு குறையும் வைக்காதவர், அவள் இருக்கிறபோது அவளை எப்படிக் 'கவனி'த்துக் கொண்டார் என்பது.....

காலமெல்லாம் அவளைத் துக்கப்பட வைத்தவர்கள் இன்று அவளுக்காகத் துக்கம் கொண்டாடுகிறார்கள். ஆமாம்! இதெல்லாம் செய்யாவிட்டால் இவர்களைக் கர்மம் பிடிக்கும் என்று பயப்படுகிறார்கள். மூத்தாளுக்குச் செய்ய வேண்டிய கர்மத்தை முறையோடு செய்யா விட்டால் தனக்கும் தன் குழந்தைகளுக்கும்தான் கேடு விளையும் என்று நாகுவுக்கு நடுக்கம்.

ஹூம்!... இப்போது இதெல்லாம் எதுக்கு?

நடக்கிறதைப் பார்ப்போம்!

''ஏண்டியம்மா, நாகு! அனுவோட ஆம்படையான் வந்திருக்கானோ....?''

கூடத்தில் கூடியிருந்த பெண்டுகளிடையே சானுப் பாட்டியின் குரல்.

''....ஓ! வந்திருக்காரே!... அனு!.... அம்மா அனு! நீயும் உங்க ஆத்துக்காரருமா வந்து பாட்டியை நமஸ்காரம் பண்ணி ஆசீர்வாதம் வாங்கிக்கோங்கோ!....''

மனையிலிருந்தபடியே நாகு மெல்ல மகள் அனுவுக்கு அழைப்பு விடுக்கிறாள்.



புதுப் புடவை சலசலக்க வரும் அனுவைத் தொடர்ந்து சிரித்த முகமும், அழகிய உருவமும் கொண்ட வாலிபன் சரிகை வேட்டி சரசரக்கச் சானுப் பாட்டியின் முன் வந்து நிற்கிறான்.

வலது கையை உயர்த்திப் புருவங்களின் மேல் அணைத்துக் கொண்டு, கண்களை இடுக்கி இருவரையும் நோக்குகிறாள் சானுப் பாட்டி.

''....நோய் நொடி இல்லாம தீர்க்காயுசா வாழணும்....'' வணங்கி எழுந்த இருவருக்கும் அவள் வாய் ஆசி வழங்குகிறது. தொடர்ந்து, ''...ஏண்டி, பொண்ணே! நேத்திக்குச் செலவெல்லாம் உன்னோடதுதானே?.....'' என்றும் கேட்கிறாள்.


''ஆமாம், பாட்டி!....''

''இத்தனைக்கும் அனு, பெத்த பெண் இல்லை!.... அனுவாத்திலே நன்னு அத்தனையும் செய்துண்டு வந்துட்டா... ஒன்பதாம் நாள் ஊருக்கெல்லாம் ஜாங்கிரியும் குஞ்சாலாடுவும், இட்லியும் வடையும் கண்டதும் போட்டானே! அதுவும் அனுவாத்துச் செலவுதான்..... நேத்திக்கும் இலைக்கு விதம் விதமாய்ப்

விமோசனம் ஏதுடி?....'' என்று இதே சானும் பாட்டி அவளை எப்போதாவது ஆற்றங்கரையில் சந்திக்கும்போது புலம்பியதுண்டு.

''ம்!....அவளுக்கு விமோசனம், விடிவு இல்லாமலே வாழ்வு முடிந்து விட்டது! இனி அவளால் விபரீதம் விளைந்துவிடக் கூடாதே என்றுதான், இன்று இவ்வளவு ஆர்ப்பாட்டங்கள்.

''.....அடே கோண்டு!.... பெண் பாவம் பொல்லாதுடா! ஏழேழு பிறவிக்கும் அது சும்மா விடாது.....பாவம்! தாயில்லாப் பொண்ணு!...



பட்சணமும் பாடியும் செஞ்சு வைச்சிருந்தா... அதெல்லாம் அனுவோட மாமியார் எதையும் விட மாட்டாள்.....''

நாருவின் தாயார் பெருமை பொங்க அடுக்கிக் கொண்டேபோனுள்.

போதுமே பிரதாபம்! செத்தவள் இருந்தபோது பத்து நாட்கள் பட்டினி கிடந்தாலும் ஏன் என்று கேட்பாரில்லே. இந்த வீட்டில், இதோ இன்றைக்குக் கோட்டை அடுப்புக் கட்டி எட்டுப் பரிசாரகர்கள் வந்து விதம்விதமாய்ச் சமைக்கிருர்களே.....

இந்த இடத்திலேதான் அவள், பசியும் பட்டினியுமாய், கண்ணீரும் கம்பலேயுமாய், கந்தலும் சிந்தலேயுமாய், ஒரு வாய்த் தண்ணீர் இறைத்துக் குடிக்கக்கூட உரிமையில்லாமல் ஒடுங்கிக் கிடப்பாள்.

சாதாரணமாய் அந்த நாளைய பிள்ளைகள் 'அம்மாக் கோண்டு' வாய் இருப்பார்கள் என்று சொல்லுவது உண்டு. அவரே கோண்டுதான்! ஆனுல் அம்மாக் கோண்டு அல்ல.

''....அடியம்மா, மாமியார் படுத்தினுல் விடிவு உண்டு.... புருஷனே விரோதியானுல்

தாலி கட்டிக் கூட்டிண்டு வந்தாச்சு....! நீதாண்டா அதுக்கு எல்லாம்!....'' என்று கயிற்றுக் கட்டிலில் படுத்தபடியே, இருமல் களுக்கிடையே ஆதங்கத்துடன் அறிவுரை வழங்குவாள் அவர் அன்னை.... நோய் கொண்ட கிழவி.

''அந்தத் தாலியை வேணும்னு அவிழ்த்துக் கொடுத்துட்டு அப்பன் வீட்டுக்கே அவன் போயிடட்டும்..... எனக்கு ஒண்ணும் ஆட்சேபணையில்லே....''

அலட்சியமாக அவரிடமிருந்து பதில் வரும்.

''அட, பாவி!.... என்னடா சொல்லறே? நீ நன்னா இருப்பியா? அக்கிரமம் பண்ணறேடா !.....''

அலறித் துடிக்கும் அன்னையின் கண் எதிரேயே அக்கிரமத்தைத் தொடர அவர் திண்ணைக்குப் போய் விடுவார். அங்கேதான் சீட்டாட்ட நண்பர்கள் காத்திருப்பார்களே!

அவருக்கு நினைத்தபோதெல்லாம் பணம் வேண்டும். அதற்கு அவள் கருவியாகப் பயன்பட வேண்டும்.

அவனுடைய அப்பா இருக்கும் வரையில் அது முடிந்தது. அவருக்கு அப்புறம் அவளுடைய அண்ணன்மார்கள் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. தொட்டதற்கெல்லாம் 'அடி'த்துக் கொள்ளும் அவர்களுக்கு, அவளைப் பற்றிய விஷயத்தில் அபிப்பிராய பேதமே இராது !

ஆம் !

''.... நெனைச்சபோதெல்லாம் கொட்டிக் கொடுக்க இங்கே குபேரப்பட்டணம் கொள்ளை போகவில்லே. இஷ்டம்னு வைச்சுண்டு வாழட்டும்.... கஷ்டம்னு அனுப்பிவிடட்டும்....''

அவள் வந்த போதெல்லாம் இருவரும் இப்படியே சொல்லித் திருப்பியனுப்புவார்கள். சுவரில் அடித்த பந்து போல் இங்கும் அங்குமாய், எங்கும் நிம்மதியின்றி 'லோல்'படுவாள் அவள்.

இப்படிச் சில ஆண்டுகள்....

கிழவி இருக்கும் வரையில் ஏதோ ஒருவிதமாய் அவள் காலத்தை அந்த வீட்டில் ஓட்ட முடிந்தது. ஒரு நாள் கிழவியின் காலம் முடிந்த போது, அவளுடைய தனி வாழ்வும் ஆரம்பமாயிற்று.

''....எத்தனை நாளைக்கு நாமே வைச்சுச் சோறு போட முடியும்?.... உங்க அண்ணாவும் பாத்தியப்பட்டவர்தானே? கொஞ்சநாளைக்கு அங்கேதான் போய் இருக்கட்டுமே !''

''....கல்யாணம் கார்த்திதான் பண்ணிக் கொடுப்பா.... கஷ்டநஷ்டத்துக்குமா காலமெல்லாம் கூட நிற்க முடியும்? ஒரு வழியும் கிடைக்கலேன்னா உழைச்சுத்தான் சாப்பிடணும். எத்தனை நாளுக்குத்தான் ஒருத்தருக்குப் பாரமாய் இருக்க முடியும்?....''

—சின்ன மன்னியும் பெரிய மன்னியுமாகப் பின்னணி கீதம் இசைத்தார்கள்.

இப்படிச் சில ஆண்டுகள்....

''....வேலைக்காரியாகவாவது அவர் வீட்டில் விழுந்து கிடக்கிறேன் அண்ணா! என்னைக் கொண்டு போய் விட்டு விடு....'' என்று ஒரு நாள் தமையனுடன் புறப்பட்டாள்.

ஆனால் —

அவர் அவளை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை.

அவளும் அண்ணாவும் அவர் ஊருக்குப் போய், பஸ் ஸ்டாண்டில் இறங்கியபோது....

தூரத்தில்....

கையில் கங்கணச் சரடு மின்ன, தம் அருகில் கழுத்தில் மங்கலச் சரடு மின்ன, செல்வமே உருவாய் இணைந்து வந்துகொண்டிருக்கும் பெண்ணின் கையுடன் கைகோத்துக் கொட்டும் மேளமுமாய், மஞ்சள் வேட்டியும் மலர்ந்த முகமுமாய், பஸ் ஸ்டாண்டுக்கு அருகில் இருந்த குளத்தில் 'பாலிகை கரைக்க' வந்து கொண்டிருந்தார் அவள் கணவர்.

அண்ணா அர்த்தபுஷ்டியுடன் அவளைப் பார்த்தான். ''....அவாள்ளாம் நெருங்கி வர்றத்துக்குள்ளே நாம் திரும்பிடணும், அண்ணா !.....''

''....என்ன சொல்லறே? அந்த அயோக்கியனைச் சும்மா விட்டுட்டு....''

''....ஆமாண்ணா ! அவருக்கு ஏத்தவளை அவர் தேடிக் கொண்டிருக்கார்.... பணக்காரப் பொண்ணுன்னு பார்த்தாலே தெரியலையா....? நடந்து முடிஞ்ச காரியத்துக்கு நாம் குறுக்கே போய் நின்னு, என்ன பலன் ஏற்படப் போறது?....''

''....சும்மா விடக் கூடாது அவனை!..... கோர்ட்டுவரை போனாலும் பரவாயில்லே...''

அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. அவ்வப்போது அஞ்சு, பத்து அவளுக்காகச் செலவழிக்க மனசு வராத மன்னிகள் அவளுக்காக ஆயிரம் இரண்டாயிரம் என்று செலவழிக்க மனம் ஒப்புவார்களா ?

மேலும், 'கோர்ட்டு, கேசு' என்று அவருடைய மானத்தை வாங்கவும் அவள் தயாராக இல்லை.

''....கூட்டம் நெருங்கி வர்றதுக்குள்ளே, நான் இந்த பஸ்ஸிலே ஏறி உட்கார்ந்திண்டு இருக்கேன்.... நீ போய் நம்ம ஊருக்கு அடுத்த பஸ் எப்போன்னு விசாரிச்சுண்டு வா, அண்ணா !''

காலியாகக் கிடந்த பஸ் ஒன்றில் ஏறித் தலை மறைவாக நீண்ட ஆசனம் ஒன்றில் தாற்காலிகமாகப் படுத்துக் கொண்டாள் அவள்.

அக்கணத்தில் —

அவளுள் ஒரு வைராக்கியம் பிறந்தது. அதன் விளைவாய் அவள் அயராமல் உழைக்கவும், அதனைக் காசாக்கவும் தீர்மானம் செய்து கொண்டாள்.

அப்பளம் வேண்டுமா, அவல் இடிக்க வேண்டுமா? கல்யாணக் காரியம் செய்ய வேண்டுமா ? அனைத்துக்கும் அவளைத் தேடி அனைவரும் வந்தார்கள்.

அவள் கை மணத்தது — திருமணங்களிலும் மரணக் கிருத்தியங்களிலும் கூட !

இப்படிச் சில ஆண்டுகள்....

ஊர் ஊராகச் சென்று உழைப்பை விலையாக்கிய அவள் கையில் நாலு காசும் சேர்ந்தது. ஓடாகத் தேய்ந்த அவள் உடம்பின் உறுதியில் ஒரு நாள் கீறல் விழுந்தது.

''....இனிமே தாங்காது அண்ணா.. ... அப்படி ஒரு நாள் திடீர்னு என் காலம் முடிஞ்சு போச்சுன்னா அவருக்குச் சொல்லி மறுப்பு. இப்படியிருந்தா [illegible]



இவற்றை வெட்டிவிடாதீர்கள்!

இந்தியாவின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி ஆர்டர்களை குறிப்பிட்ட காலவரம்பிற்குள் நிறைவேற்றுவதற்கேற்ப, 650 பஞ்சாலைகள் உற்பத்தியை முன்கூட்டியே திட்டமிட உண்மையில் உதவக்கூடியவை உயர்ந்த அனுபவம் வாய்ந்த இந்தக் கரங்களே.

பாதுகாப்பாளர்கள்: இந்தியாவின் பருத்தி வியாபாரிகள்.

அவர்களுடைய குறிக்கோள்: பஞ்சாலைகள் கச்சாப் பருத்திக்கு மொத்த ஆர்டர்களைக் கொடுக்க வழிசெய்தல். சப்ளைகளில் பற்றாக்குறை ஏற்படுவதிலிருந்து சாகுபடியாளருக்குப் பாதுகாப்பளித்தல், விற்பனையை முன்கூட்டியே உறுதிசெய்வதன்மூலம், பருத்திப் பயிரின் நிலையற்ற தன்மையிலிருந்து அவருக்குப் பாதுகாப்பளித்தல்.

எதிரி: கச்சாப் பருத்தியின் இழைப்பீட்டு வியாபாரத்திற்குத் தடை விதித்தல்.

வீழ்ச்சி: பருத்தியின் உள்நாட்டு விலைகளில் மிதமிஞ்சிய ஏற்றம். சர்வதேச மார்க்கெட்டுகளில் போட்டியிடுவதில், பஞ்சாலைகளின் வளர்ந்துவரும் கையாலாகாத் தன்மை.

இதற்குப் பலி: இன்று, பஞ்சாலைகள். நாளை, இதர வியாபாரம். கடைசியில், நாடு.

பாதுகாப்பு: பருத்தி வியாபாரமும், பருத்தி, உணவுதானியங்கள், எண்ணெய் விதைகள் ஆகிய விவசாயப் பொருள்களின் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள வாணிபத்துறை முழுவதுமே நாசமாக்கப்பட இருக்கிறது. ஆனால் விநியோகத் துறையில் உள்ள அனைவருடைய ஒற்றுமையும் சக்திமிக்கது. அவர்களுடைய குடும்பத்தினர் உள்பட 6½ கோடி வோட்டுகள் பலம் கொண்ட ஒற்றுமை இது!

பிரேரேரிக்கப்பட்டுள்ள ஆல் இந்திய காட்டன் ஃபெடரேஷனின் அட்ஹாக் கமிட்டி.

ஜனநாயகமான வியாபாரத்தின் பாதுகாப்பாளர்களுடன் சேருங்கள். ஏற்கெனவே 6½ கோடி வோட்டு பலம் உள்ளது!

aic/4 tam


லைப்பாய்
இருக்குமிடம்: அதுவே
ஆரோக்கியம்
இருக்குமிடம்
நீராடும் இன்பம் தருவதிலே நிகரில்லாத
சோப் லைப்பாய். குதூகல உணர்ச்சியின்
குற்றாலம். ஆரோக்கிய மலர்ச்சியின்
ஆலோலம். நல்ல சோப்புக்குரிய
நன்மைகள் யாவும் பெறுவீர், மேலும்
பெறுவீர் லைப்பாய் துணையால்...
அழுக்கிலுள்ள கிருமிகளைக்
கழுவிக் களைவது
லைப்பாய்
LIFEBUOY
for health
LIFEBUOY

செய்யட்டும்....இல்லேன்னு....ஊர்க்காரான் ளாம் சேர்ந்து 'கோவிந்தாக் கொள்ளி'.... போட்டுடட்டும்....'' என்றாள் அவள்.

''....ஏம்மா அப்படிச் சொல்றே காமு?.... நாங்கள் எல்லாம் இல்லேயா?....'' என்றான் அவன் — சின்ன அண்ணன்.

பெரிய அண்ணன் அப்போது அவனுடன் இருக்கவில்லை.

அவளுக்குச் சிரிப்பு வந்தது. அதுவே கடைசிச் சிரிப்பாயிற்று. ஆம்! மறு நாள் காலே அவள் காலம் முடிந்து விட்டது! அப்பளத்துக்கு உளுந்தைக் களைந்து கொண்டிருந்தவள் 'நெஞ்சு வலி' என்று, சற்றே, முற்றத்துக் குறட்டில் சாய்ந்தாள். களைந்த பருப்பை உலர்த்துவதற்குள் அவள் காலம் முடிந்து விட்டது.

அவள் விரும்பியபடியே அவருக்குச் சொல்லி அனுப்பினார்கள்.

''முப்பது வருஷங்களுக்கு மேலே முகா லோபனம்கூட இல்லாம இருந்தாச்சு.... இத்தனே நாளாக இல்லாத உறவு இப்போ எங்கே யிருந்து வரப் போறது?...'' என்று அவர் சொல்லவில்லை.

''ஆமா!.... என்ன இருந்தாலும் தாலி கட்டிய புருஷன் நான்... நான் காரியங்களைச் செய்யறதுதான் முறை....'' என்று புறப் பட்டு விட்டார்.

என்ன, ஆச்சரியப்படுகிறீர்களா?

''போயிட்டு வரேன் நாகு! இல்லேன்னு ..ந்தக் கர்மம் நம்மைத்தான் பிடிக்கும்...'' ..று அவர் உள்ளே தம் இளைய மனைவியிடம் ..றிக் கொண்டிருந்ததைக் கேட்க நேர்ந்தால் ..ச்சரியப்பட மாட்டீர்கள்!

இருக்கிறவரை அவள் அருமை பெரு மையை உணராதவர்கள், அவளுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் விடாதவர்கள், இன்று ..வளுடைய அரிய குணங்களைச் சொல்லிப் ..ாடிப் பாடி' அழுதார்கள்!

..ல்லாம் அவர்கள் சுயநலம் கருதித்தான்! ..ல்லாவிடில் அவள் 'ஆவி' அவர்களைச் சுற்றிச் ..ற்றி வந்து கொண்டே இருக்குமாம்!

அன்று ஒரு வேளைச் சோற்றுக்கு ஊரா ..டம் காட்டிக் கொடுத்தவர்கள்...

இன்று கௌரவம் மிக்க அரிய விருந்தி னரை உபசரிப்பது போல அவள் 'ஆவி'க்கு உபசாரனை செய்து ஆனந்தப்படுகிறார்கள்!

ஆம்! இந்தப் பன்னிரண்டு நாட்களும் அவ ளுக்கு. அதாவது அருவமாகிவிட்ட எனக்கு ராஜயோகம்தான்!

இம்மையில் இடர்ப்பாடுற்று இன்னல் பல கண்ட என்னைக் கரையேற்றி, மறுமையில் மணத்துடன் 'பிதிரு'க்களுடன் சேர்த்துவிடப் பாடுபடுகிறார்கள்.

இல்லாவிடில் அவர்கள் இடர்களை ஏற்க நேருமாம். கர்மம் சுற்றுமாம்!

எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. அத்தனே அல்லல்கள் பட்டு, அவதியுற்று, உரிமைகள் இழந்து உயிர் ஒடுங்கி நின்றபோதே நான் அவர் மேல் வைரம் கொண்டு விரோதம் பாராட்டித் தீங்குகள் செய்யவில்லேயே? நான் துயருற்றாலும், தன்னைத் தொட்டுத் தாலி கட்டிய தோஷத்துக்காகவாவது அவர் நன்கு வாழ வேண்டும் என்று தியாகத் தீயில் தன்னைப் புடமிட்டுக் கொண்டு வாழ்ந்தவளாகிய நான்...

இன்று இறந்து போனபின் இன்னல் விளே விக்கவா போகிறேன்?... தெய்வத்துக்குத் தீங்கு செய்யப் பக்தன் நினைத்ததுண்டோ?... அன்றும் இன்றும் நான் அவரைத் தெய்வ மாகத்தான் மதிக்கிறேன்.

திடீரென்று...

கூடத்தில்.....

கூட்டத்தில் ஒரு சலசலப்பு.

''ஐயையோ!... அனு... அனு மயக்கம் போட்டுட்டாளே!.... என்னடி ஆயிடுத்து உனக்கு? டாக்டரைக் கூப்பிடுங்கோளேன்.''

அழுது பிரலாபிக்கும் நாகுவின் குரல்...

''கூட்டமெல்லாம் சித்தே விலகுங்கோ... காற்று வரட்டும்... தண்ணி கொண்டு வாருங்கோ!...''

''விசிறியை எடுத்துண்டு வாடி!...''

''செத்தவளை நினைச்சு விபூதியை எடுத்து இடடி நாகு!...''

சாதாரண ஆண்டில் கல்கியில் இடம் பெறும் சிறப்புச் சிறு கதைகள் அனைத்திலும் சிறந்த சிறுகதையைத் தேர்ந்தெடுப்பதில் வாசகராகிய உங்கள் அபிப்பிராயமும் கோரப்படுகிறது. ஆகவே இந்த இதழையோ அல்லது இந்தக் கதை அச்சாகியுள்ள பக்கங்களையோ பத்திரமாக வைத்திருக்கவும்.

ஆசிரியர், கல்கி

சானுப் பாட்டியின் கட்டளை.

''ஆகட்டும், பாட்டி!''

''குற்றம் குறை இருந்தாலும் நீதாம்மா மன்னிச்சுக்கணும். என் குடும்பத்துக்குத் தெய்வமாகி நின்னு என் பெண்ணைக் காப் பாத்து அம்மா!...''

நாகுவின் வேண்டுதல்; விபூதியை எடுத்துப் பெண்ணின் நெற்றியில் இடுகிறாள்.

அவர் கூட உள்ளத்தில் 'என்னை' நினைத்து அரை விநாடி கண் மூடுகிறார்!

நான் இருக்கும்போது அவருக்கும் எனக் கும் இல்லாத உறவை இப்போது ஏற்படுத்திக் கொள்ள நான்தான் அனுவின் வயிற்றில் புகுந்து கொண்டிருக்கிறேன்... பத்து வரு டங்களாகத் திறக்காத அனுவின் வயிறு திறக் கப்போகிறது என்பதை டாக்டர் வந்து அவர் களுக்கு உணர்த்தி விடுகிறார்!

செத்தும் கொடுத்த சீதக்காதி பிறந்த மண்ணில் உதித்த பெண் நான்!... செத்தும் கெடுக்க மாட்டேன் என்பதை உணர்ந்து கொண்ட அவர்கள் என்னைத் தெய்வமாக வழிபடுகிறார்கள்!

ஆம்!... உயிருக்குப் பின்தான் எனக்கு உறவு!

அழகுப் போட்டி

"இதோ பாருங்க! நாளைக்கு ஒரு ஆறு முழம் கனகாம்பரத்துக்கு முதல்லேயே எங்கேயாவது சொல்லி வையுங்க! அவசரத்துக்குக் கிடைக்காட்டி என்ன செய்யறது?"

"சரி!"

"என்கிட்டே போன வாரம் வாங்கின கனகாம்பரம் கலர் நைலக்ஸ் சாரிக்கு மேச்சா 'ஜாக்கெட்' இல்லே! அதே கலரில் ஒரு ரெடிமேட் ஜாக்கெட்டும் வாங்கணும்!"

"ஆகட்டும்!"

"என் முகத்துக்கு எந்தக் கொண்டை எடுப்பா இருக்கும்னு கொஞ்சம் சொல்லுங்களேன்! நேற்று போட்டுக் கொண்டேனே புது மாதிரிக் கொண்டை அதையே போட்டுக்கலாமா? நல்லா இருக்குமில்லே!"

"பிரமாதமா இருக்கும்!"

"கழுத்துக்கு எடுப்பா' எதுவுமில்லேயே! அப்படியே ஒரு நெக்லஸ்!....?"

"ஐயோ! நெக்லஸா? இப்போ நிமர்ந்து எங்கே போறது? வேணுமானு கவரிங்கிலே ஏதாவது பார்க்கிறேன்!"

"ஏதாவது வாங்குங்க! எடுப்பா நாகரிகமா இருக்கணும், ஆமாம். என் நெற்றிக்குத் திலகம் நல்லா இருக்கா? வட்டப்பொட்டு நல்லா இருக்குமா?"



"ஏன், திலகமே வெக்கக்க! அதையும் கனகாம்பரக் கலரிலேயே வெச்சுக்கிட்டா 'மேச்சா' அமைஞ்சு போயிடுமே!"

"வெக்கிறேன். அப்போ அந்தக் கலரிலே வளையலும் வேணுமே!"

"சரி, வாங்கிடறது!... அது சரி? இதெல்லாம் எதுக்கு? உங்க மாதர் சங்கத்திலே நாளைக்கு அழகுப் போட்டியா?"

"ஆமாம். கொழு கொழு குழந்தைகள் அழகுப் போட்டி நடக்குது. நம்ம குழந்தைக்குப் பரிசு கிடைச்சா குழந்தையோடு என்னையும்தானே போட்டோ எடுப்பாங்க?" "ரமா"



டார்ச்லைட் கடிகாரம்

இரவு நேரத்தில் மணி பார்க்க வேண்டுமானால், 'ரேடியம் டயல்' உள்ள கைக்கடிகாரத்தைக் கட்டிக் கொள்ளலாம்தான். ஆனால் அமெரிக்காவில் இப்போது புது நாகரிகக் கண்டுபிடிப்பு - டார்ச் லைட் கைக்கடிகாரம். கரத்தைத் திருப்புவது போல் ஒரு சொடுக்குச் சொடுக்கினால் கைக் கடிகாரத்தினுள் இருக்கும் சின்னஞ் சிறிதினும் சிறிய பல்புகள் இரண்டு ஏற்றிக் கொள்கின்றன. இரண்டு ஆஸ்பிரின் மாத்திரைகளின் அளவேயுள்ள பாட்டரிகள் அந்த பல்புகள் எரிய மின்சக்தி அளிக்கின்றன. கரத்தை ஒரு ஜோருடன் சொடுக்கியதும் 'ஸ்விட்ச்' போடப்பட்டு விடுகிறது. மணி பார்ப்பதுமட்டுமல்ல; இருட்டில் காரைக் கிளப்பும்போது சாவித் துவாரத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் டார்ச் லைட்டாகவும் பயன்படுத்தலாம் இக்கடிகாரத்தை.

- "நியூஸ் வீக்"

□ □ □ □ □ □ □

நடிகையின் கணவன்: என்ன இப்பொழுதெல்லாம் எப்பவும் முன்னுக்குப் பின் முரணாகவே பேசறே?

நடிகை: நான் மூன்று படங்களில் இரட்டை வேடத்தில நடிக்கிறேன். உங்களுக்கு அது தெரியாதா?

- கு.க.ர



பிளாஸ்டிக் பால் புட்டி

தென் இங்கிலாந்தில் திருப்பித் தரத் தேவையில்லாத பிளாஸ்டிக் புட்டிகளில் ஒரு நிறுவனம் பால் விநியோகிக்கிறது.

வழக்கமான கண்ணாடி பாட்டில்களைவிட இரு மடங்கு அதிகம் பால் கொள்ளும் இது. சிறிது உயரம் அதிகம். ஆனால் பிரிஜ்ஜில் பழையபடி பாட்டில்களைவிட அதிக இடம் எடுத்துக் கொள்ளாது.

பலன்கள்: உடைவதில்லை; பால் சேதமில்லை; லாரிகளில் கொண்டு போகும் பொழுது கலகல ஒலி இல்லை; ஒரு லாரி முன்னைப்போலதையும் விட அதிகமான பாலைச் சுமந்து செல்வது சாத்தியமாகிறது.

--பி.ஐ.எஸ்.

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

கேள்வி: புள்ளி விவரங்கள் யாருக்கு உதவுகின்றன?

பதில்: புள்ளி விவர இலாகாவில் வேலை செய்பவர்களுக்கு மாதா மாதம் சம்பளம் கிடைக்கச் செய்கிறதே, போதாதா?

காரனேட் - முத்து

■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■ ■

அந்தக் காலத்தில் அவர் காலேஜில் படிக்கும்போது...

மாற்று இதய ஆபரேஷன் செய்த டாக்டர் கிறிஸ்டியன் பர்னார்ட் மாணவனாக இருந்தபோது அப்பெண்டக்டமி ஆபரேஷன் செய்யப்படுவதைப் பார்த்து மயக்கம் போட்டு விழுந்து விட்டார். ஒரு நர்ஸ் அவரை மயக்கம் தெளியச் செய்ததுடன் மனம் கலங்கிப் போன அவருக்கு ஆறுதல் சொல்லித் தேற்றினர்.

"நியூஸ் வீக்" --- "கென்னி"



அது வேறு நியாயம்



அலுவலகத்திலிருந்து வந்ததும் வராதது மாக, ''பானு, பானு'' என்று கூவிய அவரது குரல் வழக்கத்தை மீறிய இரைச்சலுடன் ஒலித்தது கண்டு நான் திடுக்கிட்டேன். அவர் குரல் இரைந்து வெளிவந்தது மட்டுமல்லாது, அதில் எரிச்சல் கலந்திருந்ததாகவும் எனக்குத் தோன்றியது. நான் அவசரம் அவசரமாகக் கூந்தலை அள்ளி முடித்துக் கொண்டு அவர் முன் விரைந்து சென்று நின்றேன்.

''என்னங்க?''

''இந்தா, இதைப் படித்துப் பார்...'' என்றபடி அவர் ஒரு கடிதத்தை என் மேல் வீசி எறிந்தார். காலடியில் விழுந்த அந்தக் கடிதத்தை நடுங்கிய கைகளால் எடுத்துப் பிரித்தேன். அது ஒரு மொட்டைக் கடிதம். திருமணத்துக்கு முன்பு நான் யாருடனோ நட்புக் கொண்டிருந்ததாகத் தெரிவித்து எழுதப்பட்டிருந்த கையொப்பமில்லாத கடிதம். அதில் கூறப்பட்டிருந்த செய்தியில் ஓரளவு உண்மை இருந்தது என்பதால் என் தலை சுழன்றது. கையிலிருந்த கடிதம் நழுவித் தரையில் விழுந்தது. திடீரென்று என்னைத் தாக்கிய அதிர்ச்சியிலும் அச்சத்திலும் உடல் படபடக்க நான் மயக்கமுற்றுச் சாய்ந்தேன்.

மயக்கமுற்று விழுந்த நான் எவ்வளவு நேரம் அப்படிக் கிடந்தேன் என்பது எனக்கே தெரியாது. நான் கண் விழித்துப் பார்த்த போது என் கணவர் நாற்காலியில் அமர்ந்து தமக்கு வந்திருந்த அந்த மொட்டைக் கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டிருந்ததைக் கண்டேன். என் மயக்கத்தைத் தெளிவிப்பதற்கான முயற்சியில் அவர் ஈடுபடவேயில்லை என்பது புரிந்ததும் என் ஏழு நாடிகளும் ஒடுங்கிப் போயின.

நான் எழுந்து உட்கார்ந்தேன். நிமிர்ந்து அவரைப் பார்க்கத் துணிவின்றி என் இமைகள் தாமாகவே தாழ்ந்தன.

''என்ன சொல்கிறாய் இதற்கு? இதில் எழுதியிருப்பதெல்லாம் உண்மைதானா?''

என் கண்கள் கண்ணீரால் நனைந்தன. மங்கிக் கொண்டே வந்த அவரது உருவத்தைப் பார்த்தபடி, ''உண்மைதான்... என்னை மன்னித்து விடுங்கள்...'' என்று குழறினேன்.

என் கணவர் சட்டென்று நாற்காலியிலிருந்து எழுந்தார். ''மன்னிக்கக் கூடிய குற்றமா இது? துரோகி!'' – அவரது குரல் ஓங்கி ஒலித்தது.

''துரோகி என்று சொல்லாதீர்கள். நம் கல்யாணத்துக்குப் பிறகு நான் உங்களுக்கு மனசாலும் துரோகம் செய்தது இல்லை.''

''கல்யாணத்துக்கு முன்னால் செய்த துரோகமா இருந்தால் என்ன, பின்னால் செய்த துரோகமா யிருந்தால் என்ன? துரோகம் துரோகம்தானே?''

''வேறே என்ன வேண்டுமானாலும் சொல்லித் திட்டுங்கள். துரோகி என்று மட்டும் சொல்லாதீர்கள். அவர்கள் வீட்டில் சம்மதிக்காததால் கல்யாணம் நடக்கவில்லை. ஓடிப் போகலாம் என்று சொன்னார். என் மனசுக்கு அது சரியாகப் படாததால் நான் சம்மதிக்கவில்லை. கடுதாசிப் போக்குவரத்தைத் தவிர எங்களுக்குள்ளே வேறே எந்தப் பிசகும் ஏற்படவில்லை. தயவுசெய்து நம்புங்கள்...''

''எப்பேர்ப்பட்ட பயங்கரத்தை மறைத்து நீ என்னைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறாய்! உன்னை நான் நம்ப வேண்டுமா? இவ்வளவு பெரிய கள்ளத்தைச் சுமந்து கொண்டு எப்படி உன்னால் இந்த இரண்டு வருஷமாக அப்பாவி மாதிரி நடிக்க முடிந்தது? இது என்ன சாதாரணமான குற்றமா?''

''நீங்கள் தாலி கட்டின நிமிஷத்திலிருந்து உங்களைத் தவிர வேறு யாரையும் நான் மனசாலும் நினைத்துப் பார்த்ததில்லை. நான் அவரைக் கல்யாணம் செய்துகொள்ள நினைத்திருந்தது உண்மைதான். ஆனால் நான் சுத்தமானவள். அவருடைய சுண்டு விரல்

கூட என்மேல் பட்டதில்லை. தயவுசெய்து என்னை நம்புங்கள்....''

''ஓகோ! 'மனசாலே மட்டும்தான் நான் கெட்டுப் போனவள்' என்கிறாயா? மனசாலே கெட்டுப் போவதற்கும் உடம்பாலே கெட்டுப் போவதற்கும் அப்படி ஒன்றும் அதிக வித்தியாசம் இல்லை என்று நான் சொல்லுகிறேன்.''

''ஐயோ, அப்படியெல்லாம் பயங்கரமாகப் பேசாதீர்கள். கொலை செய்ய நினைப்பதற்கும் அப்படி நினைத்த பிறகு அதைச் செய்யாம லிருப்பதற்கும் வித்தியாசமில்லை என்பது சரியானால், நீங்கள் சொல்லுவது சரிதான்.''

''ஓகோ! உன் படித்த மூளையைக் காட்டுகிறாயா?... இந்த நிமிஷத்திலிருந்து நீ எனக்குப் பெண்டாட்டி இல்லை. உன் பெட்டி படுக்கைகளோடு தயாராக இரு. இன்றைக்கு இரவு வண்டியில் நீ ஊருக்குப் போகிறாய். ஊருக்குப் போவாயோ, இல்லாவிட்டால் உன் ஊரிலேயே இருப்பாயோ எனக்குத் தெரியாது. இனிமேல் ஒரு நிமிஷங்கூட உன் முகத்தைப் பார்க்க நான் தயாராக இல்லை....''

முகத்தைத் திருப்பிக் கொண்ட அவர் கால்களில் நான் விழுந்தேன்.

''சீச்சீ! என்னைத் தொடாதே!'' என்றவாறு தம் கால்களை உதறி விடுவித்துக் கொண்டு அவர் காப்பிகூடக் குடிக்காமல் வெளியே சென்றார்.

என் கண்கள் இருண்டன. மறுபடியும் மயக்கமுற்று விழுந்து விடுவேனோ என்று எனக்கு அச்சமாக இருந்தது. சமாளித்தவாறு கண்களைத் துடைத்துக் கொண்டு நான் எழுந்து உட்கார்ந்தேன்.

இப்படி ஓர் அதிர்ச்சி ஏற்பட்டு என் மகிழ்ச்சியைக் குலைக்குமென்று நான் கனவுகூடக் கண்டதில்லை. என் மனத்தின் ஒரு மூலையில் குழி தோண்டிப் புதைக்கப்பட்ட நினைவுகள் கிளறப்பட்டு அவற்றுக்கெல்லாம் நான் இவருக்குச் சமாதானம் சொல்ல வேண்டி வரும் என்று நான் நினைத்தும் பார்த்ததில்லை.

மொட்டைக் கடிதம் எழுதியது யார் என்பது எனக்கு நன்றாகத் தெரிந்தது. ஒரு பெண்ணிடம் தகாத முறையில் பேசவோ நடக்கவோ முற்பட்டு அவளிடம் மூக்குடைபட்ட ஆண்கள் அவளது நடத்தையைப் பற்றியோ தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றியோ உண்மைக்கலப்பற்ற அவதூறுகளையும் வதந்திகளையும் பரப்புவது உண்டு. என் கணவருக்கு வந்த கடிதமும் கிட்டத்தட்ட ஒரு பழி தீர்க்கும் முயற்சிதான். ஆனால் இந்த மொட்டைக் கடிதத்தில் கண்டிருந்த செய்திக்கு ஆதாரம் இருந்தது.

சென்ற மாதம் எங்கள் அலுவலகத்தில் நான் வேலை செய்து கொண்டிருந்த பிரிவிலேயே மதுரையிலிருந்து மாற்றப்பட்டு வேலையில் வந்து சேர்ந்த என் பக்கத்து இருக்கையில் அமர்ந்த பாண்டுரங்கன் — எங்கள் ஊர்க்காரனாக இருந்ததால் — என் கடந்த கால இரகசியங்களைப் பற்றி அறிந்தவனாக இருந்தான். அறிந்தவனாக இருந்ததைப்பற்றிக் குறைவதற்கில்லை. எனினும் என்னைப் பற்றித் தனக்குத் தெரியும் என்பதை ஒரு நாள் பேச்சு வாக்கில் அவன் காட்டிக் கொண்ட போது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவனது பண்பற்ற செயலைக் கண்டு நான் திகைப்பும் சுசப்பும் அடைந்தேன். படித்த ஓர் ஆண்மகன் இப்படியும் பண்பற்று நடந்து கொள்ளுவானா என்று எனக்கு வேதனையாக இருந்தது.

நான் அடியோடு மறந்து போய்விட்ட ஒரு விஷயத்தை இன்னும் மறக்காமல் நினைவு வைத்துக் கொண்டிருந்ததோடு மட்டுமல்லாமல் நான் மணமானவள் என்பதைக் கூடக் கருதிப் பார்க்காமல் என் கடந்த கால வாழ்க்கையைப் பற்றிய நினைவுகளைக் கிளறமுற்பட்ட அவனது போக்கிரித்தனம் என் மனத்தில் அவன்பால் அருவருப்பை விளைவித்தது.

கூடியவரை அவனோடு பேசுவதை நான் தவிர்த்தும், 'என்னங்க, என்னங்க' என்று அடிக்கொரு தடவை என்னைப் பேச்சுக்கு இழுத்த அவனது நடத்தையை நான் நினைத்துக்கூடப் பார்க்காத கட்டத்தை ஒரு நாள் அடைந்தது.

எங்கள் பிரிவில் அவனும் நானும் மட்டுமே தனித்திருக்க நேர்ந்த நேரத்தில் ஒரு நாள் ''என்னங்க, உங்களை நினைத்தால்தான் பாவமாக இருக்கிறது. காதல் பண்ணுவது ஒருவரை, கல்யாணம் பண்ணிக்கொள்வது வேறு ஒருவரை என்று ரொம்பப் பேருடைய வாழ்வு இப்படித்தான் பாழாகிப் போகிறது....'' என்று அவன் முணு முணுத்தபோது இன்னதென்று விவரிக்க முடியாத ஓர் உணர்ச்சி — அருவருப்பா, ஆத்திரமா இன்றேல் எரிச்சலா என்ற இனம் காண முடியாத ஓர் உணர்ச்சி — என்னுள் குமுறிற்று. அவனுக்கு என்ன பதிலைச் சொல்லித் தொலைப்பது என்றுகூடத்

ஜோதிர்லதா கிரிஜா



தோன்றாமல் சில விநாடிகள் நான் வாயடைத்துப் போனேன்.

அந்தச் சில விநாடிகளைப் பயன்படுத்திக் கொண்டு அவன் மறுபடியும் கேட்டான்: ''பழைய ஞாபகங்களைக் கிளறிவிட்டுவிட்டேன் போலிருக்கிறது...''

இதற்குள் சுதாரித்துக் கொண்ட நான், ''மிஸ்டர் பாண்டுரங்கன்! இப்போது நான் மணமானவள். பழைய ஞாபகங்கள் என்று நீங்கள் சொல்லுகிற எதுவும் என் மனசிலே இப்போது இல்லை. என் வீட்டுக்காரரைத் தவிர வேறு யாருக்கும் என் மனசிலே இடமில்லை. நம் நாட்டுப் பெண்களைப் பற்றி நீங்கள் இன்னும் தெரிந்து கொள்ளாதது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது'' என்று ஆங்கிலத்தில் அவனுக்குப் பதில் கூறினேன். என் குரலின் அழுத்தமும் அதில் ததும்பிய கடுமையும் அவனைப் பாதித்து விட்டன என்பது அவன் கண்கள் தாழ்ந்ததிலிருந்து எனக்குப் புரிந்தது. ஆயினும் ''ஸாரி!'' என்ற பண்பு மிக்க ஒரே சொல்லுடன் அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்க வேண்டியவன், ''நீங்கள் என்னதான் சொல்லுங்க! முதல் காதலில் கிடைக்கிற வெற்றியே தனிதான்... அந்தச் சுகமே வேறுதான்...'' என்று என்னை உற்றுப் பார்த்துக் கொண்டே ஆங்கிலத்தில் அவன் தொடர்ந்தபோது என் முகம் சிவந்ததை நானே உணர முடிந்தது. என் உடல் முழுவதும் அதிர்ந்தது. 'எனக்கு இரக்கம் காட்டுவதாக எண்ணிக் கொண்டு என் எரிச்சலைக் கிளப்பி விட்டுக் கொண்டிருக்கும் இவனை என்ன செய்தால் தேவலை' என்று ஆத்திரமுற்றேன்.

''இதோ பாருங்கள், மிஸ்டர் பாண்டுரங்கன். நீங்கள் எங்கள் ஊர்க்காரர் என்பதால் உங்களை மன்னிக்கிறேன். இன்னொரு முறை இதைப் பற்றிப் பேசினீர்களானால் எனக்குக் கெட்ட கோபம் வரும்...''

பாண்டுரங்கன் அத்துடன் நிறுத்திக்கொள்வான் என்றுதான் எதிர்பார்த்தேன். ஆனால் அவன் நிறுத்துவதாகவே இல்லை.

''உங்களுக்கு இவ்வளவு கோபம் வருகிறது என்பதே உங்கள் மனசு சரியாக இல்லை என்பதைத்தானே காட்டுகிறது?''

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுமுன் எங்கள் பிரிவுக்குள் சிலர் நுழையவே எங்கள் பேச்சுக்குத் தாற்காலிக முற்றுப்புள்ளி விழுந்தது.

இது நடந்து ஒரு வாரத்துக்குப் பிறகு மறுபடியும் நாங்கள் தனித்திருக்க நேர்ந்தபோது அந்தக் கயவன் தன் கீழ்த்தரமான எண்ணத்தை என்னிடம் தயக்கமின்றி வெளியிட்டான்; அந்தப் பாவியுடன் நான் ஒரு ஹோட்டலில் தனித்திருக்க வரவேண்டுமாம்! எத்தனை கொடுமை? எத்தகைய பண்பற்ற எண்ணம் இது அவனுக்கு? கொஞ்சமும் கூசாமல் என்னிடம் கூறிய அவனை என் கையில் துப்பாக்கி இருந்திருந்தால் சுட்டுக் கொன்றிருப்பேன். ஆனால் இல்லையே! அந்தப் பாவி என் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு மேலும் கூறினான். அவனது விருப்பத்துக்கு ஈடு கொடுக்காவிடில் என் கடந்த காலக் காதலைப் பற்றி என் கணவருக்குக் கூறி என் வாழ்க்கையையே தன்னால் பாழ்படுத்திவிட முடியும் என்று அவன் உணர்த்தி விவேகமான முடிவுக்கு வருமாறு என்னை எச்சரித்தான்.

நான் நடத்தை பிசகாதவள் தானெனினும் ஒரு காலத்தில் என் மனத்தில் வேறொருவன் இடம் பிடித்திருந்த உண்மை என் கணவருக்குத் தெரிய வருவதைப் பற்றி என்னால் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியவில்லை. எங்கள் உறவு வெறும் மன உறவோடு நின்றுவிட்ட உண்மையை இவர் நம்ப வேண்டுமே என்ற திகிலால் மட்டுமின்றி, என் மனத்தில் தம்மை மணப்பதற்கு முன்பு வேறொருவன் வீற்றிருந்த உண்மையை என் கணவரால் ஜெரிக்கவோ, என் கடந்த காலத்தைப் பொருட்படுத்தாதிருக்கவோ முடியுமா என்பதைப் பற்றி என்னால் ஒரு முடிவுக்கும் வர முடியாததால் என் மனம் கலங்கியது. எந்த ஆண்மகனும் தாங்கிக் கொள்ள முடியாத உண்மையை இவர் மட்டும் தாங்கிக்கொள்வாரா என்ற கேள்வி என் மனத்தில் எழுந்தது.

ஆயினும் அதற்காக என் விலைமதிப்பற்ற பெண்மையைப் பணயம் வைக்க முடியுமா, என்ன? அம்மாதிரியான ஓர் இக்கட்டில் பண்புள்ள எந்தப் பெண்ணும் எடுக்கும் முடிவைத்தான் நானும் எடுத்தேன். அதாவது கற்பை இழப்பது கணவனை இழப்பதை விடவும் கொடிது என்ற முடிவுக்குத்தான்.

ஆகவே பாண்டுரங்கன் எனக்கு இழைக்க இருந்த தீமையைக் குலைக்கு முகமாக என் கணவரிடம் நயந்து பேசி அவர் மன்னிப்பைக் கோருவது என்று தீர்மானித்தேன். இதில் எனக்கு வெற்றி கிட்டுமா அல்லது தோல்வி கிட்டுமா என்பதைப் பற்றி என்னால் அனுமானிக்க முடியவில்லை. எனினும் நான் துணிந்துதான் ஆகவேண்டும். வாழ்க்கை என்பதே ஆபத்து நிறைந்த ஒரு விளையாட்டு என்ற உணர்வுடன் நான் போராடித்தான் பார்க்க வேண்டும். சாட்சிக்காரன் காலில் விழுவதை விடச் சண்டைக்காரன் காலில் விழுவது மேல்தானே?

எனவே, பாண்டுரங்கனின் மிரட்டலுக்கெல்லாம் நான் இம்மியும் அசைந்துகொடுக்கவில்லை. மேற்கொண்டு அவன் பல வழிகளிலும் எனக்கு அளித்த தொல்லைகளையும் சட்டை செய்யவில்லை.

உள்ளூற உதைப்பாக இருந்தாலும், என் அச்சத்தை நான் வெளிப்படுத்திக்கொள்ளாமலும், அவனை மதிக்காமலும் இருந்ததன் விளைவுதான் என் கணவருக்கு வந்த மொட்டைக் கடிதம்....

மனைவி என்று ஒருத்தி வந்த பிறகும் பழைய காதலை நினைத்து எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விடும் நன்மையினரின் இனத்தைச் சேர்ந்த என் கணவருக்கு என் பழைய காதலைப் பற்றி நான் நினைப்பதே இல்லை என்ற என் கூற்று நம்ப முடியாத ஒன்றாகத்தான் இருக்கும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. என்னதான் திருமணத்துக்கு முன்பு இந்த நாட்டில் ஒரு பெண் வேறொருவரைக் காதலித்திருந்தாலும், மணமான பின்னர் தன் கணவனுக்கே தன்னை உடலாலும் மனத்தாலும் முழுக்க முழுக்க அர்ப்பணிக்கிற விவேகத்தை அவளுள் நம் பெரியவர்கள் பரம்பரை பரம்பரையாக வளர்த்து வைத்

பாலுஸேரி பேனிபிட் சிட் பண்டு

பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1947)

"வீணா விகார்" — 17-A, ஃபிளாங் ரோடு,
ஷண்முகானந்தா ஹாலுக்கு அருகில்
சயான் (கிழக்கு) பம்பாய்-22, D. D.
டெலிபோன்: 471455
தபால் பெட்டி 6759 : : தந்தி: "GROWRICH"

செப்டம்பர் 1970-க்குரிய கீழ்க்கண்ட புதிய குருப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றன

ஏலம் கேட்ட பிறகு டிவிடெண்டு அடையும் வசதியுள்ள கீழ்க்கண்ட குருப்புகள்

குறுகிய காலம் : 25 மாதங்கள்			நீண்ட காலம் : 40 மாதங்கள்		
சேருவதற்கு கடைசி தேதி : 12-9-70			சேருவதற்கு கடைசி தேதி : 26-9-70		
முதல் ஏலத் தேதி : 13-9-70			முதல் ஏலத் தேதி : 27-9-70		
வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
	ரூ.	ரூ.		ரூ.	ரூ.
B	100/-	2,500/-	E	500/-	20,000/-
C	50/-	1,250/-	F	250/-	10,000/-
F	25/-	625/-	G	125/-	5,000/-
G	20/-	500/-			

நீண்ட காலம் : 50 மாதங்கள் — ஏலம் எடுக்காத சீட்டுகாரர்களுக்கு மட்டும் டிவிடெண்டு உண்டு

சேருவதற்கு கடைசி தேதி : 19-9-70 :: முதல் ஏலத் தேதி : 20-9-70

வகுப்பு	தவணை ரூ.	சீட்டுத் தொகை ரூ.
LTA	100/-	5,000/-
LTB	50/-	2,500/-
LTD	20/-	1,000/-

வேலை நேரம் : { காலை 8 மணி முதல் 10-30 வரை
மாலை 4 மணி முதல் 7-30 வரை }

வார விடுமுறை திங்கட்கிழமை

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :
"பாலுஸேரி பில்டிங்ஸ்"
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, தபால் பெட்டி : 414, சென்னை-5

கிளைகள் : பெங்களூர் - கல்கத்தா - புது டெல்லி

இலவச பிரகடனத்திற்கு எழுதுங்கள்
சீட்டுகள் ஒதுக்குதல் கம்பெனியின் உரிமையைப் பொறுத்தது

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை



வேலை? வேலை? வேலை?
உற்சாகமளித்திடும் காப்பி—
நெஸ்கா:பே யிக்கென்று
5 விநாடிகள் ஒதுக்குங்கள்!
அவ்வளவு குறைந்த நேரத்தில்
ஒரு கப் தயார்!
NESCAFE
instant
coffee
தென்னிந்திய காப்பி விதைகளிலிருந்து தயாரித்த முற்றிலும் சுத்தமான காப்பி
நெஸ்லே தயாரிப்பு
NCE 5749
உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:பே, உற்சாகமளித்திடும் நெஸ்கா:பே!

இருப்பதால் என்னைப் பொறுத்தவரை—ஆளை விட்டுச் சொல்கிறேன் — பழைய விஷயங்களைப் பற்றி நான் நினைத்தே பார்ப்பதில்லை. ஆனால் நான் சொல்வதை இவர் நம்ப வேண்டுமே...

விருட்டென்று வெளியேறிய அவர் திரும்பி வந்த பிறகு நான் எவ்வளவோ மன்றாடியும் பயனில்லாமல் போய்விட்டது. இரண்டு ஆண்டுகளாக வாழ்ந்த வாழ்க்கையை இழந்துவிட்டு நான் கனத்த இதயத்தைச் சுமந்துகொண்டு பெண்களின் விடுதியொன்றில் இருக்கத் தொடங்கினேன்.

அந்த விடுதியில் மூன்று பெண்கள் பங்கு போட்டுக் கொண்டிருந்த ஓர் அறையில் நான்காவது பங்காளியாக நான் அவர்களோடு சேர்ந்து கொண்டேன். என் கணவர் இராணுவத்தில் இருப்பதாக நான் அவர்களிடம் புளுகி யிருந்தேன்.

சில மாதங்களுக்கு முன்னால் விமலாவுடன் எனக்கு நெருங்கிய நட்பு ஏற்பட்டது. விமலாவின் கதையும் துயரக் கதைதான். நான் கணவனால் துரத்தப்பட்டவள். அவள் காதலனால் கைவிடப்பட்டவள். அவ்வளவுதான் அவளுக்கும் எனக்கும் இடையே இருந்த வேறுபாடு.

ஒருநாள் அவள் தன் கதையை மனம் விட்டு என்னிடம் சொன்னாள்:

''உங்களிடம் சொல்வதற்கென்ன? கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது எனக்கும் அவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. எப்படியும் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறவர்தானே என்கிற இதில்....'' — விமலா பேச்சை நிறுத்திவிட்டு மௌனமாக அழுதாள்.

''என்னதான் வெளிப் பார்வைக்கு நல்லவனாகத் தெரிந்தாலும் கலியாணம் செய்து கொள்ளப் போகிறவனாகவே இருந்தாலும் அத்தனை ஆண்பிள்ளைகளும் அயோக்கியர்கள் என்ற ஜாக்கிரதையும் அவநம்பிக்கையும் ஒரு பெண்ணுக்கு இருந்தால்தான் அவள் இந்த உலகத்தில் மீண்டு வர முடியும்.... ஆனால் இந்தப் புத்தி அன்று என்னிடம் இல்லாததால் சுமக்கக் கூடாத களங்கத்தைச் சுமக்கும்படி ஆச்சு... விஷயத்தைச் சொல்லி நான் அவரை அவசரப்படுத்தத் தொடங்கியதும், அவருடைய சுயரூபம் எனக்குத் தெரிந்தது. என்னைக் கைவிட்டு விட்டு அவர் போயே போய்விட்டார் என்று சுருக்கமாகச் சொன்னால் போதுமானது என்று நினைக்கிறேன்... மற்ற கதையெல்லாம் எதற்கு? இந்த மாதிரி கதிக்கு ஆளாகிவிட்ட ஒரு பெண் உயிரை விட்டுவிட வேண்டும் என்ற ஓர் வஞ்சனையை நான் தைரியமாக எதிர்த்தேன். ஆமாம்! நான் செய்த தப்புக்கு ஓர் உயிரையும் சேர்த்துக் கொல்லுவது எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் நியாயமாகப் படவில்லை. அதனாலேயே தைரியமாக நான் வாழ்ந்தேன். குழந்தையைப் பெற்றேன். எல்லாவற்றுக்கும் என் தோழி ஒருத்தி உறுதுணையாக இருந்தாள். அவளுடைய கணவரும் அவளும் சேர்ந்து எனக்குத் தேறுதல் சொல்லி எல்லா உதவிகளையும் செய்தார்கள். அவளுக்குக் குழந்தை இல்லை. ஆதலால் என்

குழந்தையை அவள் வளர்த்துக் கொண்டிருக்கிறாள். குழந்தை இப்போது அவளிடம்தான் இருக்கிறது....''

நான் வாயடைத்துப் போய் உட்கார்ந்திருந்தேன். விமலா கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து சென்று தன் பெட்டியைத் திறந்து அதிலிருந்து ஒரு புகைப் படத்தை எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் காட்டினாள்.

பின்புறம் 'வித் லவ்' என்ற சொற்களுடன் ஆங்கிலத்தில் கையெழுத்திடப்பட்டிருந்த அந்தப் புகைப்படத்தில் இருந்தவர்—

என் கணவர்!

பைத்தியக்காரக் கிழவன்!

பாடுபட்டு நிறையப் பொருள் சேர்த்த அவன் ஒரு விவசாயி. ஒரே ஒரு மகனைச் சீரோடும் சிறப்போடும் கட்டுப்பாடாக வளர்த்து வந்தான். வளர்த்தால் ஆயிற்றா? தாயில்லாப் பிள்ளையான அவனுக்கு ஒரு நல்ல மனைவியைத் தேடித் தரும் பொறுப்பும் கிழவனுக்கே சேர்ந்தது. சதா அதே யோசனை.

வீட்டை நன்கு பராமரிக்க வேண்டும். ஆனாக இருந்தாலும் அவன் அதில் வெகு துடி. ஒரு குப்பை! ஊஹூம். போகக் கூடாது. சோம்பலைப் பார்க்காமல் ஒதுப்புறமாகக் கொண்டு போட்டுத்தான் மறு வேலை. ஆக அவன் வீடு எப்போதும் மனநிறைவைத் தரும் விதத்தில் இருக்கும்.

மருமகளும் அப்படி வாய்க்க வேண்டுமே!

ஒரு நாள் அவன் வயலிலிருந்து வந்ததும் வீட்டுக்கு வராமலேயே அடுத்த ஊருக்குப் போய்விட்டான். அவனை அந்த ஊரில் யாருக்கும் தெரியாது. ''ஓட்டை உடைசல், சவம் பித்தளைக்குப் பேரீச்சம் பழம்' என்று நம்மூர்க்காரர்கள் கூவுவது



போல் -- 'குப்பை கூளம், ஓட்டடை, கந்தல், கசகேடு இருந்தாப் போடுங்க.... காசு தாரேன் கையிலே!'' என்று வண்டியை ஓட்டியபடி குரல் கொடுத்தான்.

ஊராருக்கெல்லாம் ஒரே ஆச்சரியம்!

குப்பை கூளம் ஓட்டடை கந்தல் கசகேடுகளைக் காசு கொடுத்து ஒருவன் வாங்கலாவது?

உண்மைதான் என்று நிர்மானமானதும் அவசர அவசரமாக வீட்டைச் சுத்தம் செய்து குப்பை கூளங்களைக் கூடை கூடையாகச் சேர்த்துக் கொண்டு வந்து கொட்டிக் காசு வாங்கிச் சென்றார்கள்.

ஒருத்தியின் வீட்டில் மட்டும்... பாவம்! குப்பையே சேரவில்லை. அவள்தான் தினமும் கூட்டிப் பெருக்கி ஓட்டடை அடித்து வீட்டைச் சுத்தம் செய்பவளாயிற்றே!

கிழவன் அவளைக் கூப்பிட்டு விவரம் தெரிந்து கொண்டான். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த அவளுக்கு அழகே உருவான மகள் வேறு இருந்தாள். கிழவன் கெட்டிக்காரன்தான்! அவளைத் தன் மகனுக்கு மணம் முடித்துப் பணக்காரியாக்கி நிம்மதி அடைந்து ஊரார் வயிற்றெரிச்சலைக் கட்டிக் கொண்டான்.

''தேஜ்''

டபிள் விஸில்

உமாசந்திரன்

கோபம் பொத்துக் கொண்டு வந்தது. கண்டக்டர் பங்காருவுக்கு. இந்தத் துப்பு கெட்ட மனிதருக்கு எவ்வளவு தரம் சொன்னாலும் புரியவில்லையே! அவர் இஷ்டப்படியெல்லாம் பஸ்ஸை ஒவ்வோர் இடத்திலும் நிறுத்திக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? அவன் டபிள் விஸில் அடிப்பதற்கு மதிப்பே கிடையாதா? அல்லது வயதுக் கோளாறினால் இந்த மனிதருக்குக் காதுதான் மந்தமாகி விட்டதா?

''என்ய்யா! உங்ககூட எத்தினிவாட்டி மல்லுக்கு நிக்கிறது? நான் டபிள் விஸில் குடுத்தது உங்க காதிலே விழுந்திச்சா இல்லியா?'' என்று டிரைவர் தாமோதரத்தின் காதருகே சென்று ஆத்திரத்துடன் கத்தினான் பங்காரு.

''விசாரமே இல்லே நாயனா. ஆனா ஸ்டாண்டிலே நின்னவங்க கையைக் காட்டும்போது நிக்காம போகலாமா? பஸ்ஸிலேதான் இன்னும் பத்து ஆளுக்கு இடம் இருக்கே!''

''பஸ்ஸிலே இடம் இருக்கிறதும் இல்லாததும் எனக்குத் தெரியுமா, உங்களுக்குத் தெரியுமாய்யா? ஸ்டியரிங்கை வலுவாய்ப் பிடிச்ச ரோட்டை நல்லாப் பார்த்து ஓட்டறதுதானேய்யா உங்க டூட்டி!''

''என் டூட்டி எனக்குத் தெரியாம இல்லே பங்காரு. ஆனா பாசஞ்சருங்க சௌகரியத்தைக் கவனிக்கிறதும் என் வேலைதானே! நம்ம பஸ்ஸை நிறுத்தாமப் போயிட்டா ஸ்டாண்டிலே நின்ன பாசஞ்சருங்க நம்மைத்தானே திட்டுவாங்க! இன்னும் கால் மணி நேரம் கால் கடுக்க நிக்கும்படி ஆயிடுமே அவங்களுக்கு!''

'' அந்தக் கவலையெல்லாம் உங்களுக்கு எதுக்கு? நான் குடுக்கிற விசில்தானே உங்களுக்குக் கணக்கு? உங்க விருப்பத்துக்குப் பஸ்ஸை நிறுத்தறதும் ஓட்டறதுமாயிருந்தா அப்புறம் நான் ஒரு கண்டக்டர்ன்னு எதுக்காக இருக்கணும்?''

''கோவிச்சுக்காதே, பங்காரு. இனிமேல் உன் விஸில்படியே ஒண்ணொண்ணும் செய்யறேன்'' என்று தாமோதரம் குழைவாகக் கூறியதும் பங்காருவின் ஆத்திரம் சற்றுத் தணிந்தது. இருந்தாலும் குமுறல் ஒரேயடியாக அடங்கி விடவில்லை.

''சேசேசே! தினம் தவறுமே இதே ரோதனையாய்ப் போச்சு, இம் மனுஷரோட!'' என்று முணுமுணுத்துக் கொண்டே புதிதாக பஸ்ஸில் ஏறியவர்களுக்கு டிக்கட் கிழித்துக் கொடுக்கும் கடமையைக் கவனிக்கச் சென்றான்.

இந்த 'ரூட்'டில் தனக்கு வேலை மாற்றம் வேண்டும் என்று பங்காரு முனைந்து முயற்சி செய்து அதில் வெற்றியும் பெற்ற போது இப்படி ஒரு நித்திய வேதனைக்குத் தான் ஆளாக வேண்டியிருக்கும் என்று அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. தான் குடியிருந்த இடத்திலிருந்து வேலைக்கு வந்து போக இந்த ரூட் வசதியாயிருக்குமென்ற ஒரே காரணத்துக்காகத்தான் அவன் அது விஷயத்தில் அவ்வளவு ஆர்வம் காட்டினான். தாயாரையும் தங்கையையும் தவிர அவனுக்கு வேறு யாரும் கிடையாது. மூன்று மாதங்களுக்கு முன்புதான் அவர்கள் இருவரும் கிராமத்திலிருந்து சென்னைக்கு வந்து அவனுடனேயே இருக்க ஆரம்பித்திருந்தனர். மூவரும் சற்று வசதியாக வாழ்வதற்கு ஏற்றதாக அவன் தேர்ந்தெடுத்திருந்த எளிய வீடு இந்த ரூட்டின் இறுதி நிலைக்குக் கூப்பிடு தூரத்தில் இருந்தது. அந்தச் சௌகரியத்தைக் கருதித்தான் அவன் நான்கு வருஷங்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்த 'ரூட்டி'லிருந்து இந்த 'ரூட்டு'க்கு மாற்றிக் கொண்டிருந்தான்.

கொஞ்சம் சன்னை பிடித்த ரூட்தான். திசைக்கு இரண்டு வீதம் மொத்தம் நான்கு பஸ்களே ஓடிக் கொண்டிருந்ததால் வழியில் ஒவ்வொரு ஸ்டாப்பிலும் கும்பல் நெரிந்து கொண்டிருக்கும். அதைப் பற்றிப் பங்காரு கவலைப்படவில்லை. எவ்வளவு கும்பலாயிருந்தாலும் அதைச் சமாளித்துக் கொள்ளும் சாமர்த்தியம் தனக்கு உண்டு என்று அவன் நம்பினான். ஆனால் அந்த ஆறு மைல் ரூட்டின் ஒவ்வொரு ஸ்டாப்பிலும் இப்படி ஒரு தொல்லை பிடித்த டிரைவருடன் போராட வேண்டியிருக்கும் வேதனையை நினைத்துத்தான் அவனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.


புதிய ரூட்டில் வேலை ஏற்கச் சென்ற முதல் நாளே டிரைவர் தாமோதரத்தைப் பார்த்தும் பங்காருவுக்குப் பகீரென்றது. ஐம்பது வயதைத் தாண்டிவிட்ட தோற்றம். பளபளவென்று முட்டை வடிவமாக வழுக்கை விழுந்த தலை. வெள்ளி பிரேம் போட்ட பழைய காலத்து மூக்குக் கண்ணாடி. இவ்வளவுக்கும் மேல் அந்த அதிகாலையில் ஆசாரமாகக் குளித்துவிட்டு நெற்றி நிறையப் பட்டையாகத் திருநீறு இட்டுக் கொள்ள அவருக்கு எங்கே நேரம் இருந்தது? நெற்றிக்குத் தீட்டிக் கொண்டது போக மிஞ்சிய திருநீற்றை வழுக்கைத் தலையிலும் அப்பிக் கொண்டிருந்தார் அந்த மகானுபாவர்!

''என்ன நாயனா? நீதான் புதுக் கண்டக்டரா? சர்வீஸுக்குப் புச்சா?''

''நாலு வருஷங்கள் சர்விஸ் பாத்திருக்கேன், பெரியவரே!''

''போடு தப்பல்! அப்பக் கவலையில்லே. சமாளிச்சுக்குவே!'' என்று அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார் தாமோதரம்.

''பெரியவரே, என் சாமர்த்தியத்தைப் போகப் போகப் புரிஞ்சுக்குவீங்க. நான்





முந்தி வேலை பார்த்த ரூட்டிலே எப்படித் தெரியுமில்லே? வண்டியை டிரைவர் ஓட்டலே, என் பிகில்தான் ஓட்டிச்சு. நான் பிகில் குடுத்தா வண்டி சர்ர்னு நிக்கும். பிகில் குடுத்தா அலறிக்கிட்டு ஓடும். டபிள் விசில் குடுத்தா நிக்கவே நிக்காது. எவ்வளவு கும்பலாயிருந்தாலும் அப்படியே அலற வச்சிடுவான் இந்தப் பங்காரு. சும்மா இல்லே'' என்றான் பங்காரு, மிடுக்காக.

தாமோதரம் மூக்குக் கண்ணாடிக்கு மேல் புருவத்தை உயர்த்தி அவனைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்தவாறு கூறினார்: ''பங்காரு, அவ்வளவு கரார் கண்டிப்பு எல்லாம் எனக்கு ஒத்து வராது. நான் பழைய காலத்து ஆசாமி. பத்து வருஷங்களா இந்த ரூட்டிலே பஸ் ஓட்டிக்கிட்டு இருக்கேன். கண்டக்டரோட பிகிலுக்கு மதிப்புக் குடுக்கணும்னு எனக்குத் தெரியும். ஆனா அதிலே கொஞ்சம் மனுஷத்தனமும் கலந்திருக்கணும்னு நினைக்கிறவன் நான்....''

''மனுஷத்தனத்தைப் பார்த்தா நம்ம வேலை நடக்காது பெரியவரே. ஒவ்வொரு சிங்கிளுக்கும் பஸ் லேட்டாப் போயி மெமோ வாங்கிக்கும்படி ஆயிடும்'' என்றான் பங்காரு.

தாமோதரம் ஒன்றும் சொல்லவில்லை. தமது ஆசனத்துக்கு நேரே மாட்டியிருந்த முருகன் படத்துக்கு ஒரு பூச்சரத்தை மாட்டி ஊதுவத்தி கொளுத்தி வைத்த பிறகு ஸ்டியரிங்கைத் தொட்டுக் கும்பிட்டு விட்டுத் தமது ஆசனத்தில் அமர்ந்தார்.

''சரிதான்! இந்தப் பத்தாம் பசலி டிரைவரோட நான் எப்படித்தான் காலம் தள்ளப் போறேனோ!'' என்று அப்போதே நினைத்துக் கொண்டான் பங்காரு.

இந்தப் பூஜை விஷயம் மட்டும் அல்ல; டிரைவர் தாமோதரத்தின் இன்னும் பல வழக்கங்கள் பங்காருவுக்கு எரிச்சலூட்டும்படி இருந்தன. பங்காரு எவ்வளவுக்கெவ்வளவு துடிதுடிப்பும் பரபரப்புமாயிருந்தானோ, அவ்வளவுக்கவ்வளவு தாமோதரம் எதிலும் பரபரப்பில்லாத நிதானத் தன்மையையே கடைப்பிடித்து வந்தார். ஒரு ஸ்டாப்பில் பஸ்ஸை நிறுத்தினால் அவன் பிஸில் கொடுத்த மறுகணமே வண்டியைக் கிளப்ப வேண்டியது தானே ? அதுதான் கிடையாது. ஆர அமர, முன்னும் பின்னும் பார்த்துவிட்டு மெதுவாகக் கியரைப் போட்டு விட்டு ஆக்ஸிலரேட்டரை அழுத்துவார்.

''சேசேசே ! சுத்த மசமசப்பு!'' என்று மனத்துக்குள் பொருமுவான் பங்காரு.

வண்டியைக் கிளப்பிய பிறகாவது வேகமாக ஓட்டுவாரா என்றால் அதுவும் கிடையாது. ஒவ்வொரு ஸ்டாப்பிலும் குறிப்பிட்ட நேரங்களில் வழக்கமாக யார் யார் ஏறுவார்கள் என்று தாமோதரத்துக்கு அத்துபடி. யாராவது ஒருவரின் தலை தென்படாவிட்டாலும் அவருக்கு அங்கிருந்து கிளம்ப மனம் வராது. நத்தை வேகத்தில் கியரை மாற்றாமலே சிறிது தூரம் ஓட்டிச் செல்வார். பங்காரு ஆத்திரத்துடன் எத்தனை முறை இரட்டை விஸில் கொடுத்தாலும் அவர் காதில் ஏறாது. ஒரு கையில் குடையும் இன்னொரு கையில் பிளாஸ்டிக் பையுமாகப் பரபரப்புடன் ஓடி வரும் ஆசாமியைப் பார்த்ததும் தாமோதரத்தின் முகம் மலரும். பிரேக்கை அழுத்தி அந்த மனிதர் ஏறிக் கொள்வதற்கு வசதி செய்வார். அதன் பிறகுதான் பஸ் முழு வேகத்துடன் கிளம்பிச் செல்லும்.

''ஏன் சார், இன்னிக்கு நீங்க லேட்டு? ஆபீசுக்கு மட்டம் போட்டிட்டீங்களோன்னு நினைச்சேன்!''

''இல்லே நாயுடு. இன்னிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டதும் புறப்படாததுமாகச் செருப்பு காலை வாரி விட்டுடுத்து.... மறுபடியும் வீட்டுக்கு ஓடிப் போய் அறுந்த செருப்பை வீசியெறிஞ்சிட்டு வீட்டுக்காரியோட சிங்கப்பூர்ச் செருப்பை மாட்டிக்கிட்டு வரும்படி ஆச்சு. ஒம்பதே முக்கால் பஸ் போயிடப் போறதேன்னு ஓட்டமா ஓடி வந்தேன். இந்த வயசிலே இந்த உடம்பைத் தூக்கிகிட்டு ஓடி வர முடியுதா, சொல்லுங்க! நாயுடு காரு தயவுபண்ணியிருக்கலேன்னா ஆபீசுக்கு லேட்டாப் போகும்படி ஆகியிருக்கும்'!''

''நீங்க வழக்கமா வந்து ஏர்றவங்க. உங்களுக்காக இதுகூடச் செய்யாட்டி அப்புறம் என்ன இருக்கு ?'' என்பார் தாமோதரம்.

''கொறைச்சல் இல்லே! பாசஞ்சர் வீட்டுக்கே பஸ்ஸை ஓட்டிக்கிட்டுப் போய் அழைச்சுக்கிட்டு வந்திடறதுதானே?'' என்று முணுமுணுப்பான் பங்காரு.

தாமோதரத்தின் மனிதத் தன்மை இன்னும் பலவிதங்களில் பங்காருவின் பொறுமையைச் சோதித்து வந்தது. குமுறும் எரிச்சலை அடக்கிக் கொள்வதைத் தவிர வேறு வழி இருக்காது பங்காருவுக்கு. என்றைக்காவது தாமோதரம் நேரம் தவறிச் சென்று மெமோ வாங்கிக் கொள்ள வேண்டும், அப்போது தருந்த விதத்தில் அவரை மடக்க வேண்டும் என்று அவன் கொண்டிருந்த ஆசை இன்னும் நிறைவேறாமலே நின்றிருந்தது. அந்த வயோதிகக் கரங்களில் என்னதான் மாய சக்தி இருந்ததோ? அவருடைய மசமசப்புக்கெல்லாம்ஈடு கொடுத்துக் கொண்டு எப்படித்தான் பஸ் அவ்வளவு கணக்காக இறுதி நிலையை எட்டுகிறதோ ! பங்காருவுக்கு அது புரியாத புதிராகவே இருந்து விட்டுப் போகட்டும், அதைப் பற்றி அக்கறை இல்லை. ஆனால் அவன் கண்டக்டர் என்று இருக்கும்போது அவனுடைய பிஸிலுக்கு மதிப்புக் கொடுக்காத அவருடைய அலட்சியப் போக்கு அல்லவா அவனுடைய பொறுமையைச் சோதிப்பதாக இருந்தது !

அன்றும் அப்படித்தான், இரட்டை விஸிலுக்கு ஒரு தடவைகூட மதிப்புக் கொடுக்கவில்லை தாமோதரம். ''இருக்கட்டும், டெர்மினஸுக்குப் போனதும் இந்த மனிதரைச் சரியானபடி விசாரிக்கிறேன்'' என்று மனத்துக்குள் கறுவிக் கொண்டே டிக்கட்டுக் கட்டுகளின் இறுதி இலக்கங்களைப் பதிவுத் தாளில் குறித்தவாறு சென்றான் பங்காரு.

ஆனால் பஸ் இறுதி நிலையை அடைந்தபோது அங்கே பங்காருவுக்குச் சற்றும் எதிர்பாராத அதிர்ச்சி காத்திருந்தது. தாமோதரத்திடம் காரசாரமாக வார்த்தைகளைக் கொட்டிவிட வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த அவன் தன்னுடைய ஆத்திரத்தையெல்லாம் மறந்து விட்டுத் தன் முழு கவனத்தையும் புதிய திசையில் திருப்ப வேண்டியதாகிவிட்டது. பங்காருவின் தங்கை பானுமதி பரபரப்புடன் அவனை எதிர்கொண்டாள்.

''என்ன பானு !''

''அம்மாவுக்குத் திடீர்னு நெஞ்சு வலி. மயக்கம் வந்தாப்பலே படுத்திருக்கா. எனக்குக் கைகால் ஓடலே. யாரை உதவிக்குக் கூப்பிடறதுன்னே தெரியலே. நேரே இங்கே ஓடி வந்திட்டேன். நல்ல வேளை. நீயும் சரியான சமயத்துக்கு வந்து சேர்ந்திட்டயே.''— பானுவின் பேச்சிலிருந்த தவிப்பும் விழிகளில் தேங்கி நின்ற கண்ணீரும் பங்காருவைப் பதறச் செய்தன.

''ஆனா எனக்கு வேலை இத்தோட முடிஞ்சு போயிடலேயே பானு. இன்னும் இரண்டு சிங்கிள் போய் வர வேண்டியிருக்குதே !''

''வேறே யாரையாவது உன் வேலையைப் பார்த்துக்கச் சொல்லிவிட்டு நீ லீவு போட்டுட்டு வந்துடு அண்ணா. நீ வேலை முடிஞ்சு வர்றதுக்குள்ளே அம்மாவுக்கு ஏதாச்சும் ஆயிருச்சுன்னா ?'' அந்த நினைப்பையே தாங்க முடியாமல் பானுவுக்கு விம்மல் பொங்கி வந்தது.

அப்போதுதான் தாமோதரம் அவர்கள் பேச்சைக் கேட்டவாறு அவர்களருகே வந்தார். பங்காருவின் பதற்றத்தைப் பார்த்து விட்டு அவர் அவனுக்கு ஆறுதல் கூறினார்.

''நாயுடு, இந்தச் சமயத்திலே நீ வேலையைப் பத்தி அலட்டிக்காதே. டைம்கீப்பர்



கணேச பஞ்சகம்

பா. ஆதிமூர்த்தி

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மரந்தோணி என்னும் கிராமத்தில் 1875-ம் ஆண்டு பிறந்தவர் காலஞ் சென்ற பா. ஆதிமூர்த்தி. தமிழ் இலக்கியத்தில் அபாரப் பற்றுக் கொண்ட இவர் மகாகவி பாரதியோடு தொடர்பு கொண்டவர். 'ஸ்வதேச பரிபாலினி' என்னும் பத்திரிகையை ரங்கூனிலிருந்து நடத்தியவர். யோகவாசிஷ்டம், ஹடயோகம் முதலியவற்றைத் தமிழில் செய்யுளாக வடித்துள்ளார். பாரதி பிறந்த நாளில், அவரோடு தொடர்பு கொண்ட இக் கவிஞரின் கணேச பஞ்சகத்திலிருந்து நான்கு செய்யுள்களை வெளியிட்டு அஞ்சலி செலுத்துகிறோம். — ஆசிரியர்.

வானுதி அமரர்களும் மண்ணுதி மானிடமும் வனத்தில் வாழும்
ஞானுதி முனிவரரும் நாகர்களும் சித்தர்களும் நாளும் நம்பி
மோனுதி முழுமுதற்கும் முழுமுதலாய்க் கொண்டாடும் முத்திவித்தே
தானுகி யெழுந்தருளும் கணபதியின் திருவடிகள் தலைமேற்கொள்வாம்

உலகமெலாம் படைப்போனும் உயிரெலாம் புரப்போனும் உகந்த காலத்து
அலகிலா அண்டமெலாந் தானுகி அழிப்போனும் அமரர் யாரும்
மலமுலா மானிடமும் மாதவரும் பரம்பொருளாய் வணங்கித் தங்கள்
நலமெலாம் அடைகின்ற முதற்கடவுள் திருத்தொண்டு நாளும் செய்வாம்

ஆரம்பம் புரியும்ஒரு தொழில் இனிதாய் முடிய வெனில் அமரர் யாரும்
பேரன்பு மிகப்பெருகும் மானிடரும் முனிவரரும் பிழையிலாது
நாரம்பூ முதலிய கொண்டு அருச்சித்தும் பூசித்தும் நலமே யெய்தும்
ஏரம்பன் திருவடியை எந்நாளும் வணங்கி நமது இடுக்கண் தீர்ப்பாம்

தொந்தியுறு பெருவயிறுந் துணைக்கரமும் செங்கோடுந் துகள்தீர் துய்ய
அந்தமதித் திருமுடியுங் கார்மேகப் பேருருவும் அன்பு மேற்கொண்டு
எந்தவுலக மும்பணியும் திருத்தாளும் நமது இதயத்து என்றுந்தோன்றத்
தந்திமுகன் திருவுருவைத் தரிசித்து நமதுகுறை தவிர்ந்து வாழ்வாம்.

◆◆

கிட்டே சொல்லி வேறே ரிலீவிங் கண்டக்டருக்கு ஏற்பாடு செய்துக்கிடலாம். முதல்லே நீ வீட்டுக்கு ஓடிப் போய் அம்மாவுக்கு வேண்டியதைக் கவனி'' என்று பரிவுடன் பங்காருவின் தோளைத் தட்டிக் கொடுத்து அணைத்தவாறு அவனை டைம்கீப்பரிடம் அழைத்துச் சென்றார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் பங்காரு பானுவுடன் ஓட்டமும் நடையுமாக விரைந்து வந்து சற்று ஒதுக்குப்புறமாயிருந்த தனது ஓட்டுக் கூரை வீட்டுக்குள் நுழைந்தான்.

''பானு, நீ வந்திட்டாயாம்மா? என்னைத் தனியே விட்டுட்டு நீ எங்கே போயிட்டே ?''— உள்ளிருந்து பலஹீனமாக ஒலித்த தாயாரின் குரலைக் கேட்டதுமே பானு பரபரப்புடன் உள்ளே ஓடினுள்.

''நீ மயக்கமாப் படுத்ததும் எனக்கு ஒரே பயமாப் போயிடுச்சு அம்மா. அண்ணனை அழைச்சுக்கிட்டு வர ஓடினேன்....''

''அம்மா, இப்ப எப்படியம்மா இருக்கு ? நல்ல காலம் நீயாகவே கண்ணை முழிச்சியே'' என்று கூறியவாறு தாயார் படுத்திருந்த கயிற்றுக் கட்டிலருகே வந்தான் பங்காரு.

''நானு கண்ணை முழிக்கலே நாயனு. அந்தப் பொண்ணு வந்திருந்திச்சே, அதுதான் எனக்கு என்னென்னவோ செஞ்சு என் மயக்கத்தைத் தெளிய வச்சுது....''

''எந்தப் பொண்ணு அம்மா?'' என்று வியப்புடன் கேட்டாள் பானு.

''எனக்கே தெரியலே பானு. ரேஷன் ஆபீஸிலே வேலையாம். ஒவ்வொரு ரேஷன் கார்டிலேயும் குடுத்திருக்கிற தகவல் எல்லாம் சரியாயிருக்கான்னு வீடு வீடாப் போயி பார்க்கற வேலை குடுத்திருக்காங்க போலே இருக்கு. நம்ம வீட்டுக்கு வந்த போது நான் மயக்கமாப் படுத்திருந்ததைப் பார்த்து அந்தப் பொண்ணு பதறிப் போயிருக்கு. பள்ளிக்கூடத்திலே முதல் சிகிச்சையெல்லாம் கத்துக்கிட்டிருக்காம். அவசர அவசரமா மண்ணெண்ணெய் ஸ்டவ்வைப் பத்த வச்சுத் தவிட்டை வறுத்து எனக்கு நெஞ்சிலே ஒத்தடம் குடுத்து எண்ணெய்த் திரிப் புகையை என் மூக்கிலே பிடிச்சதும் நான் முழிச்சுக் கிட்டேன்.''

'' அந்தப் பொண்ணு அப்படியே போயிருச்சா ?''

''இல்லே. எனக்கு டீ வாங்கிட்டு வர ஓடியிருக்கு.''

''அது சரி அம்மா: இப்போதைக்குச் சரியாயிருச்சன்னு மெத்தனமாயிருந்திடமுடியாது. நான் இப்பவே போய் டாக்டரை அழைச்சுக்கிட்டு வந்திடறேன்.''

''டாக்டர் எதுக்கு நாயனா! தன்னேப் போலவேஎன் உடம்பு சரியாயிடும்.''

''அப்படி அலட்சியமா இருக்க முடியாதம்மா. டாக்டர் வந்து பார்த்து உன் உடம்புக்கு ஒண்ணுமில்லேன்னு சொன்னாத்தான் என் மனசு நிம்மதிப்படும்'' என்று கூறி அங்கிருந்து விரைந்து சென்றான் பங்காரு.

மறு நாள் காலையில் அவன் வேலைக்குச் சென்ற போது தாமோதரம் பரிவுடன் விசாரித்தார்: ''உங்கம்மா இப்போ எப்படி இருக்காங்க, பங்காரு ?''

''நல்லாத்தான் இருக்காங்க. நேத்து டாக்டரைக் கூட்டி வந்து பார்க்கச் சொன்னேன். கவலைப்படும்படியா ஒண்ணும் இல்லேன்னு சொல்லி மாத்திரை, டானிக் எல்லாம் எழுதிக் குடுத்திட்டுப் போனாரு..... ரெண்டு மாத்திரை சாப்பிட்டதிலேயே அம்மாவுக்கு உடம்பிலே நல்ல தெம்பு வந்திடுச்சு'' என்றான் பங்காரு.

தாமோதரம் காட்டிய பரிவு அவனுக்கு இதமாயிருந்தது. தினமும் அவரிடம் எரிச்சல் படுவது போல் அன்று எரிச்சல்படக் கூடாது என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டான்.

ஆனால் பங்காருவின் அந்த உறுதி சில மணி நேரத்துக்குக்கூட நீடிக்கவில்லை. வெயில் ஏற ஏறஆபீஸ்நேரத்து எரிச்சலுடன் தாமோதரத்தின் மசமசப்பும் சேர்ந்து கொள்ளவே பல தடவை அவன் பொறுமை இழந்து கூச்சல் போடும்படி ஆகிவிட்டது. ஆனால் அவனுடைய சிடுசிடுப்பையோ கத்தலையோ தாமோதரம் லட்சியம் செய்தால்தானே ? சிறிதும் முகம் சுளிக்காமல் தமது இயல்பான புன்னகையுடன் வழக்கமான நிதானப் போக்கிலேயே பஸ்ஸை ஓட்டிக் கொண்டிருந்தார்.

ஆபீஸ் நேரம் தாண்டி ஏறுவோர் இறங்குவோரின் கும்பல் சற்றுக் குறைந்ததும்தான் பங்காருவின் சிடுசிடுப்பு சற்றுக் குறைந்தது. தாமோதரத்திடம் கடுமையாகப் பேசிவிட்டோமோ என்ற கழிவிரக்கம் அவன் மனத்தில் தோன்றியது. பஸ்ஸில் அப்போது ஏழெட்டுப் பேர்தான் அங்கங்கே உட்கார்ந்திருந்தனர். டிரைவர் சீட்டை அடுத்தாற் போல் காலியாயிருந்த ஒரு சீட்டில் உட்கார்ந்து கொண்டான் பங்காரு.

''என்ன நாயனா ? இப்பவாவது உன் முகத்திலே சிரிப்பைப் பார்க்க முடியுமா ?''

''நீங்க அளவுக்கு மிஞ்சித்தான் என் பொறுமையைச் சோதிச்சிடறீங்க வாத்தியாரே. என் பெல்லுக்குக் கொஞ்சம் மதிப்புக் கொடுத்தால் கொறைஞ்சா போயிடுவீங்க ?'' என்று பங்காரு பரிதாபமாகக் கேட்டான்.

''அப்படி நினைக்காதே நாயனா. நானும் உன் பெல்லுக்குக் கட்டுப்பட்டுத்தான் பஸ்ஸை ஓட்டணும்னு பார்க்கிறேன். ஆறு வருஷக் கணக்கா படிஞ்ச போன வழக்கத்தை மாத்திக்கிட முடியலே. கையும் காலும் நான் சொன்னபடி கேட்டால்தானே ? உன்னோட பெல்லைவிட மனுஷத்தனத்தைத்தான் அதுங்க பெரிசா மதிக்குதுங்க.''

''நல்ல மனுஷத்தனம் ! இனிமேல் நான் என் பெல்லை அடிக்காமலே இருந்திடறேன் !''

''அப்படி உன்னாலே இருக்க முடியாது நாயனா ! என் கை, காலுக்கு மனுஷத்தனம் எப்படியோ அப்படி உனக்குப் பெல். அப்பப்போ அதை உபதல்லேன்னு வேலே பார்த்த திருப்தியே உனக்கு ஏற்படாது'' என்றார் தாமோதரம்.

அதே சமயம் பஸ் அடுத்த ஸ்டாப்பை நெருங்கியதும் தன்னையறியாமலே டபிள் விஸில் கொடுத்தான் பங்காரு.

''பாரு, பாரு! ஸ்டாப்பிலே ஆள் நிக்கிறதைப் பார்த்தும் டபிள் விஸில் குடுக்கறியே!''

''எறங்கறவங்க இல்லேன்னு டபிள் விஸில் தான் ! நிக்கறவங்களைப் பத்தி நான் ஏன் கவலைப்படணும் ?''

''அதனாலேதான் நான் கவலைப்படறேன்!'' என்று சிரித்துக் கொண்டே தாமோதரம் பிரேக்கை அழுத்தி பஸ்ஸை நிறுத்தினார்.

அந்த ஸ்டாப்பில் இரண்டு மூன்று ஆண் பிரயாணிகளும் ஓர் இளம் பெண்ணும் நின்றிருந்தார்கள். எல்லோரும் ஏறிக் கொண்ட மறுகணமே விஸில் கொடுத்தான் பங்காரு.

பஸ் புறப்பட்டுச் சிறிது தூரம் சென்ற பிறகு புதிதாக ஏறியவர்களுக்கு டிக்கட் கிழித்துக் கொடுக்க வந்த போதுதான் அந்தப் பெண் எடுத்து வந்திருந்த கோணிப் பை பங்காருவின் கண்களில் உறுத்தியது.

''என்னம்மா பையிலே?''

''ஏன்? அரிசிதான் !''

''அரிசிதானா! அரிசிப் பையெல்லாம், பஸ்ஸிலே ஏத்தக் கூடாது. நீ இறங்கிடு !'' என்று கண்டிப்புடன் கூறிய பங்காரு பஸ் நிற்பதற்காக விஸிலை அடித்தான்.

''நான் இறங்க மாட்டேன்!''

''இறங்கமாட்டாயா?''

''எதுக்கு இறங்கணும்? அரிசிப் பையை பஸ்ஸிலே ஏத்தக் கூடாதுன்னு எங்கே சட்டம் இருக்கு ?''

''சட்டமா பேசறே? எனக்குத் தெரியாத சட்டம் உனக்குத் தெரிஞ்சுடுச்சுன்னு நினைப்பா ?''

''தெரிஞ்சுதான் பேசறேன். கறுப்பு அரிசிக்குத்தான் அந்தச் சட்டமெல்லாம் இருந்திச்சு! இது வெள்ளே அரிசி!'' என்று அந்தப் பெண் கூறியதும் மற்றப் பிரயாணிகள் 'கொல்' லென்று சிரித்தனர்.

''இண்டலா செய்யறே ?'' என்று பல்லைக் கடித்தான் பங்காரு.

அதே சமயம் அவனுடைய ஆத்திரமெல்லாம் டிரைவர் தாமோதரத்தின் மீது திரும்பியது. பஸ் நிற்பதற்காக அவன் விஸில் கொடுத்தும் அதைச் சட்டை செய்யாமல் பஸ்ஸை நிறுத்தாமலேயே சென்று கொண்டிருக்கிறாரே !

''என்னய்யா, நான் விஸில் குடுக்கிறது உங்களுக்கு மதிப்பாகவே தோணலியா ? நிறுத்தாம ஓட்டிக்கிட்டிருந்தால் என்ன அர்த்தம்?'' என்று அவரைப் பார்த்துக் கத்தினான்.

''அந்தப் பெண்ணுகூட உனக்கு என்ன தகராறு நாயனா ?''

''இது ரொம்பத் துடுக்கான பொண்ணு, வாத்தியாரே. இது என் கூட மல்லுக்கு


தாவத்
துடிக்கும்
தனிப்பெருமை
தவழவே
தாவண்கெரே
டெரீன் காட்டன்
தாவண்கெரே காட்டன் மில்ஸ் — பண்டைய மரபை இன்றைய வடிவாய்ப் படைக்குமிடம்!

நிக்கறது இது முதல் தடவை இல்லே. எப்ப பஸ்ஸிலே ஏறினாலும் என் வாயைக் கிளறி வம்பு குடுக்காம இருக்காது. தொல்லே புடிச்ச பொண்ணு !''

''போல் ! என்னாலே உனக்கு என்னய்யா தொல்லே? வாயை அடக்கிப் பேசு !''

''ஏ, பொண்ணு ! என்னே அடக்கவா வரே ?''

''சும்மா ஒட்டாதேய்யா! கண்ணே உருட்டி முழிச்சிட்டா இங்கே யாரும் பயந்திட மாட்டாங்க !''

''ஹோல்டான்! ஹோல்டான்!'' என்று கத்தினார் தாமோதரம். ''இது சர்க்கார் பஸ்ஸு. வெட்டித் தகராறுக்கு இதிலே இடம் கிடையாது!'' என்றார் குறும்பாக.

பங்காரு புதிய திசையில் தன் தாக்குதலைத் திருப்பினான்.

''இத பாரம்மா. இந்த மூட்டைக்கு லக்கேஜ் குடுத்தாகணும்.''

''இவ்வளவுதானே! அதை முன்னமேயே கேட்டுத் தொலேக்கிறதுக்கென்ன?'' என்று கூறிய அந்தப் பெண் மறுபேச்சில்லாமல் டிக்கட்டுக்கான சில்லறையை எடுத்து நீட்டினாள்.

திருப்தியுடன் சிரித்தவாறு ஆக்ஸிலேட்டரை அழுத்தினார் தாமோதரம்.

அதற்கப்புறம் இரண்டு மூன்று சிங்கிள் போய் வந்த பிறகு பங்காருவின் வேலே முடிந்து விட்டது. களேப்பும் பசியும் அவனே வாட்டி எடுத்தன. அவன் தாயார் உடம்புக்கு முடியாமல் படுத்திருந்தாலும் பானு கட்டாயம் சமையல் செய்து வைத்திருப்பாள். வீட்டுக்குப் போனதும் பசி தீரச் சாப்பிட்டுவிட்டு ஒரு தூக்கம் போட வேண்டும் என்ற ஆவலுடன் வீட்டை நோக்கி நடந்தான் பங்காரு.

வீட்டுக் கூடத்தில் அவன் தாயார் கட்டிலில் சாய்ந்தவாறு உட்கார்ந்திருந்தாள். பங்காருவைப் பார்த்ததும் அவள் கூறினாள்: ''நீ வந்திட்டயா நாயனு? பசியோட வந்திருக்கேன்னு உன்னேப் பார்த்தாலே தெரியுது. கொஞ்சம் பொறுத்துக்க. அஞ்சே நிமிஷத்திலே சாப்பாடு தயாராயிடும்.''

''என்னம்மா இது? இனிமேதான் சாப்பாடு தயாராகப் போகுதா? பானு என்ன செய்துக்கிட்டிருந்தா இத்தினி நேரமும் ?''

''கோவிச்சுக்காதே நாயனு. ரேஷன் அரிசி நேத்தோட தீர்ந்து போயிடுச்சு. வீட்டிலே மணி அரிசி இல்லே. பழைய ரேஷன் கடையை இன்னும் மாத்தாமலே வச்சிருக்கோமில்லே ! பானு எப்படி என்னேத் தனியா விட்டுட்டு ரேஷன் வாங்கப் போகும்? அந்தப் பாமாப் பொண்ணுதான் சமயத்துக்கு வந்து கைகொடுத்திச்சு. ஆபீசுக்கு அரை நாள் லீவு போட்டுட்டு ரேஷன் வாங்கிட்டு வந்து வீட்டிலே சேர்த்திருக்கு!''

''பாமாவா ? யாரது ?''

''நேத்து எனக்கு மயக்கம் தெளிய வச்சதே அந்தப் பொண்ணுதான். நேத்து நீ டாக்டரைக் கூட்டி வரப் போயிட்டேல்லே? அதனால் தான் அந்தப் பொண்ணே நீ பார்க்க முடியல்லே. இப்பக்கூட அது பானுவுக்கு ஒத்தாசையா சமையல் அறையிலேதான் ஏதோ செய்துக்கிட்டிருக்கு !''

அதே சமயம் பங்காருவின் கண்கள் கூடத்தின் ஒரு மூலேயில் வைக்கப்பட்டிருந்த அரிசிப் பையைப் பார்த்து விட்டன.

''இந்தப் பொண்ணு, அந்தப்பொண்ணு?'' என்று கூவி விட்டான்.

''நீ என்ன கேக்கறே நாயனு ?'' என்று கேட்டாள் தாயார் வியப்புடன்.

அதற்குள் சமையல் அறையிலிருந்து அந்தப் பெண்ணே பானுவுடன் கூடத்துக்கு வந்து விட்டாள். பஸ்ஸில் அவனுடன் போராடிய அதே பெண் ! ஆனால் அவன் பஸ்ஸில் வந்த போதெல்லாம் அவனிடம் கடுகடுப்பையே காட்டி வந்த பங்காருவின் மனத்தில் இப்போது இந்த வீட்டின் மாறுபட்ட சூழ்நிலேயில் அவளேப் பார்த்து இந்த இன்பக் கிளுகிளுப்பு எப்படி உண்டாகிறது?

''அண்ணு, ஒரு அஞ்சு நிமிஷம் பொறுத்துக்க. சோறு வடிச்சு இறக்கியாச்சு. உலே ஆறினதும் தட்டு வச்சிடறேன்'' என்றாள் பானு.

''பானு, அதுக்குள்ளே என்ன அவசரம் ? இன்னும் நல்லாக் காயட்டும் உங்க அண்ணன். அரிசிப் பையைப் பஸ்ஸிலே எடுத்து வரக் கூடாதுன்னு வம்பு குடுத்தவர் தானே!'' என்றாள் பாமா, நமட்டுச் சிரிப்புடன் பங்காருவைப் பார்த்தவாறு.

''பதிலுக்கு வம்பு குடுக்க நீ எங்க வீட்டுக்கே வந்திட்டயாக்கும் !'' என்றான் பங்காரு.

கதவருகே கனேக்கும் சத்தம் கேட்டது.

''நிரந்தரமாகவே வம்பு குடுக்கத் திட்டம் போட்டிருக்காளோ என்னவோ !'' என்று கூறிக் கொண்டே உள்ளே வந்தார் தாமோதரம். திகைப்புடன் அவரைப் பார்த்தான் பங்காரு.

''நாயனு! என்னேத் தேடி இங்கேயே வந்திட்டீங்களே ! நான் இங்கேதான் இருப்பேன்னு உங்களுக்குத் தெரியுமா?''

''அதைப் புரிஞ்சுக்கிடறதுக்கு ஞான திருஷ்டி வேணும், பாரு ! உன் மனசைத் தான் நான் எனனிக்கோ புரிஞ்சுக்கிட்டேனே !''

''ஏங்க, பாமா உங்க மகளா? எனக்குத் தெரியவே தெரியாதே!'' என்றான் பங்காரு.

''தெரிஞ்சிருந்தா இவ்வளவு தூரத்துக்கு வராதேது ?'' என்று கண்ணேச் சிமிட்டிய தாமோதரம் பங்காருவின் தாயாரைப் பார்த்து, ''அம்மா! பாமா தாயில்லாப் பொண்ணு. உங்களேத்தான் தாயாரா மதிச்சிருக்கா'' என்றார்.

''பாமா எங்க வீட்டுக்கு மருமகளா வந்தால் மகாலட்சுமியே வந்த மாதிரி'' என்றாள் தாயார்.

''நாயனு, என்ன அப்படி முழிக்கிறே ? இங்கேயும் டபிள் விஸில் குடுத்திட்டு ஓடலாம்னு நினேக்காதே ! காலா காலத்திலே அம்மாவையும் தங்கையையும் அழைச்சுக்கிட்டுப் பாமாவுக்குப் பரிசம் போட நம்ம வீட்டுக்கு வந்திடணும்'' என்றார். தாமோதரம்.

'' இவர் வீட்டு அரிசிக்கு என்கிட்டே லக்கேஜ் வசூல் செய்தாரில்லே ? அதுக்கு வட்டியும் முதலுமா பரிசம் வந்து சேரணும்'' என்று சிரித்தாள் பாமா.



★ இக் குறியிட்ட கடிதம் ரூ. 15/- பரிசு பெறுகிறது.

★**மா**ணவர்கள் அரசியலில் ஈடுபடுவது தவறு அல்ல என ஓர் அமைச்சர் கூறியதன் விளைவு, இன்று மாணவர்களிடையே அரசியல் விசுவரூபம் எடுத்துத் தலைவிரித்து ஆடுகிறது. இதன் முதல் கட்டம் கல்லூரியின் மாணவர் தலைவர் தேர்தலாகும். இத் தேர்தலில் மாணவர்கள் கட்சிச் சார்பாக நின்று கட்சிச் சார்பாக வோட்டுக் கேட்கின்றனர். இதற்காக மாணவர்கள், பொதுத் தேர்தலில் எவ்வாறு அரசியல் கட்சிகள் போட்டி போட்டுக்கொண்டு விளம்பரம் செய்கின்றனவோ அவ்வாறே செலவு செய்து விளம்பரம் செய்கிறார்கள். இதனால் மாணவர்களிடையே ஒருவித வெறித் தன்மையும் பகை உணர்ச்சியும், வளர்கின்றன. முடிவில் ஒரு கட்சி மாணவர் வெற்றி பெற்றால் மற்ற கட்சி மாணவர்கள் கிளர்ச்சி செய்யவும் துணிகிறார்கள். இதன் விளைவாகக் கல்லூரி மூடப்படுகிறது. பாடங்களைச் சரிவர ஆசிரியர்களால் நடத்த முடிவதில்லை. முடிவில் பாதிக்கப்படுபவர்கள் மாணவர்களே.

மேற்கண்ட காரணங்களால் இவ்வருட ஆரம்பத்திலேயே கடலூர் அரசினர் கலைக் கல்லூரி பாதிக்கப்பட்டுள்ளது. சென்ற வருடமும் இங்கு இதே நிலைதான். தற்போது ஒரு வாரம் கல்லூரிக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. இத்தேர்தல் நோய் மற்றக் கல்லூரிகளில் பரவவிடாமல் அரசினர் தடுக்க வேண்டும்.

சிறுவந்தாடு
14-8-70 கோ. ராமசாமி

உலகம் முழுதும் போற்றி வளர்க்கப்படுகிற சம்ஸ்கிருத மொழிக்குத் தமிழ் நாட்டில் மட்டும் வளர்ச்சி யடைய வழியில்லாமல் போய்விட்டது. இது மிக வருந்தத்தக்க நிலை. பாதிக்கப்பட்ட இம்மொழி ஆசிரியர்களுக்கு மாற்று வேலை கொடுக்கப்பட்டு விட்டதாக அரசு சமாதானம் கூறுகிறது. ஆனால் மாற்று வேலை ஏற்ற ஆசிரியர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த சம்ஸ்கிருத மொழியைக் கற்றிருப்பார்கள்? இரு மொழித் திட்டத்தால் அவர்கள் மனம் எப்படிப் புண்பட்டிருக்கும்? எதிர்காலத்தில் சம்ஸ்கிருதத்தின் நிலை என்ன? சம்ஸ்கிருதத்துக்காகவே தங்கள் வாழ்நாட்களில் பாதிக்கு மேல் செலவழித்து, ஆனால் தற்சமயம் ஓர் ஆரம்பப் பள்ளி ஆசிரியராகவோ, லைப்ரேரியன் போன்ற வேறு வேலைகளிலோ நியமிக்கப்பட்டுள்ளவர்களின் மன நிலையை எப்படி வர்ணிப்பது?

தஞ்சை,
15-8-70 எஸ். சத்தியமூர்த்தி

கல்கி ஜூலை 19ம் தேதி இதழில் "வர்த்தகப் பெருமக்களின் அர்த்தமிக்க மகாநாடு" என்ற தலைப்பில் வெளிவந்துள்ள கட்டுரையில் மார்க்கெட் கமிட்டி இயங்கும் விதத்தைப் பற்றியும், சட்டத்தைப் பற்றியும் வியாபாரிகள் குறை கூறிப் பேசியதாகக் குறிப்புக் காணப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மார்க்கெட் கமிட்டி ஏற்பட்டு விவசாயப் பெருங்குடி மக்கள், பிரமுகர்கள் ஆகியவர்களின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வருகிறது. வியாபாரிகளின் உறவுக்குக் கை கொடுத்து, உழவர், உற்பத்தியாளர் ஆகியவர்களின் உரிமைக்குக் குரல் கொடுப்பதே விளைபொருள் விற்பனைச் சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

மாவட்ட மார்க்கெட் கமிட்டியின் பொறுப்பில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனைப் பொருள்கள் சரியாக எடை போடப்படுகின்றன. போட்டியின் காரணமாக அதிக விலை கிடைக்கின்றது. இடைத்தரகர்கள் கிடையாது. பிடித்தங்கள் ஏதுமின்றி முழுப் பணத்தையும் அன்றே விவசாயி பெற்றுச் செல்ல முடிகிறது. மார்க்கெட் நிலவரங்கள் அறிவிக்கப்படுகின்றன. இரு தரப்பினருக்கும் பல நன்மைகளை ஈந்து சேவை மனப்பான்மையுடன் பணி புரிந்து பொதுமக்களுக்குத் தொண்டாற்றிவருகிறது.

தஞ்சாவூர்,
3-8-70 நா. கோவிந்தராஜுலு,
தலைவர், தஞ்சாவூர் மார்க்கட் கமிட்டி

நாளுக்கு நாள் விளம்பர மோகம் அரசியலார்க்கு அதிகரித்து வருகின்றது. எடுத்துக்காட்டாக இராமநாதபுரத்திலிருந்து இரு மைல் தொலைவிலுள்ள காட்டூரணி என்னும் கிராமத்தில் சுமார் பத்து வருடங்களாக 'காந்தி நகர்' என்று அழைக்கப்பட்டு வந்த அரிசன மக்கள் வாழும் பகுதி, சமீபத்தில் எங்கள் தொகுதி எம். எல். ஏ.யின் பெயரால் 'தங்கப்பாபுரம்' என்று மாற்றி அமைக்கப்பட்டது. இதில் வியப்பு என்னவென்றால், மாண்புமிகு நமது சட்ட அமைச்சர் மாதவன் தலைமையில் இந்தப் பெயர் மாற்றுவிழா நடந்தது. காலம் முழுதும் காந்தியார் வழி நடப்போம் என்று மொழிந்துவிட்டு, காந்தியாரை அவமதிக்கும்வகையில் இத்தகைய நிகழ்ச்சி நடப்பதைக்கண்டபின்னும் அரசினர் வாளாவிருப்பது முறையன்று.

பழங்குளம்
20-8-70 கா. சுப்பையா

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor. T. Sadasivam

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



எப்படி உங்கள் தெம்பு எந்தமட்டும் ஓடியாட ஈடுகொடுக்கும்?

லைசின், தயமின் சத்துக்கள் அடங்கிய அஸ்ட்ரா ஒன்றுதான் தெம்பை நீடித்திருக்கச் செய்யும்!



...ஆடுங்கள் சளைக்காமல்!

அருந்திடுவீர் ஆரோக்கியத்தின் நயம்...அஸ்ட்ரா...
இந்துஸ்தான் லீவரின் படைப்பு! முன்னணி
வகிக்கும் உணவியல் ஆய்வு நிலையமொன்றிலே
மும்முரமான ஆராய்ச்சியின் பயனாக ஆக்கம் பெற்ற
புதுமையான ஆரோக்கிய பானம்.
புரதச் சத்தினை உருவாக்கும் லைசின், உள்மறைந்த
தெம்பை வெளிக்கொணரும் தயமின் — இரண்டும்
அடங்கியது அஸ்ட்ரா ஒன்றுதான். இவற்றின்
ஒருங்கிணைந்த பயன்: உன்னதமான சக்தி.
விருக்கென வந்திடும் வெளிப்பகட்டான சக்தி அல்ல.
மால்ட்டும் பாலும் வளப்பமாகச் செறிந்தது
அஸ்ட்ரா. நீரில் கலந்தாலே போதும்,
ஆரோக்கியம் ததும்பும் பானம் ஆயத்தம். எளிதில்
ஜீரணிக்கத் தக்கது, எனவே உடம்பில்
அப்படியே ஈர்த்துக்கொள்ளப்படும்.

வற்றாத சக்திக்கே அருந்துவீர் அஸ்ட்ரா.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லிண்டாஸ்-AST.9-140 TM